விலை : 20.00
பக்கங்கள் :இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 11 சனிக்கிழமை (27.08.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 252

## வலி.வடக்கு பகுதியில் விரைவில்

# காணிகள் விடுவிக்கப்படும்; சிலவற்றை சுவீகரிப்போம்

## யாழ்ப்பாண படைகளின் கட்டளைத் தளபதி அறிவிப்பு




**(யாழ்ப்பாணம்) — வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பொதுமக்களின் காணிகள் 2017ஆம் ஆண்டு இறுதிக்குள் பகுதி பகுதியாக விரைவில் விடுவிக்கப்படுவதுடன் ஏனைய பகுதிகள் பாதுகாப்பு தேவைக்காக படையினரால் சுவீகரிக்கப்படும் என யாழ்.மாவட்ட பாதுகாப்பு படைகளின் கட்டளைத் தளபதி மகேஷ் சேனநாயக்க தெரிவித்துள்ளார்.**

யாழ்.மாவட்டத்தில் இடம் பெயர்ந்து முகாம்களில் வாழும் காணி இல்லாத குடும்பங்களுக்கு காணி வழுங்குவதற்கான உறுதிவழங்கிய கடிதம்ஒன்றை கையளிக்கும் நிகழ்வு நேற்று கீரிமலை வீட்டுத்திட்டப் பகுதியில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

கடந்த 6 மாதங்களாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன் இணைந்து இந்த மீள்குடியேற்ற பிரச்சினைகளை தீர்ப்பதற்

23ஆம் பக்கம் பார்க்க....

## காணியும் வீடும் வழங்குவதாக உறுதிக் கடிதம் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள முகாம்களில் வசிக்கும் காணியற்ற குடும்பங்களுக்கு விரைவில் காணியும் வீடும் வழங்குவதாக உறுதிப்படுத்திய கடிதம் ஒன்று நேற்றைய தினம் வழங்கிவைக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்ப வைபவம்

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.வருகிறார் பான் கீ மூன்

### மனித உரிமை நிலைமைகள் கவனிக்கப்படும்




(நியூயோர்க்)

அடுத்த வாரம் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலர் பான் கீ மூன் யாழ்ப்பாணத்துக்கும் சென்று மனித உரிமை நிலைமைகளை ஆராயவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் நியூயோர்க்கில் இதனை தெரிவித்துள்ளார். ஆசிய நாடுகளுக்கான விஜயத்தினை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கவுள்ளார்.

முதலில் மியான்மர் செல்லும் அவர் அங்கிருந்து மறுநாள் 31ஆம் திகதி புதன்கிழமை இலங்கைக்கான

23ஆம் பக்கம் பார்க்க....

### ரூபா 60 இலட்சம் பெறுமதியான

## 30 கிலோ கேரள கஞ்சா மீட்பு

### மோட்டார் சைக்கிளுடன் நபரொருவர் கைது



## போர் வெற்றி நாயகர்களை காணாமல்போனோர் அலுவலகம் காட்டிக்கொடுக்கும்-மனோகர



(கொழும்பு)

காணாமற்போனோர் அலுவலகத்தை உருவாக்கும் சட்ட மூலம், நாட்டின் தேசிய பாதுகாப்

## அமைச்சர் ரிசாத்திடம் நேற்று விசாரணை

(கொழும்பு)

பான் கீ மூன் எதிர்வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கவுள்ளார்.

முதலில் மியான்மர் செல்லும் அவர் அங்கிருந்து மறுநாள் 31ஆம் திகதி புதன்கிழமை இலங்கைக்கான

23ஆம் பக்கம் பார்க்க....

## அமைச்சர் ரிசாத்திடம் நேற்று விசாரணை

(கொழும்பு)

அரசாங்கத்தின் வர்த்தக மற்றும வாணிபத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் நேற்று ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டு வரும் ஜனாதிபதி ஆணைக்குழுவினரால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் வர்த்தக மற்றும் வாணிபத்துறை அமைச்சராக இருந்த ரிசாட் பதியூதீன், சதொச என்ற கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்திற்கு தரமற்ற அரிசி இறக்குமதி செய்துள்ளதாக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்காகவே அவரிடம் வாக்குமூலம் பெற்றுக் கொள்ள

23ஆம் பக்கம் பார்க்க....

ரூபா 60 இலட்சம் பெறுமதியான

## 30 கிலோ கேரள கஞ்சா மீட்பு

மோட்டார் சைக்கிளுடன் நபரொருவர் கைது



23ஆம் பக்கம் பார்க்க....

## போர் வெற்றி நாயகர்களை காணாமல்போனோர் அலுவலகம் காட்டிக்கொடுக்கும்-மனோகர

(கொழும்பு)

காணாமற்போனோர் அலுவலகத்தை உருவாக்கும் சட்ட மூலம், நாட்டின் தேசிய பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் ஆபத்துக்கு உள்ளாக்குவது மாத்திரமன்றி, போர் நாயகர்களான இராணுவத்தினரையும் காட்டிக்கொடுப்பதாக அமையும் என்று ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டீ சில்வா தெரிவித்தார்.



23ஆம் பக்கம் பார்க்க....

## கைதி மாயம்! விசாரணை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த அரசியல் கைதி காணாமல் போனமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உடல் நலக்குறைவினால் கடந்த 14ஆம் திகதி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், மலசலகூடம் செல்வதாகக் கூறிச்சென்றிருந்த போதே அவர்

24ஆம் பக்கம் பார்க்க....

பொலிஸ் நிலையத்தில் ஒருவர் அடித்துக்கொலை

## 8 பொலிஸாரையும் கைது செய்து விசாரிக்க சட்டமா அதிபர் பணிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் வைத்து ஒருவர் அடித்து கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்ட 8 பொலிஸாரை கைது செய்து, வழக்கு தொடர சட்டமா அதிபர் திணைக்களம் பணித்துள்ளது. யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சார்பாக நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த பிரதான பொலிஸ பரிசோதகர் நேற்றைய தினம் இந்த தகவலை நீதிமன்றில் கூறியுள்ளார்.

திருட்டுக்குற்றச்சாட்டு தொடர்பான வழக்கு ஒன்று, மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி ஏ.யூட்சன் முன்னிலையில், கடந்த மாதம் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது, இந்த வழக்கின் சந்தேக நபர்களான 4 பேர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். அவர்கள் குறித்த கொலை சம்பவத்தை வெளிப்படுத்தி இருந்தோடு,

தமது வாக்கு மூலத்தில், வறிய நிலையிலுள்ள மாணவர்களுக்கு, 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம்

24ஆம் பக்கம் பார்க்க....

**உள்ளே...**

**கிராம சேவையாளர் போட்டிப் பரீட்சை - 2016 மாதிரி வினாத்தாள்**

வடக்கு பேருந்து சேவைகளிடையிலான

## இணைந்த நேர அட்டவணை செப்.7ஆம் திகதியிலிருந்து அமுல்

(யாழ்ப்பாணம்)

வட மாகாண பேருந்து சேவைகளுக்கிடையிலான இணைந்த நேர அட்டவணை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதியில் இருந்து அமுல்படுத்தப்படவுள்ளதாக வடமாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் அறிவித்துள்ளார்.

மேலும் போக்குவரத்து ஒழுங்கு முறைகளை மீறுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும எனவும் எச்சரித்துள்ளார்.

வடக்கு மாகாண போக்குவரத்து நியதிச்சட்டம், இணைந்த நேர அட்டவணை அமுலாக்கம் மற்றும் போக்குவரத்து ஒழுங்கு தொடர்

24ஆம் பக்கம் பார்க்க....

## நீர்க்காகம் கூட்டுப் பயிற்சி

(கொழும்பு)

இலங்கை படைத்தரப்பு ஆண்டு தோறும் நடத்தும் நீர்க்காகம் கூட்டுப் பயிற்சி கொக்கிளாய் பகுதியில் அடுத்த மாதம் 3ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இதில் 49 வெளிநாட்டுப் படை

24ஆம் பக்கம் பார்க்க....

## கார்-ஹயஸ் விபத்து; இரு இளைஞர்கள் பலி

9 பேர் காயம்





(கோப்பாய்)

சிலாபம் - புத்தளம் பாதையின்

23ஆம் பக்கம் பார்க்க....

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

## சிறுவர் இல்ல மேற்பார்வையாளர்கள் தேவை

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்திற்கு பெண் மேற்பார்வை யாளர்கள் (Matron / Home Mothers) தேவைப்படுகின்றனர். க.பொ.த உயர்தரம் கல்வி கற்றவராகவும் 30 வயது - 60 வயதுக்கு இடைப்பட்டவராகவும் இல்லத்தில் தங்கியிருந்து சேவையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும். இல்லப்பிள்ளைகளின் பராமரிப்பு, உளவியல் சம்பந்தமான பயிற்சி நெறிகள், பின்பற்றியவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். விண்ணப்பதாரி சுயவிபரக்கோவையுடன் விண்ணப்பத்தை பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டிய கடைசித்திகதி 04.09.2016.

அனுப்ப வேண்டிய முகவரி :- தலைவர், துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை. கடித உறையின் இடதுபக்க மூலையில் இல்லமேற்பார்வையாளர் எனக்குறிப்பிட வேண்டும்.

**தலைவர்**
**துர்க்காபுரம் மகளிர் இல்லம், தெல்லிப்பழை.**

(சி-5554)


# நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு மேலதிக புகையிரத சேவை

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 31-ம் திகதி இடம்பெறவுள்ள நல்லூர் தேர் உற்சவத்தை முன்னிட்டு பயணிகளின் நலன்கருதி கல்கிசையில் இருந்து காலை 5.10க்கு புறப்பட்டு, கொழும்பு கோட்டையில் இருந்து காலை 5.45க்கு புறப்படும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி புகையிரதத்திலும், காங்கேசன்துறையிலிருந்து பி.ப 1.15க்கு புறப்பட்டு பிற்பகல் 1.45க்கு யாழ்ப்பாணத்திலிருந்தும் புறப்படும் குளிரூட்டப்பட்ட நகர்சேர் கடுகதி புகையிரதத்திலும் எதிர்வரும் 30, 31,01 ஆகிய திகதிகளில் மேலதிகமாக குளிரூட்டப்பட்ட ஒரு பெட்டி இணைக்கப்பட்டுள்ளது.

இப் பெட்டிக்கான ஆசன ஒதுக்கீடுகள் தற்பொழுது நடைபெறுகின்றது. எனவே நல்லூர் கந்தன் தேருக்கு வருகைதரும் பயணிகள் இச்சேவையின் மூலம் பயன் பெற்றுக்கொள்ளலாம் என யாழ்.பிரதான புகையிரத நிலைய அதிபர் தி.பிரதீபன் அறிவித்துள்ளார். (செ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திரு.நடராசபிள்ளை இராசகுமாரன்**

(நிர்வாக கிராம உத்தியோகத்தர், பிரதேச செயலகம் தென்மராட்சி)

நாவற்காடு வரணி (J/338) பிரிவில் கிராம உத்தியோகத்தராக கடமையாற்றி தற்போது நிர்வாக கிராம உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் சந்தர்ப்பத்தில் மேலும் உயர்வுகள் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துவதோடு 27.08.2016 இன்று சனிக்கிழமை இடம்பெறும் சேவை நயப்பு விழாவும் சிறப்புடன் நடைபெற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துவோர் :*
**நாவற்காடு வரணி வாழ் மக்கள்**

(5735)

## வேலையாள் தேவை

நல்லூரடியில் இயங்கும் றெஜிபோம் விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை. (மாநகர சபை எல்லைக்குட்பட்ட பெண்கள் விரும்பத்தக்கது.)

தொடர்புகளுக்கு :-
**077 930 9738**

(5736)

## English Hall

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான

**Basic English with Grammar**

வகுப்புக்கள் ஆரம்பம் :- 03.09.2016 சனிக்கிழமை
:- காலை 9.00 மணி
பதிவுகளுக்கு :- 077 3144 527

(5710)

## விசேட விலைக்கழிவு

**SAMSUNG GALAXY J7,J5,J2,J1,ACE**

ஆகிய போன்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும். குறுகிய நேரத்தில் குறைந்த கட்டணத்தில் UNLOCK செய்து கொடுக்கப்படும்.



**வணக்கம் போன் சிற்றி**

இல.7, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு :- 077 2487 847


# மரண அறிவித்தல்



(5739)

## திருமதி இராஜேந்திரா ஜெயலட்சுமி

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை இல.17/4, ஐயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேந்திரா ஜெயலட்சுமி நேற்று முன்தினம் (25.08.2016) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசிதம்பரம் - செல்லக்கண்டு தம்பதிகளின் அன்பு மருமகளும், இராஜேந்திரா அவர்களின் பாசமிகு மனைவியும், தனபாக்கியலட்சுமி (மணி அக்கா), காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை, சறோஜினிதேவி (சறோ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவமனோகரி, ராஜ்குமார் (Jaffna Hardware, Jaffna Transport)ஆகியோரின் அன்புத் தாயாரும், தருமராசா (கஜபதி போட்டோ - வவுனியா), சுபாஜினி (ஜெகன் பார்மஸி -யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், பைரவி, தனுராஜ், சானுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மோகனதாஸ், வாசுகி, பகீரதி ஆகியோரின் சின்னம்மாவும், வாகீசன், சிவகாமி, பகீரதன், தர்சிகா ஆகியோரின் சின்னப் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.08.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 17/4, ஐயனார் கோவிலடி,**
**வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்**

# பம்பலப்பிட்டி வர்த்தகர் கொலை குறித்து புதிய கோணத்தில் பொலிஸார் விசாரணை



(கொழும்பு)

பம்பலப்பிட்டி கோடீஸ்வர வர்த்தகர் கொலை தொடர்பில் பொலிஸாரின் விசாரணை வேறு கோணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேகாலை பிரதேசத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற தொலைபேசி அழைப்பிற்கமைய இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வரும் பொலிஸ் குழுக்களின் அவதானம் திரும்பியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தக் கொலை தொடர்பில் வெள்ளவத்தை மற்றும் தெஹிவளையைச் சேர்ந்த இரண்டு வர்த்தகர்கள் மீதும் பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும், குறித்த வர்த்தகர்கள் இருவரிடமும் கொலை செய்யப்பட்ட வர்த்தகர் 400 இலட்சம் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபட்டிருப்பதாக நேற்று முன்தினம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், இந்த கொலை தொடர்பில் முன்னெடுத்து வரும் விசாரணை அறிக்கைகளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர் சாகல ரத்னாயக்கவும் கோரியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# சந்திரிகாவும் கட்சியிலிருந்து விலகித்திரும்பி வந்தவர்தான்

## முன்னாள் எம்.பி.சாந்த சுட்டிக்காட்டு



(கொழும்பு)

குருநாகலில் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது ஆண்டு விழா மாநாட்டின் போது கட்சியின்தலைவர்பல கொள்கைகளை வெளியிட்டு விசேட உரையை நிகழ்த்த உள்ளதாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார்.

வரலாற்றில் மிகப் பெரிய கூட்டத்தை குருநாகலில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து விலகி தனிக்கட்சி ஆரம்பிக்க போகும் நபர்கள் தமது தலையில் தாமே மண்ணை வாரிபோட்டுக்கொண்டது போன்ற நிலைமை ஏற்படும்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒரு முறை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறியதுடன் மீண்டும் திரும்பி வர நேரிட்டது.

அனைவருக்கும் கட்சிக்குள் பிரச்சினைகள் இருக்கின்றன. ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்த எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என சாந்த பண்டார தெரிவித்தார்.

அதேவேளை இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றிய தென் மாகாண சபை உறுப்பினர் பசத யாப்பா, ஜனாதிபதித் தேர்தலில் இருந்தவர்களை விட கட்சியை சேர்ந்த அதிகளவானோர் தற்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவு வழங்கியுள்ளனர்.

ஆரம்பத்தில் ஜனாதிபதி மீது அவர்களுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. எனினும் நாட்டிற்குள் ஏற்பட்டுள்ள மாற்றம்காரணமாக இந்த நிலைமை மாறியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# நாடாளுமன்றத்தை அவமானப்படுத்தும் அமைச்சர்கள்

## சபாநாயகர் அதிருப்தி

(கொழும்பு)

**நாடாளுமன்றில் உறுப்பினர்கள் எழுப்பும் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்காது நாடாளுமன்றத்தை அவமரியாதை செய்வதாக சபாநாயகர் கரு ஜெயசூரிய அதிருப்தி வெளியிட்டுள்ளார்.**



நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அவர் இவ்வாறு அதிருப்தி வெளியிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களால் சபையில் எழுப்பும் கேள்விகளுக்கு, அமைச்சர்கள் பதிலளிக்காமை குறித்து பிரதமர் கவனம் செலுத்தி வருகின்றார்.

இவ்வாறு அமைச்சர்கள் பதிலளிக்காமை நாடாளுமன்றினை அவமரியாதை செய்வதாகவே அமையும்.

கேட்கப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் அவையில் பிரசன்னமாகாமை ஓர் பாதகமான நிலைமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்க அமைச்சர்கள், பிரதிநிதி அமைச்சர்கள் அவையில் பிரசன்னமாகி இருக்கவில்லை.

இது தொடர்பில் அவைத் தலைவரே பதிலளித்திருந்தார். இந்த நிலைமை குறித்து ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க அதிருப்தி வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உதய கம்மன்பில எம்.பிக்கு எதிரான வழக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மற்றும் சிட்னி ஜெயசிங்க ஆகியோரின் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அவுஸ்திரேலிய பிரஜையான பிரைய்ன் சாதீக்கின் 110 மில்லியன் ரூபா பெறுமதியான பங்குப்பத்திரங்களின் போலியான சட்ட அங்கீகார ஆவணத்தை தயாரித்து பெற்றமை தொடர்பிலான விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில மற்றும் சிட்னி ஜெயசிங்க ஆகியோர், 1995 ஆம் ஆண்டு போலியான அங்கீகார சட்ட ஆவணத்தை சமர்ப்பித்துள்ளதாக நிதி மோசடி தவிர்ப்பு பொலிஸார் நேற்று நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையிலேயே இருவரினதும் வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(இ-7)

# வடக்கு-தெற்கு இணையவே நல்லிணக்கம் உருவாக்கம்

## அங்கஜன் எம்.பி. தெரிவிப்பு

கடந்த ஆட்சிக்காலத்தில் வடக்கையும் தெற்கையும் இணைப்பதற்கான பாலங்களை அமைத்தார்கள். ஆனால் இந்த அரசாங்கத்தினால், இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான மனரீதியான பாலத்தினை அமைக்கும் செயற்பாட்டினை முன்னெடுத்துள்ளோம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய அங்கஜன், "தேசிய கட்சி என்றாலே, அதுஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தான் என, முன்னொரு காலத்தில், தமிழ் மக்களால் இனங்காணப்பட்டிருந்தது. அதைத் தாண்டி, எமது கட்சி என்ற ரீதியில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது, தமிழ் மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தியுள்ளது. இம்முறை, 65ஆம் ஆண்டு கட்சிக் கொண்டாட்டங்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் இருந்து, பல ஆதரவாளர்கள் கலந்து கொள்வார்கள்" என்று அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# வழக்கு தொடர்ந்தாலும் பௌத்த மதத்தை பாதுகாக்கும் போராட்டம் கைவிடப்படாது

## ஞானசார தேரர் அறிவிப்பு



வழக்குத் தொடர்ந்தாலும் பௌத்த மதத்தை பாதுகாக்கும் போராட்டம் கைவிடப்படாது என பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

தற்போது தென்கொரியாவிற்கு விஜயம் செய்துள்ள ஞானசார தேரர் கொழும்பு பத்திரிகையொன்றுக்கு தொலைபேசி மூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

வழக்கு மேல் வழக்கு தொடர்ந்தாலும் பௌத்த மதத்தையும் நாட்டையும் இனத்தையும் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்து ஒரு நொடியும் விலகிக்கொள்ளப் போவதில்லை. எமக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டால் விசாரணை நடத்தப்படுகின்றது.

எனினும் பௌத்த மதத்திற்கு எதிராக அடிப்படைவாதிகளினால் மேற்கொள்ளப்படும் நெருக்கடிகள் தொடர்பில் பொலிஸாரோ அல்லது வேறு தரப்பினரோ கண்டு கொள்வதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 536 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல்

உணவு பாதுகாப்பு வாரத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மூலம் நுகர்வுக்கு தகுதியில்லாத உணவுகளை விற்பனை செய்த 536 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமான உணவு பாதுகாப்பு வாரத்தின் நான்காவது நாளான நேற்று முன்தினம் வரை 12 ஆயிரத்து 275 வர்த்தக நிலையங்கள் சோதனை செய்யப்பட்டுள்ளன. இந்த சுற்றிவளைப்பில் கண்டுபிடிக்கப்பட்ட மனித நுகர்வுக்கு தகுதியற்ற 10 ஆயிரத்து 824 வகையான உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டுள்ளன.

உணவு பாதுகாப்பு வாரம் நாளை மறுதினம் 29 ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்படவுள்ளதுடன் 1800 பொதுச் சுகாதார பரிசோதகர்கள் நாடு பூராகவும் இதற்காக இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# போட்டியை மாற்றக்கூடிய டில்ஷானை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது

## அர்ஜுன ரணதுங்க

திலகரட்ன டில்ஷான் போட்டியை மாற்றிய மைக்கக்கூடிய வீரர் என துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக டில்ஷான் அறிவித்த பொழுதே, அவர் இலங்கை கிரிக்கெட்டிற்கு ஆற்றிய பணியை பாராட்டும் வகையில் அமைச்சர் இக்கருத்தினை வெளியிட்டார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில், திலகரட்ன டில்ஷான் விளையாட்டு வீரர் என்ற வகையில் இந்நாட்டிற்கு ஆற்றிய சேவையை நாம் ஒருபோதும் மறக்கக் கூடாது.

மத்திய வரிசை துடுப்பாட்டக்காரராக தன்னுடைய விளையாட்டு வாழ்வை ஆரம்பித்தார். அவரொரு சிறந்த பந்து காப்பாளர். அவர் ஆரம்ப துடுப்பாட்ட வீரராகவும் விளையாடினார்.

விளையாட்டு வீரர் என்ற வகையில் ஆரம்ப துடுப்பாட்ட வீரராக விளையாடுவதே மிகவும் கடினமான செயலாகும். அத்தருணத்தில அவர் சிறந்த ஆரம்ப துடுப்பாட்ட வீரராக செயற்பட்டார்.

இவ்வாறான ஒரு செயற்பாட்டினை இணங்கண்டு கொள்வதல்ல வெற்றி, மாறாக இத்துடுப்பாட்ட முறையின் மூலமாக அதிகளவு ஓட்டங்களை பெற்றுக்கொள்ள இயலுமாக விருந்ததா என்பதே முக்கியமாகும்.

இக்கோணத்தில் நோக்கும் வகையில் டில்ஷான் விசேட திறமையை வெளிப்படுத்தியுள்ளார். பந்து வீசும் போது அவர் மிகவும் அறிவுபூர்வமாக பந்து வீசுவார்.

அவர் ஒரு சிறந்த துடுப்பாட்ட வீரர், சிறந்த பந்து காப்பாளராகவும் செயற்பட்டார். எங்கள் நாட்டிற்கு இவ்வாறான வீரர்கள் சொத்துக்கள் ஆவர்.

டில்ஷான் அணிக்கு ஆற்றிய சேவைகளை வெறும் வார்த்தைகளால் கூறவியலாது. அவராற்றிய சேவையை நான் என்றும் பாராட்டுவேன்.

இவர் எதிர்காலத்தில் கிரிக்கெட் பயிற்றுவிப்பாளராகவோ அல்லது முகாமையாளராகவோ எங்கள் நாட்டு கிரிக்கெட்டிற்கு தன்னுடைய சேவையை தொடருவார் என எதிர்பார்க்கின்றேன் என கூறியுள்ளார். (க)



# ஆஸி - இலங்கை போட்டி டிக்கெட்டுக்கள் இல்லை!

அவுஸ்திரேலிய மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் இடம்பெறவுள்ள மூன்றாவது ஒருநாள் போட்டிக்கான டிக்கெட்டுகள் யாவும் விற்றுத் தீர்ந்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை தம்புள்ளையில் இடம்பெறவுள்ளது.



அதேவேளை இரு அணிகளுக்கும் இடையில் கொழும்பில் இடம்பெற உள்ள இருபது - 20 போட்டிக்கான அனைத்து டிக்கெட்டுக்களும் விற்றுத் தீர்க்கப்பட்டுவிட்டதாக இலங்கை கிரிக்கட் நிறுவனம் கூறியுள்ளது. (க)

# இந்திய - மேற்கிந்திய தீவுகள் இருபது - 20 போட்டி இன்று

இந்திய - மேற்கிந்திய அணிகள் மோதும் ரி20 ஓவர் போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி மேற்கிந்திய தீவுகள் சுற்றுப் பயணம் செய்து 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இத்தொடரை இந்தியா 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது.

டெஸ்ட் தொடர் நடந்து கொண்டிருந்த போது இந்திய - மேற்கிந்திய தீவுகள் அணிகள மோதும் 2 போட்டிகள் கொண்ட ரி20 ஓவர் தொடரை அமெரிக்காவில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதன்படி முதல் இருபது-20 ஓவர் போட்டி இன்று (27ஆம் திகதி). 2-வது போட்டி 28-ந் திகதியும் அமெரிக்காவில் உள்ள லாடெர்ஹிலில் நடக்கிறது. இலங்கை நேரப்படி இரவு 7.30 மணிக்கு போட்டி ஆரம்பமாகிறது. (க)



# திசர பெரேராவுக்கு அபராதம் மிட்ச் ஸ்டார்குக்கு எச்சரிக்கை

இலங்கை அணியின் பந்துவீச்சாளர் திசர பெரேராவுக்கு போட்டி கட்டணத்தில் 15 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் ஆஸி அணிக்கெதிராக இடம்பெற்ற இரண்டாவது ஒருநாள் போட்டியின்போது வோர்னரை ஆட்டமிழக்க செய்த பின்னர் சர்வதேச கிரிக்கெட் சபையின் சட்டத்தை மீறி செயற்பட்ட தாக கூறி இவருக்கு போட்டி கட்டணத்தில் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.





இந்நிலையில் ஆஸி அணியின் மிச்சல் ஸ்டார்கிற்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இரண்டாவது ஒருநாள் போட்டியின் போது ஓவர் நிறைவடைந்த பின்னர் சண்டிமல் மீது பந்தை வீசி எறிந்த குற்றச்சாட்டிற்காக குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க)

# சர்வதேச பட்மிண்டன் தரவரிசை பட்டியல் இந்தியாவின் சாய்னா நேவால் சறுக்கல்!

உலக பட்மிண்டன் தரவரிசை பட்டியலில இந்திய வீராங்கனை சாய்னா நேவால் பெண்கள் ஒற்றையர் தர வரிசையில் 5-வது இடத்தில் இருந்து 9-வது இடத்துக்கு சரிந்துள்ளார்.

உலக பட்மிண்டன் வீர வீராங்கனைகளின் தரவரிசைப் பட்டியலை உலக பட்மிண்டன் சம்மேளனம் வெளியிட்டுள்ளது.

இதன்படி ரியோ ஒலிம்பிக் போட்டியில் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வி கண்ட இந்திய வீராங்கனை சாய்னா நேவால் பெண்கள் ஒற்றையர் தரவரிசையில் 5-வது இடத்தில் இருந்து 9-வது இடத்துக்கு சரிந்துள்ளார்.

ரியோ ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை பி.வி.சிந்து 10-வது இடத்தில் நீடிக்கிறார். இந்திய வீரர்கள ஸ்ரீகாந்த் ஒரு இடம் முன்னேறி ஆண்கள் ஒற்றையர் தரவரிசையில் 10-வது இடத்தையும், அஜய் ஜெயராம் ஒரு இடம் ஏற்றம் கண்டு 22-வது இடத்தையும் பெற்றுள்ளனர்.



பெண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜுவாலா கட்டா-அஸ்வினி இணை 4 இடங்கள் பின்தங்கி 26-வது இடத்தை பெற்றுள்ளது. ஆண்கள் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் மனு அட்ரி-சுமீத் ரெட்டி ஜோடி 21-வது இடத்தில் தொடருகிறது. (க)


# 3ஆவது ஒருநாள் போட்டிக்கான இலங்கை குழாம் அறிவிப்பு

ஆஸி அணிக்கெதிரான 3 ஆவது ஒருநாள் போட்டியில் பங்கேற்கவுள்ள 16 பேர் கொண்ட இலங்கை அணியின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி முதல் போட்டியில் விளையாடிய மிலிந்த சிறிவர்தன அணிக்குழாமிலிருந்து நீக்கப்பட்டு அவரது இடத்திற்கு புதிய இளம் இடதுகை துடுப்பாட்ட வீரரும், வலதுகை மிதவேக பந்துவீச்சாளருமான லஹிரு குமார அணியில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளார்.

இலங்கை மற்றும் ஆஸி அணிகளுக்கிடையிலான மூன்றாவது ஒருநாள் போட்டி நாளை 28ஆம் திகதி ரங்கிரி தம்புள்ளை சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் பகலிரவு போட்டியாக இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த போட்டி இலங்கை அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் திலகரட்ன டில்சானின் இறுதி ஒருநாள் போட்டியென்பது குறிப்பிடத்தக்கது.



மூன்றாவது போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட அணிக்குழாம் பின்வருமாறு

அஞ்சலோ மத்தியூஸ் (தலைவர்) தினேஸ் சண்டிமல் (உப தலைவர்) திலகரட்ன டில்சான், குசல் ஜனித்பெரேரா, குசல்மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா, அஞ்சலோ பெரேரா, அவிஸ்க பெர்னாண்டோ, தனுஷ்க குணதிலக, சுரங்க லக்மால், திசர பெரேரா, டில்ருவன்பெரேரா, சீகுகே பிரசன்ன, லக்ஷான் சந்தகன், அமில அபோன்சோ, லஹிரு குமார. (க)

# அமெரிக்காவை கலக்கிவரும் இந்திய கிரிக்கெட் வீரர்கள்

அமெரிக்கா சென்றுள்ள இந்திய அணி வீரர்கள் அங்குள்ள பல்வேறு இடங்களுக்கு சென்று வருகின்றனர்.

இந்திய-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையேயான இரண்டு இருபது-20 போட்டிகள் அமெரிக்காவில் நடைபெற உள்ளது.

இதற்காக அமெரிக்கா சென்றுள்ள இந்திய வீரர்கள், அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளுக்கு சென்று வருகின்றனர்.

அதுபோல இந்திய வீரர்களான அஷ்வின், தவான் மற்றும் புவனேஷ்குமார் ஆகியோர் அங்குள்ள பிரபல கூடைப்பந்து மியாமி ஹீட்ஸ்



என் பி ஏ கிளப்பிற்கு சென்று சிறிது நேரம் விளையாடினார்கள். (க)

# இலங்கையில் 16,000 பேர் காணாமற்போயுள்ளனர்

## தாய்மார்களின் கண்ணீரைப் போக்குவோம்; அமைச்சர் மங்கள சமரவீர உறுதியளிப்பு

(கொழும்பு)

**இலங்கையில் சுமார் 16 ஆயிரம் பேர் காணாமற் போயிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார். காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் ஒன்றை அமைப்பது தொடர்பில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் விளக்க மளிக்கும் போது அமைச்சர் மங்கள சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.**

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், காணாமற் போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளின் அடிப்படையில் இலங்கையில் 16 ஆயிரத்து 84 பேர் காணாமற் போயுள்ளனர்.

எனினும் மக்ஸ்வெல் பரணகம ஆணைக்குழு தனது விசாரணைகளின் பின்னர் இந்த எண்ணிக்கை 16 ஆயிரம் என்பதாக உறுதிப்படுத்தியுள்ளது.

காணாமற்போனவர்களுடைய தாய்மார்களுக்கு நியாயத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காக நரகத்துக்கும் செல்லத் தயார் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இதே நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.



எனினும் நாங்கள் நரகத்துக்கோ, ஜெனிவாவுக்கோ செல்லாமல் அந்தத் தாய்மாரின் கண்ணீருக்கு பதிலொன்றைப் பெற்றுக் கொடுக்க முயற்சி செய்துள்ளோம்.

இது பெரும் வெற்றியாகும்.

காணாமற் போனவர்கள் தொடர்பில் அத்தாட்சியொன்றை வழங்குவதன் ஊடாக இலங்கையில் இதுவரை காலமும் பல்வேறு குடும்பங்களில் நிலவிய காணி பங்கீடு, திருமண உறவுகள் போன்றவற்றிலான சட்டச் சிக்கல்களை இனி வரும் காலங்களில் இலகுவாகத் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் அமைச்சர் மங்கள சமரவீர மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் திரு. மாணிக்கம் சண்முகராஜா

(வில்லூத்தகடு இராஜன் ) இராஜன் மினிபஸ் உரிமையாளர்



தோற்றம் 24.05.1955 மறைவு 08.08.2015

உலக வாழ்வு நிலையில்லாதது
என்பதையாமறிவோம்
ஆயினும் எமையெல்லாம் தவிக்கவிட்டு
இத்தனை விரைவாகப் பிரிந்து விட்டாலும்
ஓராண்டு நிறைவில் ஆறாத மனக்கவலை
உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை
இறைஞ்சுகின்றோம்.

(5592)

82/17, 3 ம் ஒழுங்கை
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


## 26.08.2016 வெளிவந்த கிராம சேவையாளர் போட்டிப்பரீட்சை - 2016 விடைகள்

தொகுப்பு:-P.Kamalthasan B.A (Cey), MEd (Hons), M.A in Eco PGDE PGDM SPL Trd Com SLPS III

| | | |
|---|---|---|
| 1) 2 | 11) 2 | 21) அல்பரட் மார்ஷல் |
| 2)2 | 12) 1 | 22) பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு |
| 3) 4 | 13)4 | 23) மேற்கிந்திய தீவு |
| 4) 2 | 14) 1 | 24) ஜெயந்தி குரு உடும்பால |
| 5) 1 | 15) 3 | 25) மரியானா ஆழி |
| 6) 4 | 16) 3 | 26) டென்மார்க் |
| 7) 2 | 17) 4 | 27) உசைன் போல்ட் |
| 8) 4 | 18) 1 | 28) 9 ஆணைக் குழு |
| 9) 4 | 19) 4 | 29) ஜம்மு காஷ்மீர் |
| 10) 1 | 20)2 | 30). மார்க் சுகர்பேக் |

| | | | |
|---|---|---|---|
| 31) 1 | 41) 2 | 51) 5 | |
| 32) 2 | 42) 3 | 52)3 | |
| 33) 2 | 43) 4 | 53) 1 | |
| 34) 2 | 44) 1 | 54) 3 | (3+7=10+7=17) |
| 35) 4 | 45) 3 | 55) 1 | (6×3=18, 5×2=10 → 10+18÷2=14) |
| 36) 3 பேனைகள் | 46) 2 | 56) 2 | (7+7+2=16) |
| 37) 23 நாட்கள் | 47) 1 | 57) 1 | |
| 38) 24 பேர் | 48) 2 | 58) 2 | |
| 39) 10 பேர் | 49) 3 | 59) 3 | |
| 40) 7 பேர் | 50) 1 | 60) 4 | |

தொடர்பு-வலம்புரி கல்விப்பிரிவு தொ.பே:-076 6363 378

## இராசி பலன்

27.08.2016
(ஆவணி 11, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
தசமி முன்னிரவு 7.06 மணிவரை
மிருகசீரிடம் பிற்பகல் 1.02மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.35-10.35 மணிவரை
நல்லூர்க்கந்தன் கைலாச வாகனம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | சந் |
| கேது | கிரகநிலை | | |
| | சந்திராஷ்டமம் விசாகம், அனுசம் | | சூரி, புத ராகு |
| | சனி செவ் | | குரு சுக் |

**மேடம்** சவால்களை சமாளிக்கும் நாள், சகோதரர்களின் ஒத்துழைப்பால் நல்ல காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், பகையொன்று நட்பாகலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**இடபம்** கௌரவமான நாள், வருமானம் அதிகரிக்கும், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மிதுனம்** பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், ஒரு வகையில் சிக்கனமாக இருந்தாலும் மற்றொரு வகையில் செலவு ஏற்படலாம்.

**கடகம்** குறைந்த செலவில் முடியுமென நினைத்த காரியம் அதிகமாக செலவாகலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், வேலைச்சுமை கூடும்.

**சிம்மம்** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, பொதுவாழ்வில் புகழ் கூடும் நாள், போசன சுகமுண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி** விடியும் பொழுதே நல்ல தகவல்கள் வந்து சேரலாம், புதிய திட்டங்கள் தீட்டி தொழிலில் ஆதாயம் காண முற்படுவீர்கள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** தொழில் ரீதியாக சிலர் உங்களிடம் உதவி கேட்டு வரலாம், பொருளாதார நிலை உயரும், வெளியூர்ப் பயணங்களால் ஆதாயமுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்** எடுத்த காரியத்தை முடிப்பதில் கொஞ்சம் அலைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம்.

**தனுசு** நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மகரம்** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், செய்தொழிலில் மேன்மையுண்டு, வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**கும்பம்** பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், நட்பு வட்டம் விரிவடையும் நாள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள்.

**மீனம்** உறவினர்கள் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பயணங்களால் பலனுண்டு.

# சைவத்தமிழ் மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான சைவ மகா சபையின் அவசரக் கலந்துரையாடல்

(யாழப்பாணம்)

சைவத்தமிழ் மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்றைய தினம் பிற்பகல் 2.30 மணிக்கு கொக்குவிலில் அமைந்துள்ள சைவ மகாசபை அலுவலகத்தில் நடைபெறும்.

இது தொடர்பாக சைவ மகா சபையினர் அனுப்பியுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அண்மைக் காலமாக எமது சிவபூமியில் தொன்மைமிகு ஈச்சரங்கள் உள்ளிட்ட சைவ ஆலய வளாகங்களிலும், சைவர்கள் மிகப் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளிலும் வேற்றுமதச் சின்னங்கள், வழிபாட்டுத் தலங்கள் நிறுவப்பட்டு வருகின்ற வேதனையான விடயத்தை நாம் யாவரும் அறிந்துள்ளோம்.

எனவே எமது புனித மரபுரிமைகளையும், பண்பாட்டு அடையாளங்களையும் பாதுகாப்பதற்கு சைவத்தமிழர்கள் எடுக்கக் கூடிய தொடர் நடவடிக்கைகளை ஆராய்ந்து நல்லூர் திருவிழா நாட்களில் மக்களை தெளிவுபடுத்தும் செயற்றிட்டங்களை சைவ மகாசபை ஏனைய சைவ அமைப்புக்களுடன் இணைந்து முன்னெடுக்கவுள்ளது.

இது தொடர்பாக அமைப்பு ரீதியாக பிரதி நிதிகள் கலந்து கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொள்ளுமாறும் எமது எதிர்கால சந்ததிக்கு வரலாற்றுச் சான்றுகளை பாதுகாத்து வழங்கும் இச்செயற்றிட்டத்தில் பங்கெடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விபரங்களை சி.காண்டீபன் (077 087 0414) என்பவருடன் தொடர்பினை ஏற்படுத்தி பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9-60)




# நாட்டியாஞ்சலி நிகழ்வு

யாழ். இந்தியத்துணைத் தூதரகமானது இந்தியக் கலாசார உறவுகளுக்கான பேராயம் மற்றும் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கும் நாட்டியாஞ்சலி நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நெடுந்தீவு தேவா கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (இ-3)

# பரத நாட்டிய பயிற்சிப் பட்டறை

யாழ்.இந்தியத் துணைத்தூதரகமானது இந்தியக் கலாசார உறவுகளுக்கான பேராயம் மற்றும் வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கும் ஸ்ரீமதி ராதிகா சுராஜித்தின் பரத நாட்டிய பயிற்சிப் பட்டறை எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் யாழ். பொதுநூலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (இ-3)

# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை யாழ். மாவட்டத்தில் உள்ள யாழ்ப்பாண தொழிற்பயிற்சி நிலையத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கற்கை நெறியினை பகுதிநேரமாக ஆரம்பிக்கவுள்ளது.

இக் கற்கைநெறிகளை கற்க விரும்புபவர்கள் தங்கள் பதிவுகளை அலுவலக நேரத்தில் மாவட்ட அலுவலகம், முதலாம் மாடி, வீரசிங்கம் மண்டபம், இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எதிர்வரும் 31.08.2016 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இ

# மதுசாரம் மற்றும் புகையிலை பாவனைக்கெதிரான கருத்தரங்கு





மதுசாரம் மற்றும் புகையிலை பாவனைக்கு எதிரான கருத்தரங்கு ஒன்று பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் இத. ஜெயசீலன் தலைமையில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் ஜனாதிபதி செயலக அதிகாரி பருத்தித்துறை, சுகாதாரவைத்திய அதிகாரிஎஸ்.செந்தூரன், பருத்தித்துறைபொலிஸ் நிலையபொறுப்பதிகாரிநுவான் பி.டந்தநாராயணா, மது வரித் திணைக்கள உதவி ஆணையாளர் சோதிநாதன் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள்,பொலிஸார்,மதுவரித்திணைக்களத்தினர், கடற்படையினர், சுகாதாரப் பகுதியினர், மாணவர்கள், சமுர்த்தி பயனாளிகள், பொதுமக்கள், வர்த்தகர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

புகைப்பொருள் விற்பனை செய்வதில்லை என உறுதிமொழி அளிக்கப்பட்ட வர்த்தகர்கள் ஒரு தொகுதியினருக்கு நற்சான்றிதழும் இதன் போது வழங்கப்பட்டது. மேலும் போதைப் பொருள் பயன்பாட்டால் ஏற்படும் விளைவுகள் தொடர்பான நாடகமும் இடம்பெற்றது. (இ-60)

# இறுவெட்டுக்களின் அறிமுகமும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தெய்வீக சேவைத்திட்டத்தின் கீழ் இந்து ஆலயங்கள் மற்றும் வட மாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து இந்து மாணவர்கள்சேவாலயத்தினரது முயற்சியினால் ஒலிப்பதிவு செய்யப்பட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியீடு செய்து வைக்கப்பட்ட தெய்வீக இசைப் பாடல்கள் அடங்கிய இறுவெட்டுக்களின் அறிமுகம் மற்றும் கலைஞர்கள் கௌரவிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணிக்கு நல்லூர் மயிலூரான் மண்டபத்தில் இடம் பெறும்.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன், சிறைச்சாலைகள். மறுசீரமைப்பு. மீள்குடியேற்றம் புனர் நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் வே.பிறேமச்சந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வட மாகாணக் கல்வித் திணைக்கள உதவிக் கல்விப் பணிப்பாளர்திருமதி மதிவாணி விக்னராஜா, இந்து மாணவர் சேவாலயத்தலைவர் ஹ.ரமணீதரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# அரும்பொருட்சேகரிப்புக்காக புராதன சின்னங்கள் சேகரிப்பு

யாழ்.மாவட்ட செயலகத்தில் காட்சிப்படுத்தப்படவுள்ள ஆவணப்பெட்டகத்திற்கு அரும்பொருட் சேகரிப்பிற்காக மக்களிடமுள்ள அரும்பொருட்கள், புராதன சின்னங்கள்,பண்டைய காலத்து நாணயங்கள், திருவுருவச் சிலைகள்,பழைமை வாய்ந்த நூல்கள் மற்றும் எம் பழைமையான கைவினைப்பொருட்கள், பித்தளை செப்புப் பாத்திரங்கள், உலோகப் பொருட்கள் மர வேலைப்பாடாலான பொருட்கள் ஆகியவற்றினை பேணிப் பாதுகாத்து எம் பண்பாட்டின் இருப்பிற்காக கலாசாரப் பிரிவிற்கு வழங்கி உதவுமாறு யாழ்ப்பாண மாவட்ட கலை, கலாசாரப் பேரவைத்தலைவரும் யாழ்.மாவட்ட அரச அதிபருமாகிய நா.வேதநாயகன் கேட்டுள்ளார். (இ-3)



வரலாற்றுச் சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த இரதோற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மிகவும் பக்திபூர்வமாக இடம்பெற்றது. அதிகாலையில் ஆரம்பமாகிய விசேட பூசைகளைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணிக்கு வசந்தமண்டப பூசை இடம்பெற்றது. தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் இரதமேறிய ஸ்ரீதேவி பூமாதேவி சமேத வரதராஜப் பெருமாள் வெளிவீதி வலம்வந்து அடியார்களுக்கு அருள் பாலித்தார். ரதம் பகல் ஒரு மணிக்கு இருப்பிடத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து 1.30 மணியளவில் உறியடி உற்சவம் இடம்பெற்றது. (படம்: பொ.சோபிகா)

## கண்சிகிச்சை முகாமும் பொது மருத்துவ முகாமும்

(கரணவாய் )

வடமராட்சி லயன்ஸ் கழகம் வல்வெட்டித்துறை பிரதேச மக்களின் நலன்கருதி நடத்தும் இலவச கண்சிகிச்சை முகாமும் பொது மருத்துவ முகாமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி தொடக்கம் பி.ப 12.30 மணி வரை இந்து தமிழ் கலவன் பாடசாலை வீதியிலுள்ள வல்வெட்டித்துறை சனசமூக நிலையத்தில் இடம் பெறும். (இ-3-60)

# அலங்கார உற்சவம்

(கரணவாய் )

வடமராட்சி தென்புலோலி முறாவில் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக் கிழமை ஆரம்பமாகி எதிர் வரும் 3 ஆம் திகதி அன்று வேட்டைத்திருவிழாவும் மறுநாள் தேர்த்திருவிழாவும் 5 ஆம் திகதி பகல் தீர்த்தத் திருவிழாவும் மாலை சதுர்த்தி உற்சவமும் நடைபெற்று உற்சவம் நிறைவடை யும் என ஆலய நிர்வாக சபையினர் அறிவித்துள்ளனர். (இ-60)

# தமிழ் அமுதம்-06

தென்மராட்சி இலக்கிய அணி நடத்தும் தமிழ் அமுதம்-06 விழா நாளை 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5மணிக்கு சாவகச்சேரி சங்கத்தானை தமிழ்க்கோட்டத்தில் (கம்பன் கல்லூரி வளாகம்) நடைபெறும். இந்நிகழ்வில் தலைமையுரையை யாழ்.இந்துக்கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா, கௌரவ உரையினை ச.மார்க்கண்டு, ***என்றும் வழிகாட்டும் இதிகாசங்கள்*** எனும் பொருளில் பேராசிரியர் தி.வேல்நம்பி எழிலுரையினையும் வழங்குவார்.

மேலும் கவிஞர் த.நாகேஸ்வரனை நடுவராகக் கொண்ட விவாத அரங்கில் மகாபாரத காப்பியத்தில் ***கற்போர் மனதை பெரிதும் கவர்ந்து நிற்பது சகுனியின் சூழ்ச்சியே*** எனும் தலைப்பில் ஸ்ரீ.சிவஸ்கந்தஸ்ரீயும் ***கர்ணனின் கொடையே*** எனும் தலைப்பில் லோ.துஷிகரனும் ***தருமனின் பொறுமையே*** எனும் தலைப்பில் த.சுதனும் ***கிருஷ்ணனின் தந்திரமே*** எனும் தலைப்பில் அ.வாசுதேவாவும் விவாதிக்கவுள்ளனர். (இ-3)

# வைர விழா இன்று

தெல்லிப்பழை திருமகள் சனசமூக நிலையததின் வைரவிழா இன்று சனிக்கிழமை பி.ப 3.30 மணிக்கு தெல்லிப்பழை திருமகள் சனசமூக நிலைய முன்றலில் இடம்பெறும். (இ-3)

மிருதங்க வித்துவான்
வட்டுக்கோட்டை – பம்பலப்பிட்டி
பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மாவின்
இசை அர்ச்சனை
ISSAI ARCHCHANAI
Art of Music
வழங்கும்

# நல்லூர்க் கந்தனின் மஹோற்சவ
## இசை நிகழ்ச்சி – 2016




28-08-2016 ஞாயிற்றுக்கிழமை
கதாகாலஷேபம் "கிருபானந்தவாரியார்"
29-08-2016 திங்கட்கிழமை
கர்நாடக இசையும் பக்தி இசையும்
30-08-2016 செவ்வாய்க்கிழமை
பக்தி இசை

(5726)

இடம் : நல்லை ஆதீன மண்டபம்.
காலம் : 28-08-2016 ஞாயிற்றுக்கிழமை, 29-08-2016 திங்கட்கிழமை & 30-08-2016 செவ்வாய்க்கிழமை
நேரம் : மாலை 6.45 மணி முதல்

| | |
|---|---|
| வயலின்/பாட்டு | - சு. வாசுகி & சு. நந்தினி சகோதரிகள் |
| கீபோர்ட்/பாட்டு | - சு. அரவிந்தன் சுப்ரமணிய சர்மா |
| மிருதங்கம்/பாட்டு | - சு. அனந்தநாராயணன் சர்மா |
| மிருதங்கம் | - பிரம்மஸ்ரீ க. சுவாமிநாதன் சர்மா |

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சுபம்

A.G.SARMA Chartered Accountants | A.G.S. SHARMA & CO Chartered Accountants | AGS MANAGEMENT CONSULTANT Company Secretary | AGS CORPORATE CONSULTANTS Advisory | இசை அர்ச்சனை ISSAI ARCHCHANAI | AGS KALAI ARANGAM


## கல்யாண மாலை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா:33செவ் 4 இல்
உயரம்: 5’7"
தகைமை/தொழில்: கணனி பொறியியலாளர்
தொ.இ: B/6203

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 36
தகைமை/தொழில்:வைத்தியர்
தொ.இ: B/6206

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 17 செவ் 2 இல்
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:A/Lகனடா
எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது
தொ.இ: B/6202

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 5
உயரம்: 175cm
தகைமை/தொழில்:A/Lசுவிஸ் PR
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: B/6207

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 23 செவ் 4 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:நூலக விஞ்ஞானம்/அரசதொழில்
தொ.இ: G/6201

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 32
உயரம்: 5’4"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/6204

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 45 செவ் 1 இல்
உயரம்: 5’
தகைமை/தொழில்:O/L
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவரும் ஏற்கப்படும்
தொ.இ: G/6205

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 55செவ் 8 இல்
உயரம்: 5’6"
தகைமை/தொழில்:BA
தொ.இ: G/6211


**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.





# அழைப்பிதழ்



அன்புடையீர்:
27.08.2016 இன்று சனிக்கிழமை 5 மணிக்கு எமது செல்வப் புதல்வன்
**நிவேஸ்** அவர்களுக்கு
10 ஆவது பிறந்த தின விழாவை எமது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாட இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து இரவு நடக்கும் விருந்துபசாரத்திலும் கலந்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

மிலேனியம் றெஸ்ரோரன்ஸ்
இல. 76/60, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
077 601 6310, 021 222 5876

இங்ஙனம் தங்கள்
நல்வரவை இனிதே நாடும்
திரு.திருமதி. சுகுமாரன் சாந்தினி
குடும்பத்தினர்.

அன்பளிப்புக்களை அன்புடன் தவிர்க்கவும்.

Millenium
Restaurant & Guest House



Tel: 021 222 5876 | 077 601 6310
No.76/60, Ramanathan Road, (Campus Road) Kaladdy, Jaffna




NIVESH

# செயல் திட்டங்களினால் பெண்கள் முன்னேறுகையில் நாடு வளம் பெறும்

## வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் தெரிவிப்பு



(பனிக்கன்குளம்)

பெண்களை வலுப்படுத்துவதன்மூலம் நாட்டை வளப்படுத்துவோம் என வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மன்னார் உப்புக்குள நளவன்வாடியில் அமைக்கப்பட்டுள்ள தேசிய தையல் தொழில் தகுதிகள் பயிற்சி மையத்தை நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணியளவில் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன் பார்வையிட்டு அங்குள்ள பயனாளிகளுடன் கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இவ்விஜயத்தின்போது வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி பணிப்பாளர் ஜே.ஜே.சி.பெலிசியன், மன்னார் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த விஜயம் தொடர்பாக அமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில், பெண்களை வலுப்படுத்துவதான இவ்வாறான பயனுள்ள செயற்றிட்டங்களால் நமது மாகாணத்தை அபிவிருத்தியில் இட்டுச் செல்ல முடியும். அவ்வாறு பெண்களும் முன்னேறும் சந்தர்ப்பத்திலே நிச்சயமாக நமது நாடு மிகுந்த வளமுள்ள நாடாக மாறும்.

குறித்த தேசிய தகுதியுள்ள இவ்வாறான தொழில்சார் பயிற்சிகளை வழங்குவதற்கு வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் நடவடிக்கை மேற்கொள்ள கிராம அபிவிருத்தித் திணைக்களம் மிகவும் ஆக்கபூர்வமாக செயற்படுவதாகவும், இவ்வாறு பயிற்றப்படுகின்ற பெண்களுக்கு அவர்களை ஊக்குவிக்கும் முகமாக சிறிய ஊக்குவிப்பு தொகையும் வழங்கப்பட்டு இலவசமாக பயிலும் சந்தர்ப்பத்தையும் கிராம அபிவிருத்தி திணைக்களம் ஊடாக தாம் ஏற்படுத்தி தருவதாகவும் தெரிவித்தார்.

பெண்கள் இவ்வாறான சந்தர்ப்பங்களை தமக்கு சாதகமாக பயன்படுத்தி முறையாக தையலை பயின்றுள்ளதனால், பயிற்றப்பட்ட பயனாளிகளான பெண்கள் தமது சுயதொழிலை ஆரம்பிக்க அவர்களுக்கான தையல் இயந்திரங்களும் ஐந்து மாவட்டங்களிலும் வழங்கப்பட்டுள்ளது.

அதனைக் கொண்டு அவர்கள் ஒவ்வொருவரும் நாளாந்தம் ஓர் வருமானத்தை ஈட்டக்கூடியதாக இருக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-281)

# கிளி. பொதுச்சந்தையின் நிலைமைகளை நேரில் சென்று பார்வையிட்டார் ஆளுநர்





வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே நேற்று முன்தினம் பிற்பகல் ஒரு மணியளவில் கிளிநொச்சி பொதுச்சந்தைக்கும் கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் நீண்டகாலத்திற்கு முன் கட்டி முடிக்கப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையம் என்பவற்றிற்கு விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர்,

நான் ஒரு அமைச்சர் கிடையாது,நான் ஒரு ஆளுநர்.எனவே நான் ஜனாதிபதியின் ஒரு தூதுவராகத்தான் இங்கு வந்துள்ளேன். இங்குள்ள நிலைமைகளை நான் அவருக்கு கட்டாயம் தெரிவிப்பேன்.

அத்துடன் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட ஆறாயிரம் மில்லியன் ரூபா நிதி திருப்பி உள்ளது.அதனையும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் பேசி, அந்தப் பணத்தை எடுத்து கிளிநொச்சி சந்தைக் கட்டடத் தொகுதி அமைப்பதற்கு பயன்படுத்த முடியுமா? என்று பார்க்கின்றேன். முடியுமெனறால் கட்டாயம் நான் அதனை செய்து தருவேன் எனவும் தெரிவித்தார்.

அத்துடன் பொருளாதார மத்திய நிலையத்தை சென்று சுற்றிப் பார்வையிட்டதுடன் வெகுவிரைவில் திறப்பதற்குரிய ஏற்பாடுகளை மேற்கொள்வதாக கூறினார்.

இந் நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, உள்ளூராட்சி ஆணையாளர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், கரைச்சி பிரதேச சபைச் செயலாளர், கிளிநொச்சி மாவட்ட செயலக காணி உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-312-271)

# இன்றைய இளைஞர்களின் ஒவ்வொரு செயற்பாடுகளும் எதிர்கால சந்ததியினருக்கு முன்மாதிரியாக அமைய வேண்டும்

## வடக்கு மாகாண கல்வியமைச்சர் தெரிவிப்பு

(மல்லாவி)

எதிர்கால சந்ததியினருக்கு இன்றைய இளைஞர்களின் செயல்கள் முன்மாதிரியாக விளங்க வேண்டும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பளைப் பிரதேசத்தில் அமைந்துள்ள இத்தாவில் கிராமத்து பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கிய நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரித்தானியாவில் இருந்து விடுமுறைக்காக தாயகத்திற்கு வந்திருந்த கஜேந்திரனின் திருமண நினைவு நாளை முன்னிட்டு அப்பியாசக்கொப்பிகள் வழங்கும் நிகழ்வு இத்தாவில் வட்டார அமைப்பினர் அம்மாரி இராசரட்ணம் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.அவர் தனது உரையில், கல்வி கற்கின்ற பிள்ளைகள் ஒரு இலக்கை அடிப்படையாகக் கொண்டு கற்கிறார்கள். இவ்வாறு கற்பவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு சென்று பட்டங்களைப்பெறலாம். மீள சமூகத்திற்கு அவர்கள் வருகின்ற போது சமூகக் கோலங்கள் எவ்வாறு இருக்கின்றது என்பது முக்கியமானது. இன்று பல மறைமுகத்தூண்டல்கள் காரணமாக மாணவர்களுடைய செயற்பாடுகளிலே மாற்றங்கள் தென்படுகிறது. ஆகவே பிள்ளைகளுக்கு நல்லவற்றையும் உண்மைகளையும் சொல்லிக்கொடுக்க வேண்டும். நல்லவர்களை முன்னுதாரணம் காட்டவேண்டும்.

கொஞ்ச நாட்களுக்கு முன்பு கொப்பியோடு நாமல் அண்ணா வந்தார். அவரது படத்தைப் பொறித்து கொப்பிகளைத்தந்தார். இப்பொழுது சிறையிலிருக்கிறார். ஏன்சிறைக்குப்போனார்? பொதுச்சொத்துக்களைச் சூறையாடி தாங்கள் எடுத்துக் கொண்டு சில கொப்பிகளை மட்டும் எங்களுடைய பிள்ளைகளுக்குக் காட்டினார். ஆனால் இங்கு புலம்பெயர்ந்த மண்ணில் தான் உழைத்த உழைப்பின் ஒரு பகுதியை உங்களுக்குத் தருகிறார். ஆகவே முன்மாதிரியான இளைஞன் இங்கே யார்? புலம்பெயர்ந்த போதும் தன் தாய் மண்ணை நேசித்து பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு உதவுகின்ற இவரைப்போன்றவர்களின் முன்மாதிரியான செயல்களே எதிர்கால சந்ததிக்கு ஆரோக்கியமானது என்றார்.(2-15-312)

# பருத்தித்துறை-கிளிநொச்சி வழித்தட பேருந்து சேவை

## நாளை மறுதினம் முதல் ஆரம்பம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் அரச, அரச சார்பற்ற ஊழியர்கள், ஆசிரியர்கள், அறிவி யல் நகர் பல்கலைக்கழக மாண வர்கள் ஆகியோரின். வேண்டுகோளுக்கு அமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் தினமும் காலை 6.30 மணிக்கு பருத்தித் துறையிலிருந்து-கிளிநொச்சி அறி வியல் நகருக்கும் பிற்பகல் 4.20 மணிக்கு அறிவியல் நகரிலிருந்து பருத்தித்துறைக்கும் பேருந்து சேவை நடைபெறவுள்ளது என பருத்தித் துறை இ.போ.சபை (வடக்கு) சாலை முகாமையாளர் க.கந்த சாமி அறிவித் துள்ளார். (2)




# புளியம்பொக்கணை சந்திக்கு அண்மையில் அமைக்கப்பட்ட இரும்புப்பால வேலைகள் முடிவு



(முக்கொம்பன்)

கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பெரியகுளம் கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் புளியம்பொக்கணை சந்தியில் அண்மையில் 11 ஆவது கிலோமீற்றரில் அமைந்துள்ள இரும்புப் பாலம் புனரமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இப்பாலத்திற்கான புனரமைக்கும் பணிகள் கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் இவ்வாண்டு ஜூலை மாதம் இறுதிப் பகுதியில் முழுமையாக இரும்புப்பால வேலைகள் நிறைவுபெற்றுள்ளன.

இப்பாலத்தை புனரமைப்பதற்கென வழங்கப்பட்ட ஒப்பந்தகாரர் குறித்த வேலைகளை உரிய காலத்தில் முடிவுறுத்தாமையால் அவ் வேலைகளை முல்லைத்தீவு பிராந்திய வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் பொறுப்பேற்று முடிவுறுத்தியுள்ளனர்.

இவ்வீதியால் பயணம் செய்யும் பொதுமக்கள் கடந்த இரண்டு வருடகாலமாக மழை காலங்களில் பெரும் சிரமத்திற்கு மத்தியில் பயணம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போது குறித்த இரும்புப் பாலம் 12 மீற்றர் நீளமும் 7.4 மீற்றர் அகலமும் கொண்டதாகும். (2-283)

# மகளிர் கமக்கார அமைப்பு முதன்முறையாக அங்குரார்ப்பணம்



(முள்ளியவளை)

ஒலுமடு கமநல அபிவிருத்தி நிலையத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கானமகளிர் கமக்கார அமைப்புக்களை முதன்முறையாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று காலை 9 மணியளவில் ஒலுமடு கமநல அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது முதன்முறையாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட மகளிர் கமக்கார அமைப்புக்கான புதிய நிர்வாகத் தெரிவு இடம்பெற்று நிகழ்வில் விவசாயிகளுக்கு பழமரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டது.

இதில் விவசாயிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வானது கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.குணாளன் தலைமையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-302)

# அமைக்கப்பட்டு வரும் விஹாரைகளை தடுத்து நிறுத்த மீள்குடியேற்ற அமைச்சர் என்ன நடவடிக்கை எடுத்துள்ளார்

## சிறிதரன் எம்.பி. கேள்வி

(பனிக்கன்குளம்)

***முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சியில் தற்போது அமைக்கப்பட்டு வரும் விஹாரைகளை தடுத்து நிறுத்த புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் என்ன நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார் என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கேள்வியெழுப்பியுள்ளார்.***

வடக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள பௌத்த விஹாரைகளையும் புத்தர் சிலைகளையும் அகற்ற முடியாது. எனினும் புதிதாக அமைக்கப்படவுள்ள பௌத்த விஹாரைகள் மற்றும் புத்தர் சிலைகள் தொடர்பில் தன்னிடம் அல்லது அரசாங்கத்திடம் முறையிட்டால் நடவடிக்கை எடுப்பதாகவும் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

முல்லைத்தீவு, கொக்கிளாய் . கருநாட்டுக்கேணி பிள்ளையார் கோவிலை இடித்து விட்டு தற்போது விஹாரை அமைக்கப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி கனகாம்பிகை அம்மன்ஆலயம்அருகே சுவாமி வீதி வலம் வரும் வீதியை ஆக்கிரமித்து விஹாரை அமைக்கப்பட்டு வருகிறது.

இந்த தகவல்கள் தெரிந்தும் நடவடிக்கை எடுக்காமல் இருக்கும் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் அவை கட்டி முடிக்கப்பட்ட பின்னர் அகற்ற முடியாது எனக் கூறுவாரா? எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

வடக்கில் பௌத்தர்களே இல்லாத இடங்களில் விஹாரை அமைப்போர் தமக்கும் தமிழ் மக்களுக்கும் சொல்லிவிட்டு அவற்றை அமைப்பதில்லை எனவும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கூறினார்.

கனகாம்பிகை அம்மன் ஆலயம் அருகே தறப்பாள்களினால் மறைக்கப்பட்ட நிலையில் இராணுவத்தினர் விஹாரையை அமைத்து வந்ததாக தெரிவித்த அவர், குறித்த விடயத்தை தாங்கள் பல இடங்களில் தெரியப்படுத்திய போதிலும் எந்தவொரு நடவடிக்கையும் மேற் கொள்ளப்படவில்லையெனவும் அதில் குறிப்பிட்டுள்ளது. (2-281)




# ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு

## வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றம்

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் ஓட்டுத்தொழிற்சாலையில் பணிபுரிந்த 74 ஊழியர்களுக்கு நட்டஈடு வழங்க கோரும் பிரேரணை ஒன்று வடக்கு மாகாண சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் அறுபதாவது அமர்வு நேற்று முன்தினம் கைதடியில் அமைந்துள்ள பேரவை செயலகத்தில் அவைத்தலைவர் சீ.வீ.கே. சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.


இதன் போது உறுப்பினர் து.ரவிகரனால் கொண்டு வரப்பட்ட பிரேரணையே நிறைவேற்றப்பட்டுள்ளது. 1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஒட்டுசுட்டான் ஓட்டுத் தொழிற்சாலை 1971 ஆம் ஆண்டு இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு பணிபுரிந்த ஊழியர்கள் அனைவரும் இலங்கை மட்பாண்ட கூட்டுத்தாபன ஊழியர்களாக உள்வாங்கப்பட்டுள்ளனர்.

1990 ஆம் ஆண்டு 6 மாதத்திலிருந்து இத் தொழிற்சாலை மூடப்பட்டதிலிருந்து பாதிக்கப்பட்ட பணியாளர்களுக்கு எதுவித கொடுப்பனவுகளோ, நட்ட ஈடுகளோ இன்றுவரை வழங்கப்படவில்லை. எனவே 74 ஊழியர்களுக்கும் நட்டஈடு பெற்றுக்கொடுக்க இந்த சபையினை கோருகின்றேன் என ரவிகரன் பிரேரணையை முன்மொழிந்தார்.

இந்த பிரேரணை அனைவரது ஆதரவுடனும் நிறைவேற்றப்பட்டது. (2-4)

# வவுனியாவிலிருந்து நல்லூர்க்கந்தன் ஆலயத்திற்கு நடைபவனி ஆரம்பம்






வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் தேர்த்திருவிழாவை முன்னிட்டு வவுனியாவிலிருந்து வேல்தாங்கிய பாதயாத்திரை நேற்று முன்தினம் வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீ பத்திரகாளி அம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூஜை வழிபாட்டுடன் ஆரம்பமானது.

ஆலய நிர்வாகியும் அறநெறிச்செல்வியுமான கு.ஜெயராணி தலைமையில் ஆரம்பமான பாதயாத்திரையில் பெருந்திரளான நல்லூர்க்கந்தன் அடியார்கள் கலந்து கொண்டனர்.

வவுனியா வேப்பங்குளம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் ஆலயத்திலிருந்து புறப்பட்ட வேல் தாங்கிய பாதயாத்திரைக் குழுவினர், மன்னார் வீதியூடாக வவுனியா நகரை அடைந்து பின்னர் ஏ-9 வீதியூடாக நல்லூர்க்கந்தன் ஆலயத்தினை நோக்கிப் புறப்பட்டுள்ளனர். (2)

# நெத்தலியாற்றுப் பால வேலைகள் முடிவுபெற்று மக்கள் பாவனையில்



கண்டாவளைபிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தர்மபுரம் கிழக்கு கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் 15 ஆவது கிலோ மீற்றரில் உள்ள நெத்தலியாற்றுப் பாலத்திற்கான புனரமைப்பு வேலைகள் முடிவுறுத்தப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இப்பாலத்திற்கான புனரமைக்கும் பணிகள் கடந்த 2014 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் ஆரம்பிக்கப்பட்டு இரண்டு வருடங்களின் பின்னர் இவ்வாண்டு ஜூலை மாதம் இறுதிப்பகுதியில் முழுமையாக வேலைகள் முடிவுறுத்தப்பட்டன.

தற்போது குறித்த பாலம் 33 மீற்றர் நீளமாகவும் 7.4 மீற்றர் அகலமாகவும் அமைக்கப்பட்டுள்ளது. (2-283)

## முல்லைத்தீவு மாவட்டத்தின்

# அதிகளவான மூலப்பொருட்கள் தென்பகுதிக்கு நகர்த்தப்பட்டு முடிவுப் பொருட்களாக மாற்றம்



## சாந்தி எம்.பி. தெரிவிப்பு

எமது பிரதேசத்தில் அதிகளவான மூலப்பொருட்கள் மூலப்பொருளாகவே தென்பகுதியை நோக்கி எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்நிலை மாற வேண்டும் என திருமதி சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா தெரிவித்தார்.

பாராளுமன்றில் 1986 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க விலங்குத்தீனி திருத்த சட்ட மூலத்தின் போது கடந்த 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விவாதத்தில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது,

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு மற்றும் கிழக்கு பகுதி மக்களினுடைய பிரதான வாழ்வாதார முறைகளில் கால்நடை வளர்ப்பு பிரதானமான ஒன்றாக காணப்படுகின்றது. இப்பகுதிகளில் அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் பல்வேறு வகையான திட்டங்கள் முன்வைக்கப்பட்டிருந்தபோதிலும் இத்திட்டங்களை மேற்கொள்வதற்கு உரிய முறையில் பயனாளிகளின் தெரிவுகள் இடம்பெறாமையினாலும் கடந்த அரசினால் வடக்கின் வசந்தம் கிழக்கின் உதயம் என பெரும் எடுப்பில் மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள் யாவும் சுண்டங்காய் காற்பணம் அதன் சுமைகூலி முக்காற்பணம் என்ற வகையிலேயே அமைந்திருந்தது. எனவே இதன் காரணமாக எமது மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார வேலைத்திட்டங்கள் பயனற்றவையாகவே மாறிப்போயிருந்தன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் மட்டும் நாளொன்றுக்கு 12 ஆயிரம் லீற்றர் பாலுற்பத்தி இடம்பெறுகின்றது. எமது பிர தேச கால்நடை வளர்ப்பாளர்கள் தமது கால்நடை வளர்ப்பிற்காக உரிய மேய்ச்சல் தரைகள் இன்றி பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர். அடையாளம் காணப்பட்ட 11 ஆயிரம் ஏக்கர் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரையினை வனவள பாதுகாப்பு பிரிவு அனுமதி தர மறுக்கின்றது. இவை விடுவிக்கப்பட்டு எமது மாவட்டத்தில் கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகள் உருவாக்கப்பட வேண்டும்.

கால்நடை வளர்ப்பிற்கென புல்லுற்பத்திகள் தற்போது இடம்பெற்று வந்தாலும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கு உரிய ஏனைய வசதிவாய்ப்புகள் எவையும் செய்து கொடுக்கப்படவில்லை. கால்நடைகளுக்கான தீவனங்கள் என கடைகளில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் உரிய தரநிர்ணயங்களுக்கு அமைந்து உள்ளனவா? பற்றி சம்பந்தப்பட்ட திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எமது பிரதேசத்தில் அதிகளவான பாலுற்பத்தி இடம் பெறுகின்ற போதிலும் உற்பத்தி செய்யப்படும் பால் மூலப்பொருளாக தென்பகுதியை நோக்கியே எடுத்துச் செல்லப்பட்டு அங்கே வைத்தே அவை முடிவுப்பொருளாக மாற்றப்படுகின்றது. இந் நிலை ஏன் ? எமது பகுதியில் நிலப் பரப்புக்கள் இல்லையா? அல்லது மனிதவளம் இல்லையா? இந்நிலை மாற வேண்டும். எமது பகுதிகளில் தொடர்ந்தும் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பின்றி அல்லற்படுகின்றனர். எனவே இவ்வாறான நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டு எமது பகுதிகளிலும் தொழிற்சாலைகள் நிறுவப்படவேண்டும். அவர்களுக்குரிய தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும்.

மேலும் கால்நடை வைத்தியர்கள் மற்றும் போதானாசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு உரிய போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கால்நடை வளர்ப்போருக்கான நவீன முறைகளுக்கேற்ப பயிற்சிகள் வழங்கப்படல் வேண்டுமென சுட்டிக்காட்டினார்.

மேலும் கால்நடைஅபிவிருத்தி திணைக்களங்களில் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்களை வழங்கும் வகைகளில் சுற்றுநிருபங்கள் மாற்றியமைக்கப்படுவது கட்டாயதேவையாக உள்ளது எனவும் தெரிவித்தார். (2-281)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்—85

## சூழலியல் விவசாயத்தில் வீட்டுத்தோட்டத்தின் பங்கு



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பக்திமயமானநல்லூர்க் கந்தனின் அருள்பாலிக்கும் சூழலில் சூழலியல் விவசாயத்தின் கருத்துப் பொதி சார்ந்து கண்காட்சியொன்று அமைக்கப்பட்டிருக்கின்றது. மாகாணவிவசாயஅமைச்சு, விவசாயத் திணைக்களங்கள் இணைந்து இந்தக்காட்சியை விளக்க சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளன. பலருக்கும் பயனுள்ளதான இக்கண்காட்சிகள் மக்கள் பார்வையிட்டு பயனடையலாம்.

இந்த சூழல் எமக்கு இயற்கையால் தரப்பட்ட வரமென்றே கூறலாம். சூழலை மறந்து அதனைத் துறந்து நாம் வாழ்வதென்பது சாத்தியமான ஒன்றல்ல. ஆனால் இன்னும் நாம் உணரவில்லை.போர் நடைபெற்ற காலங்களில் எமது சூழலைப்பற்றி இங்கே எவருமே அலட்டிக்கொள்ளவில்லை. ஒரு பக்கத்தில் போருக்காக இருந்த பயனுள்ள மரங்களை வகை தொகையின்றி தறித்தழிக்கப்பட்டமையும் அதில் பயன் படுத்தப்பட்ட கொடிய ஆயுதங்களினால் குறிப்பாக சீறிப் பாய்ந்த செல்களினால் பல பயனுள்ள மரங்கள் அழிக்கப்பட்டதையும் பனை மற்றும் தென்னை மரங்களின் தலைகவிழ்க்கப்பட்டதையும் குறிப்பிட்டு கூறினாலும் மறுபக்கத்தில் நாமும் பலமரங்களையும் எமது தேவைக்காகஅழித்து இப்போது அழிந்தவற்றை மீண்டும் மீட்டெடுக்க முனைந்திருக்கின்றோம். மரங்கள் ஒரிரவில் வளர்ந்து விருட்சமாவதில்லை. காலம் தற்போது கனிந்திருக்கின்றது. திணைக்களங்கள் மாகாண அமைச்சுக்கு கீழே கொண்டு வரப்பட்டுள்ளன. அனைவரையும் ஒன்றுதிரட்டி சூழலை பாதுகாக்க பலமான திட்டத்தை தீட்டி அதனை நடைமுறைப்படுத்துவதையும் கண் காணிக்க வழிபிறந்திருக்கின்றது.

சூழலியல் விவசாயம் சூழலில் இருக்கின்ற நன்மை தருகின்ற உயிரினங்களை விருத்தி செய்து பலமான வளமான வேளாண் தொகுதியை உருவாக்கி ஆரோக்கியமான சிறந்த பயிர்ச்செய்கைக்கு உதவுவதாகும். ஆரோக்கியமான பயிர்ச்செய்கை என்பது நஞ்சற்ற பயிர்களை உற்பத்தியாக்குதலாகும். அசேதன இரசாயனங்களை நம்பியில்லாத பயிர்ச்செய்கை என காணலாம். பீடைநாசினிகள் நஞ்சுப்பதார்த்தங்கள் என தெரிந்தும் அதனை விசிறி நிரூபித்திருக்கிறார்கள் எங்கள் விவசாய செய்கையாளர்கள். இவ்விரசாயனங்களால் விவசாய செய்கை காப்பாற்றப் பட்டதாக நாம் நினைத்திருக்க எமது சூழல் வலுவிழந்து, வலிமையிழந்து,வழக்கிழந்தும் போயிருக்கின்றது.

அசேதன இரசாயனங்களால் சூழலுக்கு தீமை என 1962ஆம் ஆண்டு அமெரிக்காவில் வெளியாகிய"றேச்சல் கார்சன்" (Rachel Carson) எனும் பெண்மணி துணிந்து எழுதிய"Silent Spring" எனும் புத்தகம் வெளிக்கொண்டு வந்தது. ஆரம்பகாலத்தில் அதிகரித்த பூச்சி பீடைகளைக் கட்டுப்படுத்த கண்டுபிடிக்கப்பட்டு பயன்படுத்திய டி. டி.ரியினுடைய தாக்கத்தைப் பற்றி எழுதப்பட்ட இப் புத்தகம் பசுமைப் புரட்சியின் எதிர் விளைவுகளை அன்றைய காலத்திலேயே அடித்துக் கூறியது. ஆரம்பத்தில் வெளி செறிவூட்டப்பட்டது தான் எழுந்த பிரச்சினையாகும். அமெரிக்க நாட்டு தேசிய பறவையான கழுகுகளின் முட்டைக்கோதை டி.டி.ரி இரசாயனம் வலுவிழக்க செய்ததால் அவை அடை காக்கப்படும்போது இலகுவில் உடைந்துபோயின. இதனால் கழுகுகளின் இனப்பெருக்கம் பாதிக்கப்பட்டு அவற்றின் எண்ணிக்கை குறைந்ததை ஆய்வு மூலமாக நிருபித்து மக்களுக்கு அறிய வைத்த இப்பெண்மணியின் செயலை சூழல் பற்றி சிந்திக்கும் எவரும் இலகுவில் மறந்திடமாட்டார். கடந்த ஐம்பது ஆண்டுகளாக இந்தவிசித்திரம் எம்மாலேயே நாம் வாழும் பூமியிலேயே நடந்திருக்கின்றது. ஆரம்பத்தில் கண்டறியப்பட்ட இந்த உண்மையை வளர்ந்து வரும் நாடுகள் அன்றையதினம் அறிந்துணரமுடியவில்லை. இதனால் தான் இவ்வளவு விபரீதமும் நடைபெற்றுள்ளது. தற்போது நாம் வாழும் சூழலை பாதுகாக்க முயற்சிக்கின்றோம். தொடரும் அழிவிலிருந்து இயற்கையைப் பாதுகாக்க விரும்புகின்றோம். ஆனால் அனைவரும் இணைந்தால் தான் இது சாத்தியமாகும். இழந்ததை நாம் மீட்டெடுப்பது சுலபமான காரியமில்லை. அதற்காக நாம் நிறையவே பாடுபடவேண்டியிருக்கிறது.

சூழலில் உள்ள நன்மை தரும் உயிரினங்கள் எனும் போது அயன்மகரந்த சேர்க்கையாளர்கள், இயற்கையெதிரிகள் மகரந்த சேர்க்கையே அதிகமாகும். பூச்சி வகைகளுக்குள்ளும் தேனீக்கள், வண்ணத்துப்பூச்சிகள் ஆகியன இதில் குறிப்பிடத்தக்கனவாகும். அயன்மகரந்தசேர்க்கைக்கு இவ்வாறான மகரந்த சேர்க்கையாளர்கள் அவசியம் தேவையாகும். ஆனால் இவ்வாறான மகரந்த சேர்க்கையாளர்களை நாம் விசிறிய பீடைநாசினிகளால் அழிவுக்குள்ளாக்கி விட்டோம். இதனால் விளைநிலத்தில் மகரந்த சேர்க்கையாளர்களின் வருகை குறைவடைந்துவிட்டது. அசேதன இரசாயனங்களை நாம் விசிறாது விட்டாலொழிய மகரந்த சேர்க்கையாளர்க்ளை கவரவும் அதன் மூலம் பயிர்களில் மகரந்த சேர்க்கையினைஅதிகரிக்கவும் முடியாது. இது நிச்சயமாக பயிர்ச் செய்கையில் பாதிப்பை ஏற்படுத்தவே செய்யும். இன்றும் செய்து கொண்டிருக்கின்றது. இந்த பாதிப்பை கடந்த காலங்களில் சிறிது சிறிதாக நாம் உணரத் தொடங்கியும் மொத்த பாதிப்பு பற்றி எவரும் அலட்டிக்கொள்ளவேயில்லை. மாறாக பீடைகளைக் கட்டுப்படுத்த இன்னும் புதிது புதிதாக பீடைநாசினிகளை கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்றோமே தவிர மாற்று வழிகளை கண்டு பிடித்து முழுமையாக பயன்படுத்த முடியவில்லை.

நாம் ஆரம்பித்த எமக்கெதிரான அழிவை நாமே சீர்செய்ய தலைப்படவேண்டும். அடுத்த தலைமுறைக்கு சுத்தமான சுகாதாரமான சூழலை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். மாசுபட்ட சூழலை நாம் சீர்செய்து சுகமான இதமான சூழலாக மாற்றியமைக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். வெறுமனே எழுதுவதற்கான செய்தியாக இது இல்லாமல் நடைமுறைச் சாத்தியமான விடயங்களை உள்வாங்கி செயன்முறையில் நாம் இதனைக் காட்டவேண்டும். இதற்கொரு நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை தான் வீட்டுத்தோட்டம்.


பூக்காத தாவரங்கள்


பூக்கும் தாவரங்கள்

...டுத்துவது குறைவாகும். உங்களது வீட்டில் அமைக்கப்பட்டுள்ள வீட்டுத்தோட்டத்திலுள்ள பூக்கும் தாவரங்களை கணக்கிட்டுப் பாருங்கள். அதிலும் மகரந்த சேர்க்கையாளர்களை கவரும் பூக்குந் தாவரங்களை கணக்கிட்டுப் பாருங்கள். மிகக்குறைவானதாகவே இருக்கும். பொதுவாக அழகுத்தாவரங்களில் வண்ண வடிவமான இலைகளையுடைய அழகு தாவரங்களுக்கே நாம் முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றோம். மாறாக பூக்கும் தாவரங்களின் எண்ணிக்கையை அதிகரித்தால் மகரந்த சேர்க்கையாளர்களான தேனீக்கள், வண்ணத்துப்பூச்சி, ஈக்கள்,பறவைகள் என்பனவற்றைவிரும்பியழைக்கலாம். இதன் மூலம் நாம் இவற்றின் எண்ணிக்கையையும் பேணிப்பாதுகாக்க முடியும். விளைநிலத்தில் விசிறப்படும் பீடைநாசினிகளினால் மகரந்த சேர்க்கையாளர்கள் விரட்டப்படும் போது வீட்டுத்தோட்டமே இவற்றிற்கு தஞ்சமாக இருக்கும்.

ஆக மொத்தத்தில் வீட்டுத்தோட்டமென்பது ஒரு சூழல் தொகுதி என்பதோடு மட்டுமல்லாமல் பல விடயங்களையும் உள்ளடக்கிய சூழலியல் தொகுதியாகும். எமது வீட்டுத்...

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 102

(Ecological Agriculture) என்பது எமது பிரதேசத்திற்கு ஒன்றும் புதுமையானதல்ல. பாரம்பரியமாக நாம் செய்து வருகின்ற விவசாய செய்கையினூடு இயற்கை வழி விவசாயத்தை மேம்படுத்துவதும் சூழலை பாதுகாப்பதற்கான இன்னும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை உள்வாங்குவதும் குறிப்பாக

வந்த இப்புத்தகம் பலருடைய கவனத்தையும் அப்போது ஈர்க்கவில்லை. உணவுற்பத்திப் பெருக்கம் பற்றி பசுமைப் புரட்சி பலமாக எடுத்துக் கூறியதால் அன்றிருந்த விஞ்ஞானிகளுக்கு எதிர்வினைகளை கணிப்பிடமுடியாமல் போய் விட்டது.


டி.டி.ரியின் தாக்கம் உணவுச் சங்கிலியின் கடைசியிலுள்ள பறவைகளில்

எனப்படும் இரைகௌவிகள், ஒட்டுண்ணிகள், இன்னும் நுண்ணாங்கிகள் என்பன அடங்கும். இதில் மகரந்த சேர்க்கையாளர்களின் பங்களிப்பு கணிசமானது. கிட்டத்தட்ட 60 சதவீதத்திற்கும் மேலான பயிர்கள் விலங்குகளிலான அயன்மகரந்த சேர்க்கையை நம்பியிருப்பவையாகும். அதிலும் விலங்குகள் எனும் போது பூச்சிகளிலான

சாதாரணமாக வீட்டுத்தோட்டமமைப்பதை சிறியதொரு காரியமாக எண்ணி அலட்சியப்படுத்துவதுதான் தற்போதைய நடைமுறையாகும். இதனை மாற்றி வீட்டுத் தோட்டத்தை உணவுற்பத்தியின் குறிப்பாக பசுமைப் புரட்சியின் அலகாக உருவகித்தால் பலவிடயங்கள் தெளிவாகும். வீட்டுத்தோட்டத்தில் பூக்கும் தாவரங்களை பயன்ப

தோட்டத்தை மலர்த்தாவரங்களால் அலங்கரித்துஅதற்குள் பல நன்மை தரும் உயிரினங்கள் வந்து போகும் சக்திமாற்றமேற்படும் சக்தித் தொகுதியாக மாற்றிட வேண்டும். பூக்கும் தாவரங்கள் பலவுண்டு. அழகுக்காக மட்டும் பலவுண்டு. அதிகம் உள்ளீடுகளை எதிர்பார்க்காத பூக்கும் தாவரங்களை வளர்த்து பயனடையலாம்.

# நல்லூர் ஆலய சூழலில் இன்று



## தெய்வீகச் சொற்பொழிவு

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு உலக சைவத்திருச் சபையும் யாழ்ப்பாணம் சொண்ட் நிறுவனமும் இணைந்து நடத்தும் ''தெய்வீகச் சொற்பொழிவு'' இன்றும் இடம்பெறும். மாலை 6.30 மணிக்கு நல்லூர் முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் சைவப் புலவர்சிவஸ்ரீ கதிர்குமாரசாமி சுமுகலிங்கம் தலைமையில் இடம் பெறும் இந்நிகழ்வில் இந்து அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி அனந்தலட்சுமி ''முருக அவதாரம்'' பற்றி சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## ஆன்மீகச் சொற்பொழிவு

நல்லைக்கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்.கதிர்கலைகத்தின் ஏற்பாட்டில் நல்லூர்க்கந்த சுவாமி கோவில் முன்பாக அமைந்துள்ள செல்லப்பா சுவாமிகள் நினைவாலயத்தில் பண்டிதர் பொன். சுகந்தன் தலைமையில் தினமும் மாலை 6மணியளவில் ஆன்மீக நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. கைலாச வாகனத் திருவிழாவான இன்று சனிக் கிழமை ''நாமேல் நடவீர்'' பற்றி கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் செந்தமிழ் சொல்லருவி ச.லலீசன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார். (இ-3)

## அருள்நெறி விழாவில் இன்று

இந்து சமயகலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர்க்கந்தசுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் யாழ்.மாவட்ட அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறிவிழா இன்றும் பி.ப.3மணி தொடக்கம் மாலை 6மணிவரை இடம்பெறும். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகா யாட்டு அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கலந்து கொள்ளவுள்ளார். சைவ விழுமியங்கள் பற்றிய கதாப்பிரசங்கத்தை க.பிரகாந்த், சிறப்புச் சொற்பொழிவினை சிவானந்தசர்மா ஆகியோர் நிகழ்த்துவர். (இ-3)

## தெய்வீக இசைச்சங்கமம்

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாசார நிறுவனம் நல்லூர்க்கந்தனின் பெருந்திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன மண்டபத்தில் இரவு 7 மணி முதல் 8 மணிவரை நடத்தி வரும் ''தெய்வீக இசைச் சங் கமத்தில்'' இன்று சனிக்கிழமை மலேசியா ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரசர்மாவின் கலை நிகழ்ச்சி இடம்பெறும். (இ-3)

## தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல் லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை பாட்டு-திருமதி.சுகன்யா அரவிந்தன், வயலின்-அ.ஜெயராமன், மிருதங்கம்-பிரம்மஸ்ரீ வ. ரமணா, கடம் - கு. ரவிசங்கர் ஆகியோரும் பங்குபற்றவுள்ளனர். (இ-3)

## வில்லிபாரதத்தில் 'அர்ச்சுனன் தபசு'

நல்லூர்க்கந்தப்பெருமானின் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர் சைவ மகாசபை முப்பது வருடங்களுக்கு மேலாக நடத்தி வரும் ''தெய்வீகத் தொடர் இசைப்பேருரை'' நல்லை ஆதீன குருமூர்த்த மண்டபத்தில்தினமும்மாலை6.30மணியளவில்இடம்பெற்று வருகின்றது. இந்நிகழ்வில் நல்லைக்குருமணியின் பிரதம வாரிசு கானகதா வாரிதி பிரம்மஸ்ரீ. சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் வில்லிபாரதம் பற்றிய தொடரில் இன்று சனிக்கிழமை ''அர்ச்சுனன் தபசு'' பற்றி சங்கீத கதாப்பிரசங்கம் இடம்பெறும். (இ-3)

## ஆன்மீக அருளுரை

நல்லூர்க்கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் நடத்தும் ''ஆன்மீக அருளுரை'' (ஞானயக்ஞம்) எனும் நிகழ்வு நல்லூர் ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் இரவு 7.5 மணி தொடக்கம் 8 மணிவரை இடம்பெற்று வருகின்றது.

கைலாச வாகனத் திருவிழாவான இன்று சனிக்கிழமை யாழ்ப் பாண வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா ''தன்னுடைய தர்மமே சிறந்தது'' எனும் தலைப்பில் ஆன்மீக அருளுரை வழங்குவார். (இ-3)

## நல்லூரானுக்கு இன்று கைலாசவாகனம்



## 'ஓம் சரவணபவ' பரத நாட்டிய நிகழ்வு செப்டெம்பர் முதலாம் திகதி நல்லூரில்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்தியத் துணைத் தூதரகமானது இந்தியக் கலாசார உறவுகளுக்கான பேரவையும் மற்றும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து வழங்கும் ''ஓம் சரவணபவ'' பரதநாட்டிய நிகழ்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதி வியாழக்கிழமை மாலை 6மணிக்கு நல்லூர்சங்கிலியன் தோப்பில் இடம்பெறவுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தரும் ஸ்ரீமதி ராதிகா சுராஜித்தின் நெறியாள்கையில் அவரது நடனக்குழுவினர் வழங்கும் 'ஓம் சரவணபவ' பரத நாட்டிய அளிக்கைகள் மற்றும் வவுனியா நிருத்திய நிகேதன நடனக்கல்லூரியினர் வழங்கும் நிருத்தியாஞ்சலி என்பனவும் இடம்பெறவுள்ளன. (இ-3)

## ஐ.தே.க. ஆண்டு நிறைவு நிகழ்வுக்கு வெளிநாட்டு தலைவர்களுக்கு அழைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் 70 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வில் பங்கேற்குமாறு வெளிநாட்டு தலைவர்கள் பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி ஐக்கிய தேசியக் கட்சியின் 70 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு நடைபெறவுள்ளது.

கொழும்பு கெம்பல் மைதானத்தில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது.

ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன மற்றும் உள்நாட்டு அரசியல் கட்சித் தலைவர்கள் மற்றும் வெளிநாட்டு தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு இராஜதந்திரிகள், அரசியல் கட்சிகளின் முக்கிய பிரமுகர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்பார்கள் என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## யோஷிதவின் பாட்டிக்கு நீதிமன்ற அழைப்பாணை

யோஷிதவின் பாட்டி டெசி பொரஸ்ட் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என கொழும்பு மேலதிக நீதவான்லங்கா ஜயரத்ன உத்தரவிட்டுள்ளார்.

குறித்த உத்தரவு நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மவுண்ட் லாவினியாவில் உள்ள காணி விவகாரம் தொடர்பில் வாக்கு மூலம்பெறுவதற்காக குற்றப்புலனாய்வு பிரிவிற்கு யோஷிதவின் பாட்டியை அழைப்பதற்கான அறிவித்தல் ஒன்றை விடுக்குமாறு நீதிமன்றில் கோரியதன் அடிப்படையில் குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நலமருள்வாய் நல்லைக்குமரா

கொடியேறிகோலோச்சும் நல் குருபரனே
விழிவேணியமக்கு வெள்ளிமயில்வாகனனே
மஞ்சத்தில் அமர்ந்து நெஞ்சம் நிறைகுகனே
அஞ்சலனை அபயமளிப்பாய் சிவனாரின் சுதனே
சப்பைரதத்தில் நீதனியழகு செங்கோனே
எப்பவும் உனைப்பற்றவரம்தா எங்கோனே
தேரேறிதேசமெங்கும் வினைகளையும் திறலோனே
பார்போற்ற நாம் வாழ வழிகாட்டு முருகோனே
தீர்த்தமாடி அடியவர்க்கருளும் வடிவேலழகோனே
பார்த்தகண்களெல்லாம் பணிக்குமையா அருளோனே
பூங்காவனத்தில் அழகமரும் மெய் பொருளோனே
நீங்காவுன் நினைவுபாட அருள்புரி மருகோனே

-நாபரணி

## உருகுதய்யா என் உள்ளம்



காவடிகள் ஆடிவர
காத்திடுவாய் கதிர்வேலா
தேடிவரும் பக்தர் குறை
தீர்த்துவைப்பாய் திருவேலால்
ஆனந்தம் தருபவரே
ஆறுமுகா-உன்
ஆறுமுகப் பார்வையிலே
அகிலமெல்லாம் அசைகிறதே
வஞ்சனைகள் தீர்த்துவைக்கும்
வண்ணமயில் வடிவேலா
உந்தன் எழில்முகம் நாம் காண
உருகுதய்யா என் உள்ளம்
உன் திருவடி நாடிவர
ஏங்குதய்யா என் உள்ளம்
ஏங்குதய்யா என் உள்ளம்

-ச.அகல்யா, சண்டிலிப்பாய்.

## தமிழர் துயர் தீர்த்திடுவாய்

ஆதி சிவன் அருள் அழகன் அரும் நல்லூரில்
சோதி ஒளி வேலுடன் சுந்தரிகள் சோடியாக சுப்ரமணியன்
நாதியற்றோர் நம்தமிழர் துயரங்கள் தீர்த்திடவே
வீதியிலே விண்ணுயர் கோபுரவாசலில் விரைந்தே வருகிறான்

-விசாகஜன், தென்கோவை.

## அபயமளித்தருள்வாய்!



நல்லை நகர் வீதியிலே
வள்ளி தெய்வயானையுடன்
கொள்ளை யழகுடனே பவனி வந்து
இன்னல் தனைக் களையும்
தெள்ளு தமிழ்க்குமரா!
எல்லையில்லாக் கருணை மழை பொழியும்
கதிர்வேலழ கையா!
அல்லலுறும் எம்மவர்க்கு
அபயமளித்தருள்வாய்

-பொ.சிவானந்தராஜா,
கல்விக்கோட்டம் வேலணை.

## நல்லைக்கந்தன் சந்தவிருத்தம்

முன்னாளும் பின்னாளு மென்னாளுந் தொல்லைகள்
முன்னோக்கி வந்தபோதும்
உன்னாமஞ் சொல்லவே உருவாகு மிடரெலாம்
உடைபட்டு வோடிவிடும்
அன்பாலே யொன்றியே யாட்படு மடியாரை
ஆட்கொள்ளு மன்புவேலா
நன்றுகவி யென்றுமுனை நின்றின்று பாடவா
நல்லூரின் கந்தவேளே!

கலாபூஷணம், சந்தக்கவிஞர். நவ.பாலகோபால்

# ஹிலாரியின் மின்னஞ்சல்களை அரசு வெளியிடவேண்டும்



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் ஹிலாரி கிளின்டன் வெளி யுறவுத் துறை அமைச்சராக இருந்த பதவிக்காலத்தில் பயன்படுத்திய மின்னஞ்சல்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதியில் இருந்து அமெரிக்க உள்துறை அமைச்சகம் வெளியிட வேண்டும் என அமெரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்காவில் 2009-13 காலகட்டத்தில் வெளியுறவுத்துறை அமைச்சராக பதவி வகித்தவர் ஹிலாரி கிளின்டன். வெளியுறவுத்துறை அமைச்சராக பதவி வகித்த போது, தனது தனிப்பட்ட மின்னஞ்சல் கணக்கினை அரசு பணிகளுக்கு பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்து பெருத்த சர்ச்சையை ஏற்படுத்தியது.

கடந்த ஆண்டு இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டி அளித்த ஹிலாரி கிளின்டன், "தனிப்பட்ட மின்னஞ்சல் கணக்கை அரசுப் பணிக்கு பயன்படுத்த அனுமதிக்கப்படுகிறது. இருப்பினும் நான் இரண்டு மின்னஞ்சல் கணக்குகளை பராமரித்து வந்திருக்க வேண்டும். ஒன்றை தனிப்பட்ட தேவைகளுக்கும், மற்றொன்றை அரசுப்பணி தொடர்பானவற்றுக்கும் பயன்படுத்தி இருக்க வேண்டும். அதை செய்யாமல் இருந்தது தவறுதான். அதற்காக நான் வருந்துகிறேன். நான் அந்த தவறுக்கு பொறுப்பேற்கிறேன்" என தெரிவித்தார்.

இந்நிலையில், அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பதவிக்காலம் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது. இதனையடுத்து புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க எதிர்வரும் நவம்பர் மாதம் 8ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. இதில் களம்காண உள்ள குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயக கட்சி வேட்பாளர்களை தேர்வு செய்வதற்கான தேர்தல்கள் பல்வேறு மாகாணங்களில் நடந்து வந்தன. இதில் ஜனநாயக கட்சிவேட்பாளராக, முன்னாள் ஜனாதிபதி கிளின்டனின் மனைவியும், முன்னாள் வெளியுறவுத்துறை அமைச் சருமான ஹிலாரி கிளின்டன் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதற்கிடையே, ஹிலாரி கிளின்டனின் இரகசிய மின்னஞ்சல்களை பகிரங்கமாக வெளியிடப் போவதாக 'விக்கிலீக்ஸ்' நிறுவனர் ஜூலியன் அசாஞ்சே மிரட்டல் விடுத்துள்ளார்.

'விக்கிலீக்ஸ்' வெளியிடவுள்ள இரகசியங்கள் தற்போது அமெரிக்காவில் நடைபெற்று வரும் தேர்தல் பிரசாரம் மற்றும் வாக்குப்பதிவுக்கு முந்தைய கருத்து கணிப்புக்களை எல்லாம் தலைகீழாக புரட்டிப் போடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், தகவல் அறியும் உரிமையின்கீழ் இவ்விவகாரம் தொடர்பான வழக்கை விசாரித்துவரும் அமெரிக்க நீதிமன்றம், ஹிலாரி கிளின்டன் தனது பதவிக் காலத்தில் பயன்படுத்திய தனிப்பட்ட மின்னஞ்சல்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 13ஆம் திகதியில் இருந்து வெளியிட தொடங்க வேண்டும் என அமெரிக்க உள்துறை அமைச்சகத்துக்கு நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

# மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ளது

## சுவிஸ் ஆய்வாளர் அதிர்ச்சித் தகவல்

சுவிட்சர்லாந்து நாட்டில் எதிர்வரும் 2040 ஆம் ஆண்டு மிகப்பெரிய பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ளது என அந்நாட்டை சேர்ந்த புவியியல் வல்லுநர் ஒருவர் அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

சுவிஸில் உள்ள வாலைஸ் மாகாணத்தை சேர்ந்த Raphael Mayoraz என்ற புவியியல் ஆய்வாளர் தான் இந்த அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளார்.

செய்தியாளர்களை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய அவர் 'இத்தாலியில் ஏற்பட்ட பூகம்பத்தைப் போன்று எதிர்வரும் 2040ஆம் ஆண்டு சுவிட்சர்லாந்து நாட்டிலும் ஒரு மோசமான பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ளது' என தெரிவித்துள்ளார்.

சுவிஸ் புவி அமைப்பை பொறுத்தவரை கடந்த காலங்களில் 6 மற்றும் அதற்கும் மேலாக ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது.

குறிப்பாக, வாலைஸ்மாகாணத்தில் கடந்த 1946 ஆம் ஆண்டு ரிக்டர் அளவில் 6.1 என்றளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

எனினும், மிக மோசமான நிலநடுக்கமாக 6.6 என்றளவில் பேசல் மாகாணத்தில் கடந்த 1356 ஆம் ஆண்டு ஏற்பட்டது.

சுவிஸ்புவியமைப்பைபொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் 500 முதல் 800 நிலநடுக்கங்கள்ஏற்படுகின்றன. ஆனால், இவற்றில் பெரும்பாலானவை உணரப்படுவதில்லை.

எதிர்காலத்தில் மோசமான நிலநடுக்கம் ஏற்பட்டால், அதில் Valais, Basel மற்றும் Graubunden ஆகிய மாகாணங்கள் அதிகளவில் பாதிப்படைய வாய்ப்புள்ளது என Raphael Mayoraz தெரிவித்துள்ளார்.


சுவிஸில் நிலநடுக்கத்தில் இருந்து முன்னெச்சரிக்கையாக பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது கடந்த 1990 ஆம் ஆண்டில் இருந்து பின்பற்றப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ஆற்றில் கவிழ்ந்த பேருந்து

## 21 பேர் பரிதாபமாகப் பலி!

(காத்மண்டு)

**நேபாளத்தில் ஆற்றில் பேருந்து கவிழ்ந்து 21 பேர் பலியான சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.**



நேபாளத்தில் ரயுதாகத் மாவட்டம் பொகாராவில் உள்ள கயுர் என்ற இடத்தில் நேற்றுக்காலை பயணிகள் பேருந்து புறப்பட்டு சென்றது.

அந்த பேருந்து சித்வான் மாவட்டத்தில் நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தது.

அப்போது, திடீரென கட்டுப்பாட்டையிழந்து ஓடி வீதியில் இருந்து 100 மீற்றர் ஆழத்தில் ஓடும் திரிசுலி ஆற்றில் கவிழ்ந்து மூழ்கியது.

தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் அங்கு விரைந்தனர்.

அதற்குள் பேருந்தில் இருந்த 21 பேர் தண்ணீரில் மூழ்கிப் பலியாகினர். 17 பேர் காயம் அடைந்தனர்.

விபத்துக்குரிய காரணம் தெரியவில்லை. அது குறித்து விசாரணை நடைபெறுகிறது. (இ-7)

# கொலம்பியாவில் 52 ஆண்டுகளுக்குப் பின் உள்நாட்டுப்போர் நிறுத்தம்-ஒபாமா பாராட்டு

(வோஷிங்டன்)



தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள கொலம்பியாவில் அரை நூற்றாண்டு காலமாக நடைபெற்றுவந்த உள்நாட்டு போரை உடன்படிக்கை மூலம் முடிவுக்கு கொண்டு வந்த அந்நாட்டின் ஜனாதிபதிக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா பாராட்டு தெரிவித்துள்ளார்.

தென் அமெரிக்க கண்டத்தில் உள்ள நாடுகளில் ஒன்றான கொலம்பியாவில் கடந்த 52 ஆண்டுகளாக அரசு படைகளுக்கும், இடதுசாரி 'பார்க்' கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே போர் நடந்து வந்தது.

இதன் காரணமாக 2 இலட்சத்து 20 ஆயிரம் பேர் கொன்று குவிக்கப்பட்டனர். பல இலட்சம் பேர் இடம் பெயர்ந்தனர்.

இந்நிலையில் அரசுக்கும், 'பார்க்' கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்து வந்த பேச்சுவார்த்தையில் போரை நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது.

இது தொடர்பாக கொலம்பியா அரச தரப்பினரும், 'பார்க்' என்றழைக்கப்படும் மார்க்சிஸ்ட் கொரில்லா போராளிகளும் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர்.

இருதரப்பினரும் இணைந்து கூட்டறிக்கை வெளியிட்டனர்.

நாளை மறுதினம் 29 ஆம் திகதியில் இருந்து அரச தரப்பினரும் 'பார்க்' கிளர்ச்சியாளர்களும் ஆயுதங்களை துறந்து சமாதானத்தில் ஈடுபடுவார்கள்என அந்த கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுபற்றி கொலம்பியா ஜனாதிபதி ஜுவான் மேனுவல் சாண்டோஸ் குறிப்பிடுகையில்,

"துன்பம், வேதனை, துயரம் ஆகியவற்றின் முடிவுக்கான ஆரம்பம்தான் இந்தப் போர் நிறுத்த உடன்பாடு" என மகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

சமாதான உடன்படிக்கை எட்டப்பட்ட தகவலை அறிந்த அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜுவான்மேனுவலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். அப்போது அவர், சண்டை நிறுத்த உடன் பாட்டை ஏற்படுத்தியதற்காக ஜுவான் மேனுவலுக்கு பாராட்டு தெரிவித்தார். (இ-7)

# ஈரான் ரோந்துப் படகுமீது அமெரிக்க கடற்படை வீரர்கள் துப்பாக்கிச் சூடு

(வோஷிங்டன்)

அரபி பெருங்கடல் பகுதியில் ஓமன் வளைகுடா மற்றும் பாரசீக வளைகுடாவுக்கு இடையில் ஈரான் நாட்டின் அதிவிரைவு அதிரடிப்படை ரோந்துப் படகின் மீது அமெரிக்க கடற்படை கப்பலில் இருந்த வீரர்கள் இயந்திர துப்பாக்கிகளால் சுட்டு தாக்குதல் நடத்திய சம்பவத்தால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.



முன்னதாக நேற்று, முன்தினம் அரபி பெருங்கடல் பகுதியில் ஓமன் வளைகுடா மற்றும் பாரசீக வளைகுடாவுக்கு இடையில் உள்ள ஹோர்முஸ் ஓர்முசு நீரிணை பகுதி வழியாக சென்ற அமெரிக்க போர்க் கப்பல் மீது ஈரான் நாட்டின்கப்பற்படையை சேர்ந்த கப்பல்கள் படுவேகமாக மோதுவதுபோல் வந்த சம்பவத் தால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான 'யூ.எஸ்.எஸ். நிட்ஸே' என்ற போர்க்கப்பல் வந்த பாதை வழியே மிக வேகமாக வந்த ஈரான் நாட்டின் கப்பற்படையை சேர்ந்த 4 கப்பல்களில் இரு கப்பல்கள் 'யூ.எஸ்.எஸ்.நிட்ஸே' மீது மோதுவதுபோல் வந்த சம்பவத்தை மிக ஆபத்தானதாகவும், தொழில்முறை பாதுகாப்பை மீறிய அச்சுறுத்தலாகவும் கருதுவதாக அமெரிக்க இராணுவ தலைமையகமான பென்டகன் கண்டனம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினமிரவு, பாரசீக வளைகுடா கடற்பகுதியில் ஈரான் கடற்படைக்கு சொந்தமான அதிவிரைவு அதிரடிப்படை படகின்மீது அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான 'யூ.எஸ்.ஸ்குவால்' என்ற கண்காணிப்பு கப்பலில் இருந்த வீரர்கள் '.50 கேலிபர்' ரக இயந்திர துப்பாக்கிகளால் சுட்டு எச்சரிக்கை விடுத்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. (இ-7)

## ஊழல் மோசடியில் ஈடுபடவில்லை

# செய்தி குறித்து நடவடிக்கை எடுக்கவும் சட்டமா அதிபருக்கு ஜனாதிபதி பணிப்பு

(கொழும்பு)

**அவுஸ்திரேலிய செய்தி இணையத்தளமான Sydney morning Herald இல் கடந்த புதன்கிழமை வெளிவந்த செய்தி தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனது கவனத்தைச் செலுத்தியுள்ளதுடன், இந்தச் செய்தி தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு, சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.**

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப்பிரிவு, நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, 2009ஆம் ஆண்டு விவசாய மற்றும் கமத்தொழில் சேவைகள் அமைச்சராக பணியாற்றிய போது, அவரது பணிக்குழாமின் உத்தியோகத்தர் ஒருவர் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக வெளியான செய்தி குறித்து, ஜனாதிபதி தனிப்பட்ட கவனத்தைச் செலுத்தியுள்ளார்.

அவ்வாறான ஒரு சம்பவத்துடன் தமக்கு எவ்விதமான தொடர்போ, பங்களிப்போ இருக்கவில்லையென தெரிவிக்கும் அவர், மேற்குறிப்பிட்ட செய்தி தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியிருப்பதாக அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதேவேளை, தமது அரசியல் வாழ்க்கையில் ஒரு போதும் அவ்வாறான ஊழல் மற்றும் முறைகேடான செயற்பாடுகளில் ஈடுபடவோ, அவ்வாறான நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவோ, அவ்வாறான செயற்பாடுகளில் சம்பந்தப்படவோ இல்லையென்றும் அவர் தெரிவித்துள்ளதாக, குறித்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## லசந்த கொலையை நேரில் பார்த்த நபர் சாட்சியமளிக்கும் மனநிலையில் இல்லை



சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலையை நேரில் பார்த்த நபர் சாட்சியமளிக்கும் மனநிலையில் இல்லை என சட்ட வைத்திய அதிகாரி நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

அறிக்கை ஒன்றின் மூலம் இந்த விடயம் நேற்று முன்தினம் கல்கிஸை நீதிமன்றிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொலையை நேரில் பார்த்ததாகக் கூறப்படும் நபர் நீதிமன்றில் சாட்சியமளிக்கக் கூடிய மனோ நிலையில் இருக்கின்றாரா? என பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் அண்மையில் சட்ட வைத்திய அதிகாரிக்கு உத்தரவிட்டிருந்தது.

இதேவேளை இந்தக் கொலை தொடர்பிலான சந்தேக நபர்களின் தொலைபேசி மற்றும் வங்கிக் கணக்கு விபரங்கள் முழுமையாக இன்னமும் கிடைக்கவில்லை என புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

இராணுவப் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த 41 உத்தியோகத்தர்களின் கடன் விபரங்களை வழங்குமாறும் லசந்த கொலைக்காக பயன்படுத்திய ஆயுதம் பற்றிய விபரங்களை வழங்குமாறும் நீதவான் நேற்று முன்தினம் கடன் விபரங்கள் காரியாலயத்திற்கும் இராணுவத் தளபதி மற்றும் லங்கா லொஜிஸ்டிக் நிறுவனத்திற்கும் உத்தரவிட்டுள்ளார். புலனாய்வுப் பிரிவினரின் கோரிக்கைக்கு அமைய இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் ரிவிர பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் உபாலி தென்னக்கோன் தாக்குதல் சம்பவம் தொடர்பில் லசந்த கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள இராணுவ புலனாய்வுப் பிரிவு மேஜரை கம்பஹா நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறும் கல்கிஸை நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ-7)

## மீண்டும் தனது சுயரூபத்தை காட்டும் பசில்! தலைதெறிக்க ஓடும் மகிந்த அணியினர்



முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற சூழ்ச்சியான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ தரப்பின் அதிகாரத்தை தன் கையில் பெற்றுக் கொள்வதற்காக நுட்பமாக செயற்பட்ட பசில் ராஜபக்ஷ தற்போது வரையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் உள்ளூராட்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளை இணைத்துக் கொண்டு செயற்பாடொன்றை ஆரம்பித்துள்ளார்.

தன் மீது சுமத்தப்பட்டுள்ள பாரிய நிதி மோசடி மற்றும் ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் பசில் ராஜபக்ஷவுக்கு பல சந்தர்ப்பங்களில் விளக்கமறியல் செல்ல நேரிட்டது.

அவர் தனது சுயரூபத்தை கட்டியெழுப்பும் நடவடிக்கையாக, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் மகிந்த தரப்பு அலுவலகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அங்கு இடம்பெற்ற கலந்துரையாடல் நிறைவடைந்து வெளியே சென்ற பிரதிநிதிகளிடம் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போது கோபமாக பதிலளித்துள்ளதுடன், அங்கு மகிந்த தரப்பின் பிரதிநிதிகளுக்கு இடையில் மோதல் நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது.

எப்படியிருப்பினும் பசில் ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் உள்ளூராட்சி பிரதிநிதிகள் தனியாக செயற்படுவதற்கும், கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்ளாமல் இருப்பதற்கும், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியில் இருந்து விலகுவதற்கும் எதிர்வரும் தேர்தலில் பசில் ராஜபக்ஷவின் தலைமைத்துவத்தின் கீழ் போட்டியிடுவதற்கும் தீர்மானித்துள்ளதாக இவர்கள் தெரிவித்தனர்.

தனியாக கட்சி அமைக்கப்படாதென மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார் என ஊடகவியலாளர் ஒருவர் கூறியதற்கு "எங்களுக்கு மகிந்தவின் கதைகள் அவசியம் இல்லை. மகிந்த இருந்தாலும் இல்லை என்றாலும் நாங்கள் கட்சி ஒன்றை உருவாக்குவோம்" என தெரிவித்துள்ளனர்.

பசில் ராஜபக்ஷவின் வரவை தொடர்ந்து எதிர்த்தரப்பின் விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, பிரசன்ன ரணதுங்க, மகிந்தானந்த அலுத்கமகே, குமார வெல்கம ஆகிய பலர் அவருக்கு எதிராக கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

எனினும் மகிந்த ராஜபக்ஷவின் தலையீட்டினால் அவருக்கு மகிந்த தரப்பில் செயற்படுவதற்கான வாய்ப்பை விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, பிரசன்ன ரணதுங்க, மகிந்தானந்த அலுத்கமகே, குமார வெல்கமவினால் வழங்க நேரிட்டுள்ள நிலையில் திரைக்கு பின்னால் செயற்படுவதற்கான சந்தர்ப்பம் பசில் ராஜபக்ஷவுக்கு வழங்குப்பட்டுள்ளதாக விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார்.

பசில் ராஜபக்ஷ ஒரு சூழ்ச்சிக்காரர் எனவும் நாங்கள் அரசாங்கத்திற்கு செல்வதாக கருத்துக்களை அவரே பரப்பி வருவதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த தெரிவித்தார்.

எப்படியிருப்பினும் தற்போது வரையில் பசில், விமலின் திரையை கிழித்துக் கொண்டு மேடையில் ஏறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

## நல்லிணக்கப் பொறிமுறைக்கு 1155 பேரின் ஆலோசனைகள்

பொதுமக்களிடமிருந்து கருத்துக்களைப் பெறும் நல்லிணக்க பொறிமுறை பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியினரிடம் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து இதுவரை ஆயிரத்து 155 பேர் தம்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைத்துள்ளதாக அச்செயலணியின் மட்டக்களப்பு மாவட்ட குழுச் செயலாளர் ஏ.காண்டீபன் தெரிவித்தார்.

நல்லிணக்க பொறிமுறை பற்றிய கலந்தாலோசனைக்கான செயலணியின் அமர்வு மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 9ஆம் திகதி தொடக்கம் 24ஆம் திகதி வரை வாழைச்சேனை, களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு, வாகரை, பட்டிப்பளை மற்றும் ஏறாவூர் ஆகிய பிரதேசசெயலகங்களில் இடம்பெற்றன.

இதில் 09.08.2016 அன்று வாழைச்சேனையில் 278 பேரும் 12.08.2016 அன்று களுவாஞ்சிக்குடியில் 77 பேரும் 13.08.2016 அன்று மட்டக்களப்பில் 209 பேரும், 16.08.2016 அன்று வாகரையில் 90 பேரும், 18.08.2016 அன்று பட்டிப்பளையில் 235 பேரும், 24.08.2016 ஏறாவூரில் 366 பேருமாக இதுவரை மொத்தம் ஆயிரத்து 155 பேர் தமது ஆலோசனைகளையும் கருத்துக்களையும் முன்வைத்துள்ளனர்.

இந்த ஆலோசனைகளிலும் கருத்துக்களிலும் அதிகமானவை காணாமற்போனோர் சம்பந்தப்பட்ட விடயங்களாகவும், அடுத்தபடியாக காணிகள் சம்பந்தப்பட்டதாகவும், மூன்றாவது அதிகபடியான கருத்துக்களாக இனப்படுகொலை பற்றிய விவகாரங்களாகவும் இருந்ததாக காண்டீபன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## சம்பளத்தை 40 ஆயிரமாக உயர்த்த திட்டம்

(கொழும்பு)

தொழிலாளர்களின் ஆகக் குறைந்த அடிப்படைச் சம்பளம் 40 ஆயிரம் ரூபாவாக உயர்த்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய தொழிலாளர் சங்கத்தின் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தொழிலாளர்களின் ஆரம்ப அடிப்படைச் சம்பளத்தை 40 ஆயிரம் ரூபாவாக உயர்த்துவது தொடர்பில் அரசாங்கம் தொழில் கொள்வோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது.

இதற்கு அனைவரும் தமது ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும் எனவும் பிரதமர் கேட்டுக்கொண்டார். எதிர்வரும் இரண்டொரு வருடங்களுக்குள் இந்த இலக்கை அடைந்து கொள்ளும் வகையில் அரசாங்கம் தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

வெளிநாடுகளில் ஒரு தொழிலாளி குறைந்தது 300 டொலர் மாதாந்த சம்பளம் பெற்றுக் கொள்ளக் கூடியதாக உள்ளது. அந்த நிலை இலங்கையிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

அதன் மூலம் வெளிநாடு செல்வோரின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு, நாட்டின் முன்னேற்றம் கருதி மனித வளம் முழுமையாக பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார். (இ-7)

# 3 ஆண்டுகளில் 9,657 பேர் தற்கொலை

(கொழும்பு)

**இலங்கையில் கடந்த மூன்று ஆண்டுகளில் 9 ஆயிரத்து 657 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளதாக சட்டமும் ஒழுங்கும் அமைச்சு தெரிவித்துள்ளது.**

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போது, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற தற்கொலைகளின் எண்ண்ணிக்கை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு சட்டமும் ஒழுங்கும் அமைச்சு சபையில் சமர்ப்பித்த பதிலிலேயே மேற்படி தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 2013 ஆம் ஆண்டு 752 பெண்களும், 2 ஆயிரத்து 703 ஆண்களும், 2014 ஆம் ஆண்டில் 660 பெண்கள் உட்பட 2 ஆயிரத்து 484 பேரும் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

2015 ஆம் ஆண்டு 669 பெண்களும், 2 ஆயிரத்து 389 ஆண்களுமாக மொத்தம் 3 ஆயிரத்து 58 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

2013, 2014 ஆம் ஆண்டுகளில் இரத்தினபுரி பொலிஸ் பிரிவிலேயே கூடுதல் தற்கொலைகள் இடம்பெற்றுள்ளன என்றும், 2015 ஆம் ஆண்டு கண்டி பொலிஸ் பிரிவில் கூடுதலான தற்கொலை சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சிறைச்சாலையை அழகுபடுத்திய கைதிகள்; நினைவுச்சின்னம் வழங்கி வைத்த நீதிபதிகள்



(கொழும்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஓவியங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நீதிபதிகளினால் திறந்து வைக்கப்பட்டன.

மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் கே.எம்.யு. அக்பர் மற்றும் மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம ஜெயிலர் என்.பிரபாகரன் ஆகியோரின் வழிகாட்டலிலும் ஆலோசனையிலும், மட்டக்களப்பு சிறைச்சாலையிலுள்ள இரண்டு கைதிகளினால் மட்டக்களப்பு சிறைச்சாலை சுவரில் வரையப்பட்ட ஓவியங்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் எம்.கணேசராஜா மற்றும் களுவாஞ்சிக்குடி மற்றும் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்றங்களின் நீதிபதி எம்.ஐ.றிஸ்வி ஆகியோர் திரை நீக்கம் செய்து வைத்தனர்.


இந்த வைபவத்தில் மட்டக்களப்பு சிறைச்சாலையின் அத்தியட்சகர் கே.எம்.யு.அக்பர் மற்றும் பிரதம சிறை அலுவலகர் என்.பிரபாகரன் மற்றும் சிறைச்சாலை கைதிகள், நலன்புரிச் சங்க உறுப்பினர்கள் மற்றும் நலன்புரி உத்தியோகத்தர்கள், சிறைச்சாலை அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்த ஓவியங்களை வரைந்த இரண்டு கைதிகள் நினைவுச்சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு முன்னாலுள்ள சுவரில் இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

கைதிகளின் திறமையை வெளிப்படுத்தும் வகையிலும் அவர்களின் ஆற்றலைக் கொண்டு இந்த ஓவியங்கள் வரையப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு சிறைச்சாலையின் பிரதம சிறைஅலுவலகர் என். பிரபாகரன் தெரிவித்தார். (இ-7)

# மக்களின் கருத்துக்களை அன்றும் கேட்கவில்லை இன்றும் கேட்கவில்லை



ஐக்கிய தேசியக் கட்சியும், ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்த தேசிய அரசாங்கமொன்றே 2007ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அன்றும் மக்களின் கருத்துக்கள் கேட்கப்படவில்லை. அதேபோல, இன்றும் மக்களின் கருத்துக்கள் கேட்கப்படவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரண்டு கட்சியினதும் ஆதரவாளர்களிடம் அன்றும் தேசிய அரசாங்கம் அமைக்க வேண்டிய தேவையொன்று இருந்தது. ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் இங்கிருந்து பிரிந்து சென்று ஆட்சியமைத்தனர். இன்று ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் சில உறுப்பினர்கள், தாங்கள் பண்டாரநாயக்கவின் கொள்கையைப் பின்பற்றுவதாக கூறுகின்றார்கள்.

அவர்களும் அன்று சுதந்திரக்கட்சியில் இருந்தவர்களே எனத் தெரிவித்தார்.

கட்சியின் தேசிய மாநாட்டுக்கு கட்சியின் சார்பில் அனைவருக்கும் இம்முறை அழைப்பு விடுத்துள்ளோம். நாங்கள் கட்சியை முதன்மைப்படுத்தியே செயற்படுகின்றோமே ஒழிய, தனிநபர் பிரபலங்களை என்றுமே முதன்மைப்படுத்தவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## இன்று ஒரு தகவல்

### கை நழுவிப் போகும் காலம்

வாழ்க்கையில் திரும்பப் பெறமுடியாதவை உயிரும் நேரமும்.

இப்படிப் போனால் போனதுதான் என்று இருக்கும் காலத்தை நாம் எவ்வளவு உணர்ந்து சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் தெரியுமா?

தொலைபேசி என்றும் ஊர்வலம் என்றும் ஊர்வம்பு.அக்கப்போர் என்றும் தேவையற்ற விடயங்களில் தலையிட்டும் நேரத்தை எவ்வளவு வீணாக்குகிறோம்?

விருந்தினர்களை வரவேற்றும் நாம் பிறர் வீட்டிற்குப் போயும் விசேஷம் என்றும் விழா என்றும் மணிக்கணக்கில் நேரத்தைச் செலவழிக்கிறோம்-இல்லையில்லை-கொல்லுகிறோம்.

இவற்றையெல்லாம் காலவிரயம்-வீண் வேலை என்று நான் வாதிட முன்வரவில்லை.எதற்கும் ஓர் எல்லை வேண்டும்.

'நான் பத்து மணிக்கு ஆபிஸ் போகிறேன். ஆறு மணிக்குத் திரும்புகிறேன் மீதி நேரத்தை என்ன செய்ய? நேரத்தை எப்படிப் போக்குவது நான்?எனக்குப் போரடிக்கிறதே' என்று வாதிடுபவர்களுக்கு ஒரு சில கேள்விகள்.

உங்களுக்கென்று ஏதும் இலட்சியங்கள், ஆசைகள் இருக்கலாம். அவற்றை நோக்கி உறுதியாக முன்னேறுவது எப்படி என்று நீங்கள் திட்டமிட்டீர்களா?

போரடிக்கிறது எனச் சொல்லும் நீங்கள்,உங்கள் குடும்ப நலனுக்காக எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறீர்கள்?

வருமானம் போதவில்லை என்கிற நிலை நிலவுமானால் அதைப் பெருக்க என்ன வழிவகுத்திருக்கிறீர்கள்?

காலத்தைச் சுயநல நோக்கில் பயன்படுத்திக் கொள்வதுதான் புத்திசாலித்தனம் என்பதில்லை.உங்களுக்குப் போகாத பொழுதை மற்றவர்களின் நன்மைக்காகச் செலவிட்டால் உங்களைச் சுற்றி எவ்வளவு இனிமையான சூழ்நிலை உருவாகும் என்பதை எண்ணிப் பாருங்கள். நீங்கள் காண விரும்பும் ஒரு வெளியூர் நபர், இருக்கிறாரா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளாமல் புறப்பட்டுப் போவதில் எவ்வளவு பொருள் விரயம் எவ்வளவு கால விரயம்?

தகவல் தொடர்புகளில் கவனம் செலுத்தாமை,திட்டமிடப்படாத-வரையறை இல்லாத நடைமுறைகள்,எதற்கு முக்கியத்துவம் தருவது எனத் தெரியாத தெளிவற்ற நிலை.மூளையைச் சரிவரப் பயன்படுத்தாமை ஆகியவற்றால் எவ்வளவு கால விரயங்கள் ஏற்படுகின்றன!

காலம் என்பது ஓர் அற்புதமான இயந்திரம்.அதைச் சரிவர இயக்கிப் பயன்படுத்துபவர்கள் அதைக் காசாக்குகிறார்கள். சிலர் அதைக்கொண்டு நற்பெயரைச் சம்பாதித்துக்கொள்கிறார்கள்-வாழ்க்கையில் உயர்கிறார்கள்.

சரிவரப் பயன்படுத்தாதவர்களோ அதைத் துருப்பிடிக்க விட்டுவிட்டு விதியைப் போய் நொந்து கொள்கிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

# கிராம சேவையாளர் போட்டிப்பரீட்சை-2016

பொதுஅறிவு (பயிற்சிக்குரியது)

## தொகுப்பு:-T.Thirumurugan (B.A.Dip.In Poli.Ed.Dip.In.HR)

01.இலங்கையின் பிரதேச செயலாளர் பிரிவுகளின் எண்ணிக்கை யாது?
1. 332 2. 335 3. 271 4. 14022

02.கிராம அலுவலகர் என்னும் பெயர் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட ஆண்டு?
1. 1970 2. 1975 3. 1960 4. 1972

03.இலங்கையின் புராதன வரலாற்றை கூறும் நூல் எது?
1. மகாவம்சம் 2.சூளவம்சம் 3.தீபவம்சம் 3.மகாபோதி வம்சம்

04.இலங்கையின் முதலாவது செயற்கைக்கோள் எந்த நாட்டில் இருந்து செலுத்தப்பட்டது?
1.சீனா 2.ஜப்பான் 3.அமெரிக்கா 4.இந்தியா

05.புவியியல் மற்றும் அரசியல் தலையீடு இன்றி இலங்கைக்கு உதவும் வளர்முக நாடு எது?
1.அமெரிக்கா 2.ஜப்பான் 3.சீனா 4.இந்தியா

06.இந்தியாவின் 29ஆவது மாநிலமாக உருவாக்கப்பட்டது எது?
1.தெலுங்கானா 2.தமிழ்நாடு 3.ஒரிசா 4.கேரளா

07.இலங்கைகயில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?
1. 1976 2. 1972 3. 1986 4. 1982

08. இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்பு கிராம அலுவலராக கடமையாற்றி உள்ளார். அவர் கடமையாற்றிய ஆண்டு எது?
1. 1970 2. 1976 3. 1980 4. 1985

09. "உலக சிறுநீரக தினம்" அனுஷ்டிக்கப்படும் தினம் யாது?
1.மார்ச் - 22 2. மார்ச் - 10 3.மார்ச் - 20 4.ஜூன் - 05

10.2015 ஆம் ஆண்டு ஒரு நாடு தனது நாணய சீன நாணய அலகான யூவானை ஏற்றுக்கொண்டது. அந்த நாடு எது?
1.சிம்பாவே 2.லிதுவேனியா 3.காம்பியா 4.ருவண்டாஸ

11.பிரிட்டனில் இருந்து 1970 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்ற நாடு என்று அண்மையில் தனது நாட்டு தேசிய கொடியில் இருந்து பிரிட்டன் முத்திரையை நீக்கியது. அந்த நாடு எது?
1.தாய்லாந்து 2.பிஜிதீவு 3.சிங்கப்பூர் 4.சீனா

12.இலங்கையில் தற்போது பாராளுமன்ற சபாநாயகராக கரு ஜெயசூரிய விளங்குகிறார். இவர் இலங்கையின் எத்தனையாவது சபாநாயகர்?
1. 15 ஆவது 2. 14 ஆவது 3. 13 ஆவது 4. 12 ஆவது

13.கிராம அலுவலர் ஒருவரது கடமைப்பங்கில் உள்ளடங்கும் முழு குடும்பங்களின் எண்ணிக்கை யாது?
1. 300 தொடக்கம் 500 வரை 2. 200 தொடக்கம் 400 வரை
3. 500 தொடக்கம் 600வரை 4. 0 தொடக்கம் 1000 வரை

14.இலங்கையில் மிக நீளமான வீதி எது?
1. A4 2. A9 3. A5 4. A15

15.இலங்கையின் கூடிய மழைவீழ்ச்சி பெறும் இடமாக மாலிப்பொட விளங்குகின்றது. இது எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
1.இரத்தினபுரி 2.கண்டி 3.மாத்தளை 4.நுவரெலியா

16. கூடிய பிரதேச செயலாளர் பிரிவு கொண்ட மாவட்டம் எது?
1.கண்டி 2.குருநாகல் 3.கொழும்பு 4.நுவரெலியா

17.இலங்கையின் முதலாவது N.I.C (தேசிய அடையாள அட்டை) 1972 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. அதை முதலில் பெற்றுக்கொண்டவர் யார்?
1. S.R.W.D பண்டாரநாயக்க 2. சிறிமாவோ பண்டாரநாயக்க
3. D.S. சேனநாயக்க 4. C.W.W. கன்னங்கரா

18.இலங்கையில் 2015 ஆம் ஆண்டு அறிக்கையின் பிரகாரம் தலாவருமானத்தில் இறுதி இடத்தில் உள்ள மாகாணம்?
1. வடக்கு மாகாணம் 2.கிழக்கு மாகாணம்
3.மேல் மாகாணம் 4.வடமத்திய மாகாணம்

19.2016 இல் உலக சுகாதார தாபனத்தின் உச்சி மாநாடு நடைபெறும் இடம் யாது?
1. கொழும்பு 2.லண்டன் 3.ஒஸ்லோ 4.ரியோ டி ஜெனிரோ

20.உலகெங்கிலும் உள்ள சகல மனித உரிமைகளையும் பாதுகாப்பதற்காகவும் விருத்தி செய்வதற்காகவும் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஆகும். இது எத்தனை அங்கத்துவ நாடுகளைக் கொண்டது?
1. 33 2. 47 3. 51 4. 77

21. 2015 நவம்பர் மாதம் பின்வரும் எந்நாட்டில் பாரிய நிலச்சரிவு ஏற்பட்டு நூற்றுக் கணக்கானோர் பலியாகினர்?
1. பிரேசில் 2.நேபாளம் 3.மியன்மார் 4.கவுதமாலா

22. இலங்கையில் ஒவ்வோர் ஆண்டும் நீரிழிவு நோய் காரணமாக இறக்கும் மனிதர் களின் எண்ணிக்கை ஏறத்தாழ
1. 10000 2. 20000 3. 30000 4. 40000

23.தற்போது பின்வரும் எந்நாட்டில் எபோலா உயிர்க்கொல்லி வைரஸ் பற்றிய பீதி அதிகமாகவுள்ளது?
1.தென்கொரியா 2.நைஜீரியா 3.குரோஷியா 4.துவாலு

24.இந்திய றிசேவ் வங்கியின் ஆளுநர் அண்மையில் இலங்கையில் நடைபெற்ற எவ் வங்கியின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் விசேட உரையாற்றினார்?
1.இலங்கை மத்திய வங்கி 2.இலங்கை வங்கி
3.மக்கள் வங்கி 4.கொமர்ஷல் வங்கி

25.உலகளாவிய ரீதியில் தீவிரவாதத் தாக்குதல்கள் அதிகமான நாடு பின்வருவனவற் றுள் எது?
1. ஆப்கானிஸ்தான் 2.சிரியா 3.ஈராக் 4.பாகிஸ்தான்

26.இலங்கையின் தற்போதைய மொத்த உள்நாட்டு உற்பத்தி அண்ணளவாக எத்தனை பில்லியன் ஐக்கிய அமெரிக்க அரசுகள் டொலர் ஆகும்?
1. 19 2. 38 3. 75 4. 85

27.பாடசாலை மாணவர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் நலன் கருதி மலைப்பகுதி ஒன்றில் தகவல் தொடர்பு மத்திய நிலையம் ஒன்று அமைந்துள்ள மாவட்டம் யாது?
1.அம்பாந்தோட்டை 2.கொழும்பு 3.நுவரெலியா 4.மாத்தளை

28.அண்மையில் காலமாகிய சாம் விஜேசிங்க
1.அரச தூதுவராவார்.
2.எழுத்தாளராவார்.
3.புகைப்படக் கலைஞராவார்.
4.குறைகேள் அதிகாரியாவார் (ஓம்புட்ஸ்மன்)
5.பொறியியலாளராவார்.

29. 2016 இல் இருபதுக்கு இருபது (20-20) கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற நாடு யாது?
1.நியூசிலாந்து 2.மேற்கிந்தியா 3.அவுஸ்திரேலியா 4.பாகிஸ்தான்

30.அண்மையில் விண்வெளிக்கு நாசா அனுப்பிய மெசெஞ்சர் விண்கலம் எக் கிரகத்துடன் மோதி நொறுங்கியது?
1.புதன் 2.செவ்வாய் 3.சனி 4.வியாழன்

31.ஐ.நா.வெளியிட்டுள்ள அறிக்கையின்படி உலகில் அதிக மக்கள் தொகை கொண்ட முதலாவது நகரம் யாது?
1.டோக்கியா 2.புதுடில்லி 3.ஹங்காய் 4.பீஜிங்

32.சார்க் நாடுகள் பின்வரும் எத்துறை தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன?
1.மின்சாரம் 2.உயர்கல்வி
3.தகவல் தொழில்நுட்பவியல் 4.மருந்தகக் கைத்தொழில்

33.இலங்கை விமானப்படை ஐ.நா. அமைதி காக்கும் படைக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட நாடு யாது?
1.பாலஸ்தீனம் 2.ஆபிரிக்க குடியரசு 3.பிஜி 4.கென்யா

34. 2015 இல் பழனி குமரன் செய்த பங்களிப்புக்காக பின்வருவனவற்றில் எதனைப் பெற்றார்?
1.ஒஸ்கார் விருது 2.புலிற்சார் பரிசு 3.ஒரேஞ்சுப் பரிசு 4.புக்கர் பரிசு

35.பின்வரும் எந்த நாட்டில் உள்ளூர் நேரம் தற்போது உள்ளதை விட 30 நிமிடங்கள் குறைக்கப்பட்டுள்ளது?
1.பிலிப்பைன்ஸ் 2.தென்கொரியா
3.வட கொரியா 4.பாலஸ்தீனம்

36.உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானியும் இந்தியாவின் முன்னாள் குடியரசுத் தலைவ ருமான டாக்டர் அப்துல் கலாமின் பிறந்த நாளை முன்னிட்டு இலங்கையில் வெளி யிடப்பட்ட கவிதைத் தொகுப்பின் பெயர் யாது?
1.அக்கினிச் சிறகுகள் 2.அக்கினிக் குஞ்சு
3.சத்திய சோதனை 4.என் வழியில்

37. 2015 இல் ஒரு நாட்டில் முதலாவது பெண் பிரதமராக அந்நாட்டு உச்ச நீதிமன்ற நீதிபதி நியமிக்கப்பட்டார். அந் நாடு யாது?
1. நேபாளம் 2.கியூபா 3.ஜப்பான் 4.கிரேக்கம்

38.அண்மையில் உலகம் முழுவதிலும் 91 நாடுகளில் செயற்படுத்தப்பட்ட கடற்கரையை சுத்தப்படுத்தும் தேசிய செயற்றிட்டமானது இலங்கையிலும் கடந்த செப்டெம்பர் மாதம் 17 ஆம் திகதி ஜனாதிபதியின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையில் கடற்கரை அமைவிடம் தொடர்பான சரியான கூற்று இவற்றுள் எது?
1.கடற்கரையுடன் கூடிய 12 மாவட்டங்கள் உள்ளன.
2.கடற்கரையுடன் கூடிய 13 மாவட்டங்கள் உள்ளன.
3.கடற்கரையுடன் கூடிய 14 மாவட்டங்கள் உள்ளன.
4.கடற்கரையுடன் கூடிய 15 மாவட்டங்கள் உள்ளன.

39.இலங்கையில் தற்போதைய தேர்தல் மாவட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
1. 25 2. 24 3. 23 4. 22

40.அண்மையில் திறந்து வைக்கப்பட்ட கடுவலை-கடவத்தையை இணைக்கும் அதிவேக பாதையை நிர்மாணிப்பதற்கு உதவி வழங்கிய நாடு எது?
1.ஜப்பான் 2.சீனா
3.இந்தியா 4.ஐக்கிய அமெரிக்க அரசுகள்

41.யானை - மனித பிரச்சினையினால் இதுவரை நடைபெற்ற யானை மற்றும் மனித இறப்புக்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள மாகாணம் எது?
1.வடமத்திய 2.வடமேல் 3.பிரேசில் 4.ஊவா

42.கல்வி சீர்திருத்தத்திற்காக தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றுவரும் இலத்தீன் அமெரிக்க நாடு?
1.சிலி 2.பொலிவியா 3.பிரேசில் 4.ஆர்ஜென்டீனா

43.இலங்கைக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் 1919 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இலங்கை தேசிய சங்கத்தின் (Ceylon league) முதலாவது தலைவர்
1.பொன்னம்பலம் அருணாசலம் 2.எப்.ஆர்.சேனநாயக்க
3.டி.எஸ்.சேனநாயக்க 4.ஜே.ஆர்.ஜெயவர்த்தன

44.உலகில் முதல் முறையாக ஒட்டுக்கேட்க வழியில்லாத அதி நவீன தொலைத்தொடர்பை வெற்றிகரமாக விண்ணில் ஏவிய நாடு எது?
1.அமெரிக்கா 2.சீனா 3.இந்தியா 4.வடகொரியா

45.ஓசோன் படைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இலங்கையினால் செய்யப்பட்ட பணிகளுக்காக விசேட விருதொன்று கிடைக்கப்பெற்றது. ஓசோன் படைகளை பாதுகாக்கும் முதலாவது பிரகடனம் இவற்றுள் எது?
1.மொன்றியல் பிரகடனம் 2.வியன்னா பிரகடனம்
3.கியோடோ பிரகடனம் 4.பேசல் பிரகடனம்

46.கடல் பிரதேசங்களின் உரிமை தொடர்ச்சியாக அதிக எண்ணிக்கையான அயல் நாடுகள் கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருப்பது இவற்றுள் எந்த நாடாகும்.
1.சீனா 2.இந்தியா
3.இந்தோனேசியா 4.பிலிப்பைன்ஸ்

47.இல்ங்கையின் உதவி நன்கொடைகள் பெறும் பாடசாலைகள் அரசிடம் எந்த வருடத்தில் ஒப்படைக்கப்பட்டது?
1. 1960 2. 1961 3. 1962 4. 1963

48.கடந்த 2015 ஜூலை மாதம் வெளியிடப்பட்ட சனத்தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கைக்கேற்ப இலங்கையில் வயது வந்தோரான மக்களில் 2.6 இலட்சம் பேர் எந்தவொரு நாளிலும் பாடசாலைக்கு சென்றிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது இந்நாட்டின் வயது வந்தோர் சனத்தொகையின் சதவீதமாக எடுக்கும் போது
1. 12.5% அளவினர் ஆகும். 2. 10% அளவினர் ஆகும்.
3. 8% அளவினர் ஆகும். 4. 6% அளவினர் ஆகும்.

49. இனவாதம் மற்றும் மதவாதத்தினால் பிரிந்து பாதிப்புக்கு உட்பட்ட ஐரோப்பிய நாடு இவற்றுள் எது?
1.இந்தியா 2.ஆஸ்திரியா 3.யூகோஸ்லாவியா 4.ஹங்கேரி

50.ஜனநாயக நிர்வாக கட்டமைப்பை வலுமிக்கதாக்கும் நோக்கத்துடன் தற்போதைய அரசின் கீழ் நிறுவுவதற்கு எதிர்பார்த்துள்ள ஆணைக்குழுக்களின் எண்ணிக்கை எவ்வளவு? 1. 8 2. 9
3. 10 4. 11

◆◆◆

# கிராம சேவையாளர் போட்டிப்பரீட்சை-2016

## நுண்ணறிவு (பயிற்சிக்குரியது)

## தொகுப்பு:-T.Thirumurugan (B.A.Dip.In Poli.Ed.Dip.In.HR)

◆ 01 - 05 வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் நான்கு சொற்கள்படி தரப்பட்டுள்ளன. அவற்றுள் மூன்று சொற்கள் குறித்தொரு இயல்பிற்கேற்ப ஒன்றுக்கொன்று சமமான தொடர்பை குறித்து நிற்கின்றன. அவ்வாறான சமமான தொடர்பை காட்டாத எஞ்சிய சொல்லைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவான இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | 1.சிங்கம் | 2.புலி | 3.யானை | 4.கரடி | (......) |
| 02. | 1.மழை | 2.வரட்சி | 3.பூமியதிர்ச்சி | 4.தொற்றுநோய் | (......) |
| 03. | 1.பலா | 2.தென்னை | 3.கமுகு | 4.பனை | (......) |
| 04. | 1.பப்பாசி | 2.றம்புட்டான் | 3.தோடம்பழம் | 4.மாதுளை | (......) |
| 05. | 1.வேர்கள் | 2.பூக்கள் | 3.இலைகள் | 4.காய்கள் | (......) |

◆ 06-10 வரையுள்ள ஒவ்வொரு வினாக்களின் கீழேயும் A,B,C,D என்றவாறான குறித்த நிகழ்வுத்தொடர் அல்லது தகவல் தொடர் ஒன்று சரியான ஒழுங்கு முறையின்றித் தரப்பட்டுள்ளன. அந்த நிகழ்வு அல்லது தகவல் தொடரினை ஒழுங்கமைக்கக்கூடிய சரியான ஒழுங்கு முறையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவின் இலக்கத்தை எழுதுக.

06. A -உமக்கு இன்னமும் அவசியப்பட்டால் இங்கே குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு உமது பிரச்சினைகளை முன்வையுங்கள்
B -இந்தத் தகவல் படிவத்தில் காட்டப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் மூலம் உமது சில பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு உமக்கு சந்தர்ப்பம் கிடைக்கும்.
C. செலவுகளுக்கு நிகராக வருமானங்கள் கிடைக்கப்பெறாது இருப்பது உங்களில் அநேகமானவர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினையாகும்.
D. இந்தப் படிவத்தில் நீங்கள் நீங்கள் முகங்கொடுத்த பிரச்சினை தொடர்பாக உள்ளது அவதானத்தைச் செலுத்துங்கள்.
1.DCBA 2.BCDA 3.CBDA 4.CDBA

07. A. பாத்திரத்தின் நான்கில் மூன்று பங்கு பாலினால் நிரப்பப்பட்டுள்ளது.
B. பாத்திரத்தின் அரைவாசி பாலினால் நிரப்பட்டுள்ளது.
C. இதயன் என்பவர் பாத்திரத்தின் அரைவாசிக்கு சமமான பாலின் அளவினை பாத்திரத்திற்குச் சேர்த்தார்.
D. இந்தப் பாத்திரத்தில் பின் எஞ்சியுள்ள பாத்திர அளவின் அரைவாசிப் பகுதிக்கு பால் சேர்க்கப்பட்டது.
1.DCBA 2.BCDA 3.CBDA 4.CDBA

08. A. அந்தப் பாதையால் மைதானத்திற்கு செல்ல வேண்டுமெனின் நீர் பொலிஸ் நிலையத்தைக் கடந்து வலது பக்கமாக திருப்பிச் செல்ல வேண்டும்.
B. மைதானத்திற்குச் செல்லக்கூடிய இலகுவான பாதை அதுவாகும்.
C. மைதானத்தை விரைவில் சென்றடைவதற்கு வேண்டுமெனின் நீர் மற்றைய பாதையில் பயணம் செய்ய வேண்டும்.
D. நூல் நிலையத்துக்கு அருகிலுள்ள மைதானத்திற்கு செல்லக்கூடிய பாதை வாகனங்கள் அதிகமானதும் தூரம் கூடிய பாதையுமாகும்.
1.DCBA 2.BCDA 3.CBDA 4.CDBA

09. A. தேவையற்ற எல்லா கோப்புக்களையும் வேறாக்க வேண்டும்.
B. தேவையற்ற கோப்புக்கள் பரீட்சிக்கப்பட்டு இனங்காணப்பட வேண்டும்.
C. எல்லா கோப்புகளும் பரீட்சிக்கப்பட வேண்டும்.
D. வேறாக்கப்பட்ட தேவையற்ற கோப்புக்கள் தொடர்பாக பட்டியலொன்று தயாரிக்கப்பட வேண்டும்.
1.DCBA 2.BCDA 3.CBDA 4.CDBA

10. A. ஞானசேகரன் நேரான சிந்தனை கொண்ட பேச்சாளராக விசேட பெயரைப் பெற்றுக்கொண்ட நபராவார்.
B. ஞானசேகரன் வாழ்க்கையை ஆரம்பிக்கும்போது கிராம அலுவலராகவே இருந்தார்.
C. வட மாகாணத்தில் பிறந்த ஞானசேகரன் பல்வேறு திறமைகளினால் முன்னேறிய நபராவார்.
D. ஞானசேகரன் நேரான சிந்தனை தொடர்பாக பிரபல்யமான புத்தகங்களையும் எழுதி இருந்தார்.
1.DCBA 2.BCDA 3.CBDA 4.CDBA

◆ 11 தொடக்கம் 15 வரையுள்ள ஒவ்வொரு வினாவின் கீழேயும் குறித்ததொரு இரகசிய மொழிக்கு மொழிபெயர்க்கப்பட்ட மூன்று உள்ளடக்கங்கள் படி தரப்பட்டுள்ளன. அந்த இரகசிய மொழிக்கு ஏற்ப கறுத்த தடித்த எழுத்தினால் காட்டப்பட்டுள்ள உள்ளடக்கத்தை மொழி பெயர்க்கக் கூடிய முறையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

11. உம்மா வீட்டிற்கு போய்விட்டார் - நிகி மாதா மாதே
வீட்டிற்கு கதவு மூடப்பட்டுள்ளது - மாதே பாலா மானி
பிரதான வாயில் மூடப்பட்டுள்ளது - மோ பாலா தாகி
**வீட்டிற்கு உள் அறை மூடப்பட்டுள்ளது.**
1.மாதே மானி நாசி பாலா 2.நாசி மாதே மாதா பாலா
3.மாதா பாலா மோனி நாசி 4.மாதே மோனி நிகி பாலா

12. வெயிலுக்கு மரம் நனையும் - பூசி தேசக வாசி
மரம் காற்றுக்கு விழும் - வசி மா வாசி
காய் விழும் - வசி பசி
**மரம் ஆடி அசைந்து விழும்**
1.வசி மாசி வாசி பாகே 2.வாசி வசி பாகே பூசி
3.வசி பூசி மா பசி 4.வாசி பூசி வசி மா

13. கணிதம் கஷ்டமான பாடமாகும் - நமோ சகி மனோ
சமயம் இலகுவான பாடமாகும் - நமோ சிசு தாகி
பரீட்சை கடினமாகும் - வாதா பூமா
**மொழி முக்கியமான பாடமாகும்.**
1.நமோ வாதா மீ 2.சுகி மணி மோ
3.சிசு வாதா நீ 4.நமோ மணி நீ

14. மா மற்றும் பப்பாசி - மானி நகி சாது மாகே
பப்பாசி மற்றும் வாழை - சாது நகி கோ
பழுத்த சிவப்பு ஜம்பு - மாகோ சீ வாகி
**றம்புட்டான், ஜம்பு மற்றும் பப்பாசி**
1.நகி கோ சாது மாகே 2.வீசா நகி சாது மாகே
3.சாது சீ மாகே வீ 4.சாமா சாது சீ வாகி

15. நீல புத்தகம் - மா சீது
நீல பாய் - தாதே வாகி
மலர் தோட்டம் - பாசி மாதா
**பெரிய தேங்காய் தோட்டம்**
1.மா ராகா மாதா 2.நீசா ராகா மாதா
3.மாதா தாதே மீ 4.பாசி சீது வாலா

◆ 16- 20 வரையுள்ள வினாக்கள் திருமணமான இரு சோடியினர் உள்ள குடும்பமொன்றினதும் உறுப்பினர்கள் தொடர்பாக கீழே தரப்பட்ட தகவல்களை அடிப்படையாக கொண்டவை.

◆ P,Q,R,S,T,U என்ற பெயரைக் கொண்ட ஆறு பேர் திருமணமான இரு சோடியினர் உள்ள குடும்பமொன்றினதும் உறுப்பினர்கள் ஆவார்கள். அவர்களுள் மூவர் பெண்களாவாதோடு மற்றைய மூவரும் ஆண்களாவார்கள்.

◆ இந்தக் குழுவினரிடையே ஆசிரியர், எழுதுவினைஞர், வைத்தியர், கிராமஅலுவலர், முகாமையாளர் போன்ற ஒரு அலுவலர் படி உள்ளனர். அவ்வாறே ஒருவர் மட்டும் தொழில் இன்றி உள்ளார்.

◆ U ஆனது தாத்தா முகாமையாளர் ஆவார். அவ்வாறே U,T என்பவர்களது தாய் Q ஆவார்.

◆ தொழில் இல்லாது இருக்கும் R இனது மனைவி ஆசிரியையாவார்.

◆ வைத்திய தொழிலைச் செய்யும் S என்பவர் திருமணம் முடித்திருப்பது U இனது தாத்தாவுடனாகும்.

◆ கிராம அலுவலர் ஒரு ஆணாகும்.

இந்தத் தகவல்களுக்கேற்ப கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிற்குமான சரியான விடையைத் தெரிவு செய்து அதற்குரிய தெரிவினது இலக்கத்தை வினாவின் எதிரேயுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

16. A இனது தொழில் என்ன ?
1.எழுவினைஞன் 2.கிராமஅலுவலர்
3.முகாமையாளர் 4.ஆசிரியர்

17. திருமணமான சோடியினராக இருப்பவர்கள் இவர்களுள் யாவர்?
1.R உம் Q உம் 2.R உம் S உம்
3.P யும் Q உம் 4.U உம் R உம்

18. கீழேயுள்ள கூற்றுக்களுள் நிச்சயமாக உண்மையான கூற்று எது?
1.T இனது தாய் ஒரு வைத்தியராகும் 2.T இனது தந்தை R ஆகும்
3.U இனது மூத்த சகோதரி T ஆவார் 4.U என்பவர் P இனது பேரனாவார்

19. Q இனது தொழில் என்ன?
1.எழுதுவினைஞன் 2.கிராமஅலுவலர்
3.முகாமையாளர் 4.ஆசிரியர்

20. U இனது தொழில் தொடர்பாக கீழேயுள்ள கூற்றுக்களுள் எது உண்மையாகும்.
1.நிச்சயமாக எழுதுவினைஞராகும்
2.நிச்சயமாக கிராம அலுவலராகும்.
3.எழுதுவினைஞர் அல்லது கிராமஅலுவலர்
4.எழுதுவினைஞர்அல்லது கிராம அலுவலர் இல்லை

21. மூன்றால் வகுக்கும் போது ஒன்றும் ஐந்தால் வகுக்கும் போது மூன்றும் ஏழால் வகுக்கும் போது ஐந்தும் மிகுதிகளாக வரும் மிகச் சிறிய எண்ணை தருக?
1. 105 2. 103 3. 95 4. 90

22. சமனிடம் உள்ள பணத்தில் 250/= ரூபாவினை கமலுக்கு கொடுத்தால் கமலிடம் உள்ள பணம் இருமடங்காவதோடு சமனிடம் உள்ள பணம் அரைவாசியாகும். அவ்வாறெனின் அவர்கள் இருவரிடமும் உள்ள பணத்தின் கூட்டுத்தொகை எத்தனை ரூபாய்களாகும்.
1. 500/= 2. 1000/= 3. 750/= 4. 250/=

23. புகைப்படமொன்றில் காணப்படும் நபரொருவரைக் காட்டி குறித்த பெண்ணொருவர் கூறியதாவது. படத்தில் காணப்படும் நபரினது சகோதரனின் தந்தையானவர் அவளது தாத்தாவிற்கு உள்ள ஒரே ஒரு மகன் ஒன்றாகும். அந்தப் பெண் படத்தில் உள்ள நபருக்கு என்ன முறையாக இருக்க முடியும்.
1.சகோதரி 2.மாமி 3.தாய் 4.மகள்

24. தாயொருவரின் வயது அவரின் மகனின் வயதைப் போல நான்கு மடங்காகும். இன்னும் 5 வருடங்களின் பின்னர் அந்த தாயின் வயது மகனின் வயதைப் போல் மூன்று மடங்காகும். அவ்வாறெனின் தாயின் தற்போதைய வயது எத்தனை வருடங்களாகும்?
1. 25 2. 30 3. 35 4. 40

25. குறித்ததொரு உற்பத்தி நிறுவனம் ஒன்றின் மூலம் சீனியைப் பொதி செய்வது 2,4,5 கிலோகிராம் என்றவாறான நிறையைக் கொண்ட பொதிகளாகும். மேலும் ஒரே சமனான நிறையைக் கொண்ட பொதியின் சிலவற்றை உள்ளடக்கிய பெட்டியொன்றாகப் பொதியிடப்பட்டன. அவ்வாறான ஒவ்வொரு பெட்டியினுள் உள்ள சீனியினது அளவு நிறைகளில் சமனாகும். குறித்த தொகை சீனியானது ஒவ்வொரு வகைப் பொதிகளையும் உள்ளடக்கிய பெட்டியில் உள்ள சீனியின் அளவு சம நிறைப்படி இருந்தன. இந்த தொகையில் உள்ள மொத்த பொதிகளின் எண்ணிக்கை 38 எனின். அந்த பெட்டியொன்றில் உள்ளடக்கப்பட்டுள்ள சீனிப் பொதிகளின் மொத்த நிறை எத்தனை கிலோகிராம்களாகும்?
1. 20 2. 40 3. 60 4. 30

◆◆◆

இவ் வினாத்தாளுக்குரிய விடைகள் நாளைய வலம்புரியில் பிரசுரமாகும்

தொடர்பு-வலம்புரி கல்விப்பிரிவு
தொ.பே:-076 6363 378

# ஆர்ப்பாட்டங்களை கலைக்கும் மக்கள் விடுதலை முன்னணியினர்

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஒன்றிணைந்த எதிர்க்கட்சி அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கும் ஆர்ப்பாட்டங்களை கலைக்கும் நோக்கில் மக்கள் விடுதலை முன்னணி செயற்பட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் பிரசன்ன ரணதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

இந்நிலையில் மகள் விடுதலை முன்னணி அரசாங்கத் தரப்பின் பங்குதாரர்களாக அவர்களுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகின்றனர் எனவும் பிரசன்ன ரணதுங்க கொழும்பில் நேற்று நடந்த சந்திப்பில் தெரிவித்துள்ளார். (இ-7)


**பணிநிலை வேண்டுகை**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல் , தளபாட காட்சி அறைக்கு

♦Electrician- Rs.18000/= ♦Show room Marketing Sales & Executives (Girls)- Rs.18000/= ♦Show room Boys -Rs.18000/= ♦Heavy Vehicle Drivers -Rs.25000/=

➤25 Days Work For Month. ➤Time 9.00 AM - 8.00 P.M. ➤

ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக் கோவையுடன் அலுவலகத்திற்கு சமூகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

கிங்ஸ் எலக்ரோனிக்ஸ், வேம்படிச் சந்தி அருகாமையில்
12,பருத்தித்துறை வீதி , யாழ்ப்பாணம்.
021 454 6699

(5693)



**யாரிடம் பேசுவது?**

மனதில் சுமையா?
வாழ்க்கையே வெறுத்து விட்டது போல உள்ளதா?
துயரைக் கேட்கக் கூட யாரும் இல்லையா?

உங்களை உள்ளவாறு ஏற்றுக்கொள்வோம் எடை போட மாட்டோம் வெறுமையான புத்திமதிகள் சொல்ல மாட்டோம் உங்கள் பிரச்சினைகளைத் தீர்க்கும் வழிவகைகளை நீங்கள் கண்டறிய உறுதுணையாக இருப்போம். எத்தனை மணித்தியாலங்கள், எத்தனை நாட்கள் வேண்டுமாயினும் உங்களுக்காக ஒதுக்குவோம் ரகசியங்களை முழுமையாகப் பாதுகாப்போம்

யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும் இயங்கும் இலவச சேவை

தொலைபேசியில் அழையுங்கள் அல்லது நேரில் வாருங்கள்
உங்களுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்

**கை கொடுக்கும் நண்பர்கள்**

104, நான்காம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

**(021) 222 8117 / 077 900 8776**
(தினமும் காலை 9.00-1.00)

**வவுனியாவில்** **(024) 324 4444**
சனி, ஞாயிறு காலை 9.00—1.00

(மத சார்பு எதுவுமற்ற அமைப்பு)





## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 818


சிந்து




ஆரவி





ஜெசி




றொகான்




சர்மி சர்மி



மரியசெல்வம்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

## திருப்பங்கள் நிறைந்த ஜெமினிகணேசன் வாழ்க்கை

239

முதல் குழந்தை பிறந்த சில நாட்களில் இறந்து விட்டது. இரண்டாவதாக பிறந்தவர் தான் ஜெமினி கணேசன் .1920ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 17ஆம் திகதி பிறந்தார். பெற்றோர் சூட்டிய பெயர் கணேஷ்.

**முத்துலட்சுமி ரெட்டி**

ஜெமினிகணேசன் அவருடைய சின்ன தாத்தா நாராயணசாமி அய்யர் வீட்டில் வளர்ந்தார்.

நாராயணசாமி அய்யர் சிறந்த கல்வியாளர். புதுக்கோட்டை மகாராஜா கல்லூரியில் முதல்வராக பணியாற்றியவர்.

(இவருடைய மகள் முத்துலட்சுமி, பல சாதனைகளைப் புரிந்தவர். இந்தியாவிலேயே டாக்டருக்குப் படித்துத் தேறிய முதல் பெண்மணி. 1929இல் சென்னை சட்டசபை உறுப்பினரானார். சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றார். தேவதாசி முறையை ஒழிக்க வகை செய்யும் சட்டம் நிறைவேறக் காரணமாக இருந்தார். சுந்தரம் ரெட்டியை கலப்புத் திருமணம் செய்து டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி ஆனார்.)

**படிப்பு**

ஜெமினிகணேசன் புதுக்கோட்டை நெல்லுமண்டி தெருவில் இருந்த குலமது பாலையா பிறைமரி ஸ்கூலில் பள்ளிப்படிப்பை தொடங்கினார். ஜெமினியின் சின்ன தாத்தா நாராயணசுவாமி



வசதி படைத்தவராக இருந்ததால் ஜெமினியை ராஜகுமாரனைப் போல குதிரை மீது அமர வைத்து பள்ளிக்கூடத்துக்கு ஊர்வலமாக அழைத்து சென்றார். அந்த பள்ளியில் நிர்வாகி பாலையா என்பவர் ஜெமினிகணேசனின் வலது கையை பிடித்து வெள்ளத் தட்டில் தங்கக் காசால் ஓம் என்று எழுத வைத்தார்.

இவ்வாறு ஜெமினியின் படிப்பு சிறப்பாகத் தொடங்கியது.

இளம் வயதில் ஜெமினி முதன் முதலாக பார்த்த தமிழ்ப்படம் டி.பி.ராஜலட்சுமி-டி.வி.சுந்தரம் நடித்த வள்ளி திருமணம்.

48 பாடல்கள் கொண்ட அந்த சினிமா படத்தின் எல்லா பாடல்களையுமே ஜெமினி மனப்பாடம் செய்துவிட்டார்.அந்த பாடல்களை பாடி ரசிப்பார்.

இதை கேள்விப்பட்ட புதுக்கோட்டை திவான் ஜெமினியை வரவழைத்து வள்ளி திருமணம் பாடல்களை எல்லாம் பாடச் சொல்லிக்கேட்டு வெள்ளிக் கோப்பையை பரிசு கொடுத்தார்.

ஜெமினிக்கு 10 வயதாகும் போது தந்தையும் சின்ன தாத்தாவும் காலமானார்கள். இதனால் ஜெமினி மிகவும் வேதனையடைந்தார். அத்தை முத்துலட்சுமி அவரை சென்னைக்கு அழைத்துச்சென்று ராஜா முத்தையா செட்டியார் உயர் நிலைப்பள்ளியில் 7ஆம் வகுப்பில் படிக்க வைத்தார். பின்னர் ராமகிருஷ்ணா மிஷன் பள்ளியில் சில காலம் படித்தார்.

ஐ.ஏ.எஸ். பரீட்சை எழுதி மகன் கலெக்டராக வேண்டும் என்பது ஜெமினியின் தாயார் கங்கம்மாவின் ஆசை.

ஆனால் ஜெமினியோ எம்.பி.பி.எஸ். படிக்க ஆசைப் பட்டார். ஆனால் ஒரு டிகிரி முடித்த பின்னர் சேரலாம் என்று அத்தை முத்துலட்சுமி யோசனை சொல்லவே ஜெமினிகணேசன் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தார். கல்லூரி விடுதியில் தங்கிப் படித்தார். விளையாட்டு ,பேச்சு, பாட்டு என்று பல திறமைகளை வளர்த்துக்கொண்டார்.

**20 வயதில் திருமணம்**

1940ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜெமினியின் வாழ்க்கையில் ஒரு திருப்பம் ஏற்பட்டது.

ஜெமினிக்கு அப்போது 20 வயது. அவருக்கு திருமணம் செய்து வைக்கத் தீர்மானித்து குடும்பத்தினர் பெண் பார்த்தார்கள். அலமேலு என்கிற பாப்ஜியை பார்த்து முடிவு செய்தார்கள். ஜெமினியை எம்.பி.பி.எஸ். படிக்க வைப்பதாக பாப்ஜியின் அப்பா கூறினார். அது ஜெமினிக்கு மிகுந்த மகிழ்ச்சி அளித்தது.

ஜூன் மாதம் 30ஆம் திகதி ஜெமினி -பாப்ஜி திருமணம் நடந்தது.

ஜெமினிக்கு சரியான வேலை கிடைக்காததால் திருமணத்துக்குப் பிறகும் பாப்ஜி பிறந்த வீட்டிலேயே இருந்தார்.

**கனவு தகர்ந்தது**

மருத்துவப்படிப்பு கனவு உருவான வேகத்திலேயே தகர்ந்து போனது. திருமணமான ஒரு மாதத்தில் பாப்ஜியின் அக்காவின் கணவர் மரணம் அடைந்தார். அடுத்தபடியாக அக்காவும் இறந்தார். அடுத்தடுத்து நிகழ்ந்த இரண்டு மரணங்கள் அதிர்ச்சியாக அமைந்தன.

(தொடரும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1689 - ரஷ்யாவுக்கும் சீனாவின் சிங் பேரரசுக்கும் இடையில் நெர்ச்சின்ஸ்க் உடன்பாடு எட்டப்பட்டது.
- 1928 - போருக்கெதிராக கெலொக்-பிறையண்ட் உடன்பாட்டில் 60 நாடுகள் கைச்சாத்திட்டன.
- 1939 - உலகின் முதலாவது ஜெட் விமானம் 178 சேவைக்கு விடப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியப் படைகள் நியூ ஜோர்ஜியா தீவை விட்டு விலகினர்.
- 1957 - மலேசியாவின் அரசியலமைப்பு சாசனம் அமுலானது.
- 1962 - நாசா மரைனர் 2 விண்கலத்தை வீனஸ் நோக்கி செலுத்தியது.
- 1979 - அயர்லாந்தில் விடுமுறையைக் கழித்துக் கொண்டிருந்த மவுண்ட்பேட்டன் பிரபுவும் மற்றும் மூவரும் ஐ.ஆர்.ஏ.யின் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டனர். மேலுமொரு குண்டுவெடிப்பில் 18 பிரித்தானியப் படையினர் கொல்லப்பட்டனர்.
- 1982 - துருக்கிய இராணுவ உயர் அதிகாரி அடில்லா அட்லிகாட் என்பவர் கனடாவின் ஒட்டாவாவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1985 - நைஜீரியாவில் நிகழ்ந்த இராணுவப் புரட்சியில் அந்நாட்டு அரசு கவிழ்க்கப்பட்டது.
- 1991 - சோவியத் ஒன்றியத்தில் இருந்து மால்டோவா பிரிந்தது.
- 2000 - மொஸ்கோவின் ஒஸ்டான்கினோ கோபுரம் தீப்பற்றியதில் 3 பேர் கொல்லப்பட்டனர்.
- 2003 - செவ்வாய்க் கோள் பூமிக்கு மிகக் கிட்டவாக 55,758,006 கிலோமீட்டர் தூரத்துக்கு 60,000 ஆண்டுகளுக்குப் பின்னர் வந்தது.
- 2006 - அமெரிக்காவின் கென்டக்கியில் புளூாகிராஸ் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட விமானம் சிறிது நேரத்தில் தரையில் வீழ்ந்து நொருங்கியதில் 50 பேரில் 49 பேர் கொல்லப்பட்டனர்.
- 2006 - பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாநில முன்னாள் முதல்வர் நவாப் அக்பர் பக்டி இராணுவத் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

**பிறப்புக்கள்**

- 1770 - ஹெகல், ஜெர்மன் மெய்யியல் அறிஞர். (இ. 1831)
- 1876 - தேசிக விநாயகம்பிள்ளை, கவிமணி. (இ. 1954)
- 1908 - தண்டபாணி தேசிகர், கருநாடக இசைப் பாடகர்.
- 1908 - டொன் பிறட்மன், ஆஸ்திரேலியத் துடுப்பாளர் . (இ. 2001)
- 1942 - வலேரி பொல்யாக்கொவ், உருசிய விண்வெளி வீரர்.
- 1972 - திக்ரேட் காளீ, இந்திய தொழில்முறை மல்யுத்த வீரர், நடிகர்.

**இறப்புகள்**

- 1879 - ரோலண்ட் ஹில், நவீன அஞ்சல் சேவையைக் கண்டுபிடித்தவர். (பி. 1795)
- 1963 - டபிள்யூ.இ.பி. டுபோய்ஸ், ஆபிரிக்க அமெரிக்க மனித உரிமையாளர். (பி. 1868)
- 1965 - லெ கொபூசியே, சுவிட்சர்லாந்து கட்டிடக் கலைஞர். (பி. 1887)
- 1975 - முதலாம் ஹைலி செலாசி, எதியோப்பிய மன்னர். (பி. 1892)
- 1976 - முக்கேஷ், இந்தியப் பின்னணிப் பாடகர். (பி. 1923)
- 1979 - மவுண்ட்பேட்டன் பிரபு, பிரித்தானிய அட்மிரல் . (பி. 1900)

**சிறப்பு நாள்**

- மால்டோவா - விடுதலை நாள். (1991)

## ரோலண்ட் ஹில்



ரோலண்ட் ஹில் (Rowland Hill, டிசம்பர் 3, 1795 - ஆகஸ்ட் 27, 1879), நவீன அஞ்சல் சேவையைக் கண்டு பிடித்தவர் என்ற பெருமைக்குரியவர் ஆவார். இவர் இங்கிலாந்தின் வோசெஸ்டர்ஷயரிலுள்ள கிடெர்மின்ஸ்டெர் என்னுமிடத்தில் பிறந்தவர். ரோலண்ட்ஹில், சில காலம் ஆசிரியராகப் பணியாற்றினார். 1837 ஆம் ஆண்டு, தனது 42 ஆவது வயதில் "தபால் அலுவலகச் சீர்திருத்தம்: இதன் முக்கியத்துவமும் நடைமுறைச் சாத்தியமும்" ("ost Office Reform: its Importance and Practicability") என்ற அவரது பிரபலமான பிரசுரத்தை வெளியிட்டார். இப் பிரசுரத்தில் அவர் அதிகாரப்பூர்வ, முன்னரே அச்சடிக்கப்பட்ட கடித உறைகளையும், ஒட்டத்தக்க தபால்தலைகளையும் வெளியிடவேண்டிய அவசியத்தை எடுத்துக்காட்டினார். பிரித்தானியத் தீவுகளுக்குள் எந்த இடத்துக்கும் அரை அவுன்ஸ் நிறையுள்ள தபாலை அனுப்புவதற்குக் குறைந்த சீரான கட்டணமான ஒரு பென்னியை அறவிடவேண்டுமெனவும் அவர் ஆலோசனை வழங்கினார்.இதற்கு முன்னர் தபால் விநியோகம் செய்யப்பட வேண்டிய தூரத்தையும், கடிதத்தின் தாள்களின் எண்ணிக்கைக்கும் ஏற்பவே கட்டணம் அறவிடப்பட்டது. ரோலண்ட் ஹில்லின் ஆலோசனைப்படி, ஒரு பென்னி கட்டணம், குறிப்பிட்ட நிறைக்கு உட்பட்ட கடிதமொன்றை நாட்டின் எந்த மூலைக்கும் அனுப்ப முடிந்தது. முன்னர் தபால் கட்டணம் 4 இற்கும் கூடுதலாகவே இருந்தது.எனினும் சேவைக்கான கட்டணத்தைச் செலுத்துவது அனுப்புனரா, பெறுனரா என்ற பிரச்சினை தீர்க்கப்படாமல் தொடர்ந்தும் விருப்பத்துக்குரியதாகவே இருந்துவந்தது. தபாலதிபர் நாயகமாக (Postamaster general ) இருந்து ரோலண்ட் ஹில் எடுத்த முயற்சிகள் பல ஆண்டுகள் பலனளிக்காமலேயிருந்தது.குறைந்த கட்டணம், எழுத வாசிக்கத்தெரிந்த கூடுதலானவர்கள் தபால் சேவையைப் பயன்படுத்த வழி செய்தது. 1840 மே 6ஆம் திகதி முதலாவது தபால்தலை வெளியிடப்படுவதற்கு முன்னரே, அதே ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி, முன்கட்டணம் செலுத்தப்படக்கூடிய கடித உறையுடன், சீரான பென்னி தபால் சேவை ஆரம்பித்துவைக்கப்பட்டது.

# நாட்டைப் பிளவுபடுத்த திட்டமிடும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் யார்?

## தென் மாகாண ஆளுநர் விரைவில் வெளிப்படுத்துவார்

(கொழும்பு)

**நாட்டை பிரிக்க நடவடிக்கை எடுத்த நான்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பாக விரைவில் வெளிப்படுத்தப் போவதாக தென் மாகாண ஆளுநர் ஹேமகுமார நாணயக்கார தெரிவித்துள்ளார்.**



சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து இவர்கள் செயற்பட்டு வந்தனர் எனவும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் பெயர் விபரங்களுடன் அவர்கள் பற்றிய தகவல்களை வெளியிடப் போவதாகவும் ஹேமகுமார நாணயக்கார எச்சரித்துள்ளார்.

மௌபிம மக்கள் கட்சியின் தலைவருமான ஹேமகுமார நாணயக்கார கொழும்பு பொது நூலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

எப்போதும் ஒன்றிணையாத இரண்டு கட்சிகள் இணைந்து நாட்டை தற்போது கட்டியெழுப்பி வருகின்றன. எனினும் சிலர் இந்த அரசாங்கத்தை உடைக்கப் பார்க்கின்றனர்.

படையினர் பயங்கரவாதத்திடம் இருந்து மீட்ட நாட்டை பாதுகாக்க வேண்டும். வடக்கில் இராணுவ முகாம்களை அகற்றும் போது ஆழமாக கவனம் செலுத்த வேண்டும். சமஷ்டி முறைக்கும் எமது கட்சி ஆதரவு வழங்காது எனவும் ஹேமகுமார நாணயக்கார மேலும் தெரிவித்தார். (இ-7)

## பற்சிகிச்சை நிலையங்களுக்கு பல மில்லியன் ரூபா ஒதுக்கீடு

நாடு பூராகவும் உள்ள அரச பற்சிகிச்சை நிலையங்களுக்கு 360 மில்லியன் செலவில் உபகரணங்கள் பெற்றுக்கொடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடம் இந்த உபகரணங்கள் வழங்கி வைப்பதன் பொருட்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதற்கமைய எக்ஸ்ரே இயந்திரங்கள், இரசாயன பொருட்கள் உள்ளிட்டவைகள் குறித்த பற்சிகிச்சை நிலையங்களுக்கு வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் ஜயசுந்தர பண்டார தெரிவித்துள்ளார்.

மேலும், சகல வைத்தியசாலைகளிலும் பூரண வாய் சுகாதார மத்திய நிலையங்கள் அமைப்பதற்கு 3000 மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கமைய கராப்பிட்டிய மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளில் முதலாவது வாய்ச்சுகாதார மத்திய நிலையம் அடுத்த வருடம் அமைக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## குற்றத்தை மறைக்க கப்பம் பெற்ற பொலிஸார்

வெளிநாட்டில் இருந்து மதுபானங்களை சட்டவிரோதமாக கொண்டுவந்து விற்பனை செய்துவரும் வர்த்தகர் ஒருவரிடம் பொலிஸார் இருவர் ஒரு இலட்சம் ரூபா இலஞ்சம் கப்பமாகப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸார் இரு வரும் பேலியகொட பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றுபவர்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த வர்த்தக நிலையம் அமைந்துள்ள வத்தளைப் பகுதிக்கு சோதனை நடவடிக்கைக்கு சென்ற இந்த பொலிஸார் இருவரும், அவரது சட்டவிரோத வர்த்தகத்தை மூடி மறைப்பதற்காக அவரிடம் இருந்து 4 வெளிநாட்டு மதுபானப் போத்தல்களையும் மேலதிகமாக ஒரு இலட்சம் ரூபாவையும் கப்பமாக கோரியுள்ளனர். இதற்கமைய குறித்த வர்த்தகரும் வங்கிக்கு சென்று பொலிஸார் கப்பமாக கோரிய பணத்தை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் பேலிய கொட பொலிஸ் நிலையத்தின் உயர் அதிகாரிகள் அறிந்து கொண்டதுடன், அவர்களை விசாரணைக்காக உடனடியாக பொலிஸ் நிலையம் வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் குறித்த பொலிஸார் இருவரும் பொலிஸ் நிலையத்துக்கு செல்லவில்லை என்றும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

எனவே, குறித்த சம்பவம் தொடர்பில் இந்த பொலிஸார் இருவருக்கும் எதிரான விசாரணைகள் பேலிய கொட பொலிஸ் அதிகாரிகளால் கடந்த புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

அன்பு வாசகர்களே!
உங்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அறிந்த
♦செய்திகள்
♦புகைப்படங்கள்
♦நிகழ்வுகள்
♦பேசும் படங்கள்

போன்றவற்றை வலம்புரியில் வெளிவரச் செய்வதற்கு உங்கள் கைத்தொலைபேசியில் உள்ள VIBER செயலி மூலம் தகவல்களை இலகுவாக பரிமாறிக் கொள்ளுங்கள்.

VIBER செயலி இல

076 636 3378

Viber

### கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்(வ-து),மூளாய்
### பயிற்சி மருந்தாளர் தேவை

எமது வைத்தியசாலையின் மருந்தகத்திற்கு பயிற்சி மருந்தாளர் தேவை

கல்வித்தகைமை:-

- க.பொ.த உயர்தரத்தில் விஞ்ஞான/கணிதப் பிரிவில் 3 பாடங்களில் சித்தி
- க.பொ.த.சாதாரணதரத்தில் சித்தியுடன் ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி
- கணனி தொடர்பான அறிவு

இரண்டு வருட பயிற்சிக்காலத்தின் போது சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 31.08.2016 இற்கு முன்னர் தங்களது சுயவிபரக்கோவையை கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(வ/5527)

முகவரி:-தலைவர்
கூட்டுறவு வைத்தியசாலை சங்கம்(வ/து),
மூளாய்.

## INVITATION FOR BIDS
## TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction and renovation works in the schedule below.

| | Work/ Service Details | Non refundable Deposit (Rs) (Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate Direct cost of the work (Rs.In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1 | Construction of Staff Canteen | 500.00 | 60,000.00 | 91 | 2.89 | C8 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).
4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB Jaffna during office hours, if necessary.
5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 29.08.2016 up to 08.09.2016 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.
6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 09.09.2016, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna.
27.08.2016

(C-5551)

# சுதந்திரக்கட்சி பிளவுக்கு மகிந்த தான் காரணம்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காரணம் இல்லை எனவும், மகிந்த ராஜபக்ஷ கூட்டு எதிர்க்கட்சியாக இருப்பதே காரணம் எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே இவர் இதனை தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், மைத்திரிபால சிறிசேன பொது அபேட்சகராக அவர் போட்டியிட்டதால் இந்த பிளவு ஏற்படவில்லை, தற்போது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக மகிந்த ராஜபக்ஷ இருப்பதே காரணம் எனக் கூறினார்.

கட்சி பிளவுபட யாரும் விரும்பவில்லை. இருந்தும் எதிர்கால இலக்கை நோக்காகக் கொண்டே தொகுதி அமைப்பாளர்கள் நீக்கப்பட்டது மற்றும் நியமிக்கப்பட்டமை இடம்பெற்றதாகவும் அதனால் அனைவரும் கட்சியோடு இணைந்து செயற்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, நடைபெறவிருக்கும் கட்சி மாநாட்டில் குருநாகல் மாவட்டத்தை பிரதிநிதித்துவப் படுத்துபவன் என்ற வகையிலும் இளைஞர் முன்னணியின் தலைவர் என்ற வகையிலும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான இளைஞர்களுடன் நிகழ்வை சிறப்பிக்க எதிர்பார்ப்பதாகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் தலைவர் சாந்த பண்டார தெரிவித்தார். (இ-7)

## நெல்லியடி சந்திப் பகுதியில்

# சமிக்ஞை விளக்குகள் பொருத்தல்



2013 ஆம் ஆண்டு தொடக்கம் எடுக்கப்பட்ட விடாமுயற்சியின் பயனாக நெல்லியடிச் சந்தியில் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டன. நெல்லியடி வர்த்தக சங்கத்தின் கோரிக்கைக்கு அமைவாக அந்த சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்பட்டன. (இ-60)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 60 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 80 | 100 | 120 | 90 | 120 |
| தக்காளி | 60 | 50 | 60 | 60 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 100 | 90 | 80 |
| கோவா | 100 | 50 | 100 | 100 | 100 |
| கரட் | 120 | 100 | 120 | 120 | 120 |
| பூசணி | 30 | 20 | 60 | 35 | 60 |
| புடோல் | 40 | 20 | 40 | 35 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 80 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 50 | 80 | 80 | 90 | 100 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 90 | 60 | 100 |
| பாகற்காய் | 120 | 80 | 120 | 80 | 120 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 50 | 60 | 80 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 160 | 120 | 120 |
| பயற்றங்காய் | 70 | 100 | 60 | 50 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 110 | 120 |
| பீற்றூட் | 40 | 30 | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 150 | 120 | 160 | 100 | 160 |
| முருங்கைக்காய் | 50 | 20 | 60 | 90 | 80 |
| போஞ்சி | 160 | 200 | 200 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 20 | 50 | 60 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 10 | 30 | 20 | 20 |
| தேசிக்காய் | 250 | 200 | 240 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30-50 | 40 | 25 | 20-30 |
| இராசவள்ளி | – | – | – | – | – |
| வெங்காயப்பூ | 120 | – | 140 | 90 | 100 |
| முள்ளங்கி | 20 | – | 40 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 40 | 40 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 20 | 60 | 40 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பிரபாகரனின் 12 வயது மகன் கொலையில் திடுக்கிடும் தகவல்

261

மகன் மனோகரன் டென்மார்க் நாட்டில் குடும்பத்துடன் உள்ளார்.

### அஞ்சலி

பார்வதி அம்மாள் மரணமடைந்த தகவலைத் தமிழ்த் தேசிய கூட்டணியைச் சேர்ந்த முன்னாள் எம்.பி. சிவாஜிலிங்கம் தெரிவித்தார். இது பற்றி அவர் கூறுகையில், மரணமடைந்த பார்வதி அம்மாளுக்கு இறுதி அஞ்சலி செலுத்தினேன். அவருடைய மரணம் பற்றி தகவலை மகன் மற்றும் மகள்களுக்கும் தெரிவித்துவிட்டேன். பார்வதி அம்மாளின் நெருங்கிய உறவினர்களுடன் ஆலோசனை நடத்திய பிறகு அவருடைய இறுதிச்சடங்கு ஏற்பாடுகள் நடைபெறும் என்றார்.

### தமிழர்களுக்கு வேண்டுகோள்

இதற்கிடையே ஈழத்தமிழினத்தை அடிமைத்தளையில் இருந்து மீட்டெடுக்கும் போராட்டத்தை முன்னெடுத்து நடத்திய தலைவர் பிரபாகரனைப் பெற்றெடுத்து வளர்த்து ஆளாக்கிய அந்தத் தாயை உலகம் எங்கும் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துமாறு வேண்டி கேட்டுக் கொள்கிறோம் என விடுதலைப்புலிகள் அமைப்பின் ஆதரவாளர்கள் சார்பாக அறிக்கை வெளியிடப்பட்டது.

### இறுதிச்சடங்கு

மறுநாள் பார்வதி அம்மாள் உடல் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டது. பெரும் திரளானனோர் திரண்டு வந்து அஞ்சலி செலுத்



தினார்கள். பின்னர் அவரது உடல் தகனம் செய்யப்பட்டது.


போரின் போது பிரபாகரன் மகனை இராணுவ முகாமில் சிங்கள இராணுவம் உயிரோடு பிடித்து வைத்து சுட்டுக் கொன்றதற்கான ஆதாரத்தைச் சனல்-4 தொலைக்காட்சி வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தியது.

விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் சிங்கள இராணுவத்தினால் சுட்டுக் கொல்லப்பட்ட படத்தை சனல்-4 தொலைக்காட்சி ஏற்கனவே வெளியிட்டது. ஆனால் சிங்கள அதிகாரிகள் போரின் போது பாலச்சந்திரன் சுட்டுக்கொல்லப்பட்டதாகவே இதுவரை கூறி வந்தனர்.

### புதிய ஆதாரம்

பிரபாகரன் மகன் பாலச்சந்திரன் போரின் போது சுட்டுக்கொல்லப்படவில்லை. அந்த சிறுவனைச் சிங்கள இராணுவம் உயிருடன் பிடித்து பதுங்கு குழியில் வைத்திருந்தது. இப்போது அம்





பலத்துக்கு வந்துள்ளது.

அந்தச் சிறுவன் பால் வடியும் முகத்துடன் காணப்படுவதையும் சிங்கள இராணுவம் தந்த ஏதோ ஒரு உணவுப் பொருளைச் சாப்பிடும் காட்சியையும் சனல்-4 தொலைக் காட்சியில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆவணப் படத்தின் தலைப்பு போர் இல்லா மண்டலம்- நாட்டின் கொலைக்களங்கள்.

### 5 முறை சுட்ட கொடுமை

படங்கள் எடுக்கப்பட்ட சில மணிநேரத்தில் தான் பாலச்சந்திரனைச் சிங்கள இராணுவம் மனிதநேயமின்றி 5 முறை சுட்டு கொன்று இருக்கிறது. சிறுவன் நெஞ்சிலே சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக விழுந்து கிடந்த காட்சியை ஆய்வு செய்த தடயவியல் நிபுணர் ஒருவர் பாலச்சந்திரன் கைக்கு எட்டும் தூரத்தில் இருந்து சுட்டுக் கொல்லப்பட்டிருப்பதை உறுதி செய்தார்.

### அதிர்ச்சி

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் பிடித்து வைத்து கொல்லப்பட்டதற்கு ஆதாரமாக வெளியாகியுள்ள இந்தக் காட்சிகள் சர்வதேச அளவில் கடும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளன.

### அரசு மறுப்பு

அந்த ஆவணப்படக் காட்சிகளை முழுமையாக மறுத்துள்ளது. இது பற்றி இராணுவச் செய்தித்தொடர்பாளர் பிரிகேடியர் ரூபன் வானிக சூர்யா கூறியதாவது,

ஆவணப்படத்தில் இடம் பெற்றிருக்கிற படக்காட்சிகள் பொய்யானவை. பாதியே உண்மை. யூகத்தில் பல்வேறு வடிவங்கள் படைகளுக்கு எதிராக இப்படிப்பட்ட குற்றச் சாட்டுக்களைச் சுமத்துவது ஒன்றும் புதிதல்ல. விசாரணை நடத்துவதற்கு ஏற்ற கூடுதலான ஆதாரங்கள் எதுவும் அளிக்கப்படவில்லை. துரதிர்ஷ்டவசமாக இந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியிருக்கிறவர்கள் இது தொடர்பாக விசாரணை நடத்தப்படுவதை ஒரு போதும் விரும்புவதில்லை. நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு புதிராக வைத்திருக்கவே விரும்புகின்றனர். இந்த ஆவணப் படக் காட்சிகள் தொடர்பாக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சனல்-4 விரும்பினால் நம்பகத்தக்க ஆதாரத்தை தந்து ஒத்துழைக்க வேண்டும். இராணுவம் விசாரணை நடத்த தயாராக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

பெண்புலி இசைப்பிரியாவை சிங்கள இராணுவம் சீரழித்து படுகொலை செய்த காட்சிகளை சனல்-4 வெளியிட்டு சோக அலைகளை ஏற்படுத்தியது.

### இறுதிக்கட்டப்போர்

தமிழர்களுக்குத் தனிநாடு கேட்டுப் போராடி வந்த விடுதலைப்புலிகளுக்கும் சிங்கள இராணுவத்துக்குமிடையே 26 ஆண்டுகளாக கடும் சண்டை நடந்து வந்தது. இந்தப் போர் கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்டத்தை அடைந்தது. இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்த இந்தப் போரில் அப்பாவி பொது மக்கள் உட்பட 40 ஆயிரம் முதல் 70 ஆயிரம் பேர் வரை பலியானார்கள். விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களும் இதில் அடக்கம்.

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன், அவரது வீரர்கள், வெள்ளைக்கொடி ஏந்தியபடி சரணடைய வந்த வீரர்கள் ஆகியோரும் கொல்லப்பட்டதுதான் கொடூரம் ஆகும். இது பற்றிய ஆவணப் படங்களை இங்கிலாந்தைச் சேர்ந்த சனல்-4 தொலைக்காட்சி பலமுறை வெளியிட்டு உலகையே அதிர வைத்தது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரனை நெஞ்சில் நேருக்கு நேர் சுட்டுக்கொன்ற காட்சியையும் அந்தச் சனல்-4 வெளியிட்டது.

### புதிய ஆவணப்படம்

அரசு தமிழர்கள் மீது நடத்திய போர் வெறியாட்டம் தொடர்பான ஆவணப் படம் ஒன்றை சனல்-4 தொலைக்காட்சி தயாரித்தது.

(தொடரும்)

கடமையைச் செய்ய துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்
~ சிம்மன்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# இலங்கையில் யாருடைய ஆட்சி நடைபெறுகிறது?

நல்லாட்சி என்று சொல்லப்படுகின்ற அரசு அமைவதில் தமிழ் மக்களின் வகிபாகம் காத்திரமானது.

எனினும் ஆட்சிக்கு வந்த பின்னர் நல்லாட்சியினரும் தமிழ் மக்களை மறந்துவிட்டனர் என்பதுதான் உண்மை.

இந்த நாட்டில் மிகப்பெரியதொரு யுத்தம் நடந்ததன் காரணமாக தமிழ் மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் இன்னமும் ஓய்ந்தபாடில்லை.

யுத்தத்தின் இழப்புகள் வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்புநிலை மிக உச்சமாகியதன் காரணமாக இன்றுவரை தமிழ் மக்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்றனர்.

நடந்து முடிந்த போர் தமிழ் மக்களுக்கு பேரிழப்பைத் தந்தது. உண்மையில் இத்தகையதொரு போரின் கொடுமைக்குக் காரணம் இந்த நாட்டைக் காலத்திற்குக் காலம் ஆட்சி செய்தவர்கள் செய்த கொடுமைத்தனமாகும்.

ஆட்சி செய்கின்றவர்கள் இந்த நாட்டின் சிறுபான்மை மக்களுக்கு உரிய உரிமை கொடுத்து அவர்களும் சம அந்தஸ்துடன் வாழச் செய்ய வேண்டும்.

ஆனால் தமிழ் மக்களை நசுக்குவது அவர்களின் உரிமைகளை வழங்க மறுப்பது இதற்காக காலத்திற்குக்காலம் தமிழினத்தை துவம்சம் செய்வது என்பதாக கொடூரம் நீண்டு செல்கிறது.

இந் நிலையில் இழப்புகளைச் சந்தித்த தமிழ் மக்கள்தான் விட்டுக்கொடுப்பை செய்ய வேண்டும் என தமிழ் அரசியல் தலைமை கருதுகிறது.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்களே விட்டுக்கொடுப்பை மேற்கொள்ள வேண்டும் என்று நினைப்பது மகா தவறு.

இலங்கை திருநாட்டில் அமைதியும் நிலைத்த சமாதானமும் ஏற்பட வேண்டுமாயின் பெரும்பான்மை இனமும் விட்டுக்கொடுப்பை செய்யவேண்டும்.

ஆனால் அதற்கு இங்கு இடமே இல்லை தமிழ் மக்களின் வாழ்விடங்களில் புத்த விகாரைகளை அமைப்பதில் தவறில்லை என்று சொல்கின்றவர்கள் தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இராணுவ முகாம்கள் அமைந்திருப்பதும் சரியானதல்ல என்று சொல்ல மறுக்கின்றனர்.

ஆக நல்லாட்சியில் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தம் நடைபெறவில்லையே தவிர, நில ஆக்கிரமிப்பும் தமிழ் மக்களின் வரலாற்றுப் பாரம்பரிய அழிப்பும் சர்வசாதாரனமாக நடந்துவருகிறது.

இதன் ஒரு வெளிப்பாடு தான் வடக்கு கிழக்கிலிருந்து எந்தவொரு இராணுவ முகாமும் அகற்றப்படமாட்டாது என்ற இராணுவத் தளபதியின் அறிவிப்பாகும்.

தமிழ் மக்களின் வாழ்விடங்களில் இராணுவ முகாம்களை அமைத்து ஆக்கிரமிப்பு செய்துவரும் அதேநேரம் தமிழ் மக்களின் குடியிருப்பு பகுதிகளில் புத்த விகாரைகளை அமைக்கின்ற நடவடிக்கைகளும் மிகவேகமாக நடக்கின்றதெனில்,

நல்லாட்சியின் போக்கு எவ்வாறு உள்ளதென்பதை நாம் உணர முடியும்.

வடக்குக் கிழக்கில் உள்ள இராணுவத்தினரை படிப்படியாக அகற்றுவோம் என்று இந்த நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறுகின்றார். அதேநேரம் இராணுவத்தளபதியோ வடக்குக் கிழக்கில் இருந்து எந்தவொரு இராணுவ முகாமும் அகற்றப்படமாட்டாது எனக் கூறுகிறார்.

இப்போது தமிழ் மக்கள் எந்த ஆட்சியின் கீழ் இருக்கின்றனர் என்பதுதான் புரியாமல் உள்ளது.

# 19 வயதுக் கர்ப்பிணிப்பெண் திருமலையில் சடலமாக மீட்பு

திருகோணமலை - சிங்கபுர பகுதியில் 19 வயது மதிக்கத்தக்க கர்ப்பிணிப் பெண் ஒருவரின் சடலத்தை நேற்று மீட்டுள்ளதாக திருகோணமலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு மீட்கப்பட்ட பெண அம்பலாங்கொடை பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் சடலம் ஒன்று இருப்பதாக பொலிஸாருக்கு தகவல்கள் தெரியப்படுத்தியுள்ளனர். இதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இந்த சடலத்தை மீட்டுள்ளதோடு, பெணணின் கணவரே இந்த் கொலையைய் செய்திருக்கலாம் என சந்தேகம் வெளியிட்டுள்ளனர.

கொலைச்சம்பவத்தின் பின்னர் குறித்த பெண்ணின் கணவன் தலைமறைவாகியுள்ளார் என்றும், இவரைத் தேடும் பணி தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த கொலைச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# காணிப் பிரச்சினைக்கு தீர்வு கோரி ஆர்ப்பாட்டம்

முஸ்லிம் மக்களின் காணி அனுமதிப் பத்திரம் மற்றும் காணிப் பிரச்சினைகளை உடனடியாக அரசாங்கம் தீர்த்து வைக்க வேண்டும் என கோரி நிந்தவூரில் நேற்று ஆர்ப்பாட்டம்ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

நிந்தவூர் கிரான் கோமாரி விவசாயிகள் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற மக்களின் விடுதலை எதிர்ப்பு ஊர்வலத்தில் பிரதேச மக்கள் பலர் கலந்துகொண்டனர்.

“வரைபடத்தை கோரி அனுமதிப்பத்திரத்தை ஏற்க மறுப்பதேன், போராடுவோம் போராடுவோம் காணி கிடைககும் வரை போராடுவோம், 1957 இல்வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரத்தை அங்கீகரிக்க மறுப்பதேன்” என்ற வசனங்கள் பொறிக்கப்பட்ட பதாதைகளை ஏந்தி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.(இ-7)

நல்லூர்க்கந்தனுக்கு



## நல்லைப் பதிக்கரசே

நல்லைப் பதிக்கரசே நல்லைப் பதிக்கரசே
நல்ல வழிகாட்டி நாயேனை யாண்டிடடா

கல்லை நிகர்த்தமனாங் கரையவருள் தந்திடடா
எல்லையில்லா வின்பத்தே யெனையிருத்தி வைத்திடடா

ஆன்மாவை நித்தியமென் றறியவரந் தந்திடடா
வீண்பா வனையெல்லாம் விலக்க வருள்தாடா

மாயப் பிணியகல மருந்தெனக்குத் தந்திடடா
காயங் குலையுமுன்னர் காண வருள்தாடா

சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டிடடா
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிடடா

எல்லா ரையுமீச னிடத்திலே காட்டிடடா
எல்லா ரிடத்திலும் ஈசனைக் காட்டிடடா

கொல்லா வரமெனக்குக் குவலயத்தில் வேணுமடா
எல்லா ரிடத்துமன்பாய் இருப்பதெனக் கிச்சையடா

என்றும் மறவா வரமெனக்கு வேணுமடா
குன்றுபோ னிற்கக் குருவே வரந்தாடா

சிவத்திரு யோகர்சுவாமிகள்

# தங்க ஆபரணங்கள் அணிவதை பக்தர்கள் இயன்றளவு தவிர்க்கவும்

திருடர்களின் நடமாட்டம் ஏற்பட வாய்ப்புள்ளதால் சந்நிதியானை நாடிவரும் பக்தர்கள் இயன்றளவு தங்க ஆபரணங்கள் அணிவதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16 ஆம் திகதி நிறைவு பெறும் செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவத்திற்கான ஏற்பாட்டுக் கூட்டம் நேற்று முன்தினம் 25 ஆம் திகதி தொண்டைமானாறு தெற்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் எமது பிரதேசத்திற்குட்பட்ட பல்வேறு திணைக்களங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு பின்வரும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என பிரதேச செயலாளர் ஆர்.ரி. ஜெயசீலன் அறிவித்துள்ளார்.

அவையாவன,

ஆலயத்திற்குவருகைதரும் பக்த அடியார்கள் கலாசார உடையுடனும் ஒழுக்கசீலர்களாகவும் வழிபாட்டில் ஈடுபட வேண்டும்.

மஹோற்சவ காலங்களில் வெளியிடங்களில் இருந்து வரும் திருடர்களின் நடமாட்டம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பக்த அடியார்கள் தங்க ஆபரணங்கள் அணிவதை இயன்றளவு தவிர்க்க வேண்டும்.

இவ்வரும்வலிகாமம் பகுதியில் இருந்து அச்சுவேலிப் பாதை ஊடாக வரும் பக்த அடியார்களுக்கான தனியார் போக்குவரத்துச் சேவைக்கான தரிப்பிடம் பிரதான பாலத்திற்கு அண்மையில் தொண்டைமானாறுப் பகுதியில் அமைக்கப்படும்.

மஹோற்சவ காலத்தை முன்னிட்டு புதிய நபர்களின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டால் உடனடியாக பொலிஸாருக்குஅறிவிக்கப்படவேண்டும்.

மஹோற்சவ காலத்தில் பச்சை குத்துதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச்சூழலில் உள்ள மடங்களில் ஒலிபெருக்கிப் பாவனை தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச்சூழலில் சிகரெட், மதுபானம், புகைத்தல் பொருட்களின் பாவனை, போதை வஸ்துப் பொருட்களின்பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தம் சேவைகளை மேற்கொள்ளும் பொருட்டு பருத்தித்துறை பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், விலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், வல்வெட்டித்துறை நகர சபை என்பவற்றின் உற்சவ காலப் பணிமனைகள்கோயில் வளாகத்தில் இயங்கும்.

மஹோற்சவம் ஆரம்பமான நாள்முதல் தினமும் 30 பொலிஸாரும் இறுதி 4 நாட்களும் மேலதிகமான பொலிஸாரும் கடமையில் ஈடுபடுவார்கள். வீதிக்கடவைகளிலும் பொலிஸார் கடமையில் ஈடுபடுவார்கள்.

கடைகள் வழங்கப்படும் காணிகளுக்குள்ளேயே அமைக்கப்படவேண்டும். வீதியோரங்களில் கடைகள் அமைக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

வீதியோரங்களில் வாகனங்கள் நிறுத்த தடைவிதிக்கப்பட்டுள்ளது. மீறுவோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

குளிரூட்டப்பட்ட ஒரு லீற்றர் சோடாவுக்கு 5 ரூபாவும் ஒரு லீற்றருக்கு மேல் 10 ரூபாவும் அறவிடப்படவேண்டும்.

ஆலயம், மடங்களின்பணிகளின் நிமிர்த்தமாக செல்வோருக்கான பாஸ், கிராம உத்தியோகத்தர், வல்வெட்டித்துறை நகரசபை ஊடாக வழங்கப்படும்என அவர்மேலும் அறிவித்துள்ளார். (இ-7)

# அடையாள அணிவகுப்பில் அடையாளம் காண்பிப்பு

(கொழும்பு)

தன் மீது தாக்குதல் நடத்திய இராணுவ அதிகாரியை ஊடகவியலாளர் உபாலி தென்னக்கோன் அடையாள அணிவகுப்பில் அடையாளம் காட்டியுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி இடம்பெற்ற இந்த தாக்குதல் தொடர்பில் கம்பஹா நீதவான் நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு நேற்று இடம் பெற்றது.

பதில் நீதவான் மஹேஷ் ஹேரத் முன்னிலையில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் உபாலி தென்னக்கோன் மற்றும் அவரின் மனைவி ஆகியோர் சந்தேக நபரை அடையாளம் காட்டினர்.

தன் மீதான தாக்குதல் குறித்த கடந்த காலத்தில் நீதியான விசாரணைகள் இடம்பெறவில்லை என்றும் காலம் கடந்தாவது விசாரணை இடம்பெறுவதை வரவேற்பதாகவும் நீதிமன்ற வளாகத்தில் வைத்து ஊடகவியலாளர்களிடம் உபாலி தென்னக்கோன் கூறியுள்ளார். (செ-11)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ ஆன்மீக வாழ்க்கையில் நான் இன்பமடையவில்லை என்றால் புலனின்ப வாழ்க்கையில் திருப்தியை நாடவேண்டுமா? எனக்கு அமுதம் கிடைக்கவில்லை என்பதற்காக சாக்கடை நீரைக்குடிக்க வேண்டுமா?

❖ இன்பம் மனிதன் முன் தோன்றும்போது, தனது தலைமீது துன்ப முடியைச்சூடி வருகின்றது. இன்பத்தை வரவேற்பவன் துன்பத்தையும் வரவேற்றே ஆகவேண்டும்.

❖ அரசியல் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனால் ஆசைகளுக்கும் சினத்திற்கும் அவன் அடிமையாக இருந்தால் உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை உணரமுடியாது.

❖ தன் விருப்பத்திற்கு உகந்த வேலையாக இருந்தால் எந்த முட்டாளும் அதனைச் செய்து முடிப்பான். ஆனால் எவ்வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவன் எவனோ அவனே அறிவாளி. ஒரு வேலையும் அற்பமானதல்ல.

# இமையாணன் மத்திய வி.கழகத்தின் இறுதியாட்டமும் பரிசளிப்பு விழாவும்

இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்திய 11 நபர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரின் லீக் சுற்றுக்கள் மற்றும் அரையிறுதிகள் தொடர்ச்சியாக மின்னொளியில் நடைபெற்றது.

அதன் இறுதிஆட்டம் இன்று சனிக்கிழமை இரவு 7.30 மணிக்கு மின்னொளியில் தலைவர் சி.வசந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இறுதி ஆட்டத்தில் இரண்டு பலம் வாய்ந்த வடமாகாண சம்பியன் அணிகளான யாழ். நாவாந்துறை சென்.மேரிசை எதிர்த்து வடமராட்சி வதிரி டயமன்ஸ் அணி மோதவுள்ளது. மற்றும் மூன்றாம் இடத்திற்கான போட்டியில் பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. இந் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (க)

# அச்சுவேலி முதல்வன் வெற்றிக்கிண்ணம் 2ம் தடவையாக கோல்ட்ஸ்ரார் சம்பியன்



அச்சுவேலி முதல்வன் கிண்ண கிரிக்கெட் தொடரில் அண்மையில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் நடப்பு சம்பியன் கோல்ட் ஸ்ரார் அணி ரொக்கெட் அணியுடன் மோதியது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கோல்ட்ஸ்ரார் அணி நிர்ணயிக்கப்பட்ட 10 பந்து பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 82 ஓட்டங்களை பெற்றது. இதில் கோல்ட்ஸ்ரார் அணி சார்பாக கஜன் 19, பகி 13, ரெனோ 13 ஓட்டங்களை பெற்றனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ரொக்கெட் அணி கோல்ட்ஸ்ரார் அணியினரின் சிறந்த பந்துவீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 8 இலக்குகளை இழந்து 71 ஓட்டங்களை மாத்திரமே பெற்றனர். ரொக்கெட் அணி சார்பாக சுல்பி 35 ஓட்டங்களை பெற்றார். பந்து வீச்சில் கோல்ட்ஸ்ரார் அணி சார்பாக கஜன் -3, ஹரி -2, ரெனோ -1, மகி -1, பிறேம்-1 ஆகியோர் இலக்குகளை கைப்பற்றினர்.

இறுதியில் கோல்ட்ஸ்ரார் அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ரொக்கெட் அணியை வீழ்த்தி தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக அச்சுவேலியின் முதல்வன் கிண்ணத்தை கைப்பற்றியது.

இறுதிப்போட்டியில் ஆட்ட நாயகனாக கஜன்ராஜ் தெரிவு செய்யப்பட்டார். (க)

# இன்றைய போட்டிகள்

கொடுக்கிளாய் சக்திவேல் விளையாட்டுக் கழகம் வட மாகாண ரீதியாக நடத்தும் உதைபந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் விளைபூமி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து நவிண்டில் கலைமதி விளையாட்டுக் கழகமும் காலை 9.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.செபஸ்ரியன் விளையாட்டுக்கழத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை கருணாகரன் விளையாட்டுக் கழகமும் பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கணேசானந்த விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடை பெறும் போட்டியில் திருநகர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து செம்மலை உதயசூரியன் விளையாட்டுக்கழகமும் மோதவுள்ளது.

♦♦♦

சுவிட்சர்லாந்து, பிரித்தானியா, கனடா ஒன்றியங்கள் இணைந்து நடத்தும் அல்வாய் விளையாட்டு விழாவின் கிரிக்கெட் போட்டி இன்று சனிக்கிழமை மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிக்கு நடைபெறும் முதல் போட்டியில் அல்வாய் கலைமகள் அணியை எதிர்த்து நாவலடி கலைமகள் அணியும் காலை 9 மணிக்கு நடைபெறும் போட்டியில் அல்வாய் தமிழ அணியை எதிர்த்து அல்வாய் இளம்பிறை அணியும் காலை 9.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் சக்கோட்டை சென். சேவியர் அணியை எதிர்த்து மாலு சந்தி மைக்கல் A அணியும் முற்பகல் 10 மணிக்கு நடைபெறும் போட்டியில் அல்வாய் அறிவருள் B அணியை எதிர்த்து அல்வாய் நக்கீரன் அணியும் முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அல்வாய் மனோகரா அணியை எதிர்த்து அல்வாய் அறிவருள் A அணியும் முற்பகல் 11 மணிக்கு நடைபெறும் போட்டியில் அல்வாய் பாரதி அணியை எதிர்த்து அல்வாய் நண்பர்கள் அணியும் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் உதயசூரியன் வெள்ளிரு அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் அணியும் நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் போட்டியில் மாலு சந்தி மைக்கல் B அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதவுள்ளது. (க)

# பிறேம்குமார், துஷிகரன் அசத்தல் அரையிறுதியில் வடமராட்சி லீக்









இதயபூமி அறக்கட்டளை நிதியத்தின் பங்களிப்புடன் வடமராட்சி லீக் நடத்தும் வடக்கு, கிழக்கு தமிழ் மாகாண முதன்மை லீக் அணிகள் பங்குபற்றும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி முதல் காலிறுதி ஆட்டங்கள் நெற்கொழு கழுகுகள் மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றது. கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற போட்டியில் வடமராட்சி லீக்கை எதிர்த்து மட்டக்களப்பு லீக் அணி மோதியது. ஆட்டத்தின் முதல் பாதியில் பிறேம்குமார் 03 கோல்களையும் துஷிகரன் 02 கோல்களையும் போட முதல் பாதியாட்டம் 05.00 என்ற அடிப்படையில் நிறைவுற்றது. இரண்டாவது பாதியாட்டத்தில் மட்டக்களப்பு லீக் அணிக்கு கிடைத்த நேர் உதைப்பை கோலாக மாற்ற மீண்டும் பிறேம்குமாரின் 4 ஆவது கோல் போடப்பட்டது. வடமராட்சி லீக் அணி 06.01 என்ற அடிப்படையில் மட்டக்களப்பு லீக் அணியை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது.

வடமராட்சி லீக் அணி சார்பாக பிறேம்குமார் 4 கோலினையும் துஷிகரன் 2 கோலினையும் போட்டனர்.

மட்டக்களப்பு லீக் அணி சார்பாக காந்தன் ஒரு கோலினை போட்டார்.

போட்டியில் ஆட்டநாயகனாக வடமராட்சி லீக் அணி வீரர் துஷிகரன் தெரிவு செய்யப்பட்டார். (க)

# சுன்னாகம் டாப் லெவன் இறுதிப்போட்டிக்கு தகுதி



மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக்கழகம் நடத்தி வரும் மென்பந்து சுற்று தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டங்கள் அண்மையில் நடைபெற்றன.

இதில் நடைபெற்ற குழு B இற்கான 2 ஆவது அரையிறுதிப்போட்டியில் பலம் பொருந்திய அளவெட்டி மத்தி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து சுன்னாகம் டாப்லெவன் விளையாட்டுக்கழகம் மோதியது.

நாணயசுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்தி வி.க. நிர்ணயிக்கப்பட்ட 6 பந்து பரிமாற்ற முடிவில் 6 இலக்குகளை இழந்து 53 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் டாப் லெவன் வி.க. 5.5 பந்துப்பரிமாற்ற நிறைவில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்ததுடன் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது. சுன்னாகம் டாப் லெவன் வி.க. சார்பில் துடுப்பாட்டத்தில் ஹாட்ரிக் சிக்சர்களுடன் 24 ஓட்டங்களை விளாசிய ஜிந்தா ஆட்ட நாயகனாக தெரிவானார். (க)

# பொலிகை பாரதி விளையாட்டுக்கழக மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்



பொலிகை பாரதி விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 7பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் கடந்த 22 ஆம் திகதி பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியில் ஞான முருகன் B அணியை எதிர்த்து யங்கம்பன்ஸ் அணி மோதியது.

ஆட்டத்தின் முதலாவது பாதியாட்டத்தில் யங்கம்பன்ஸ் அணி 03 கோல்களை போட்டு முதல் பாதியாட்டத்தை 03:00 என்ற அடிப்படையில் வலுவாக இருந்தது. இரண்டாவது பாதியாட்டத்தில் வேகம் கொண்ட ஞானமுருகன் தொடர்ச்சியாக 3 கோல்களை போட்டு ஆட்டத்தை சமப்படுத்தியது. ஆட்ட நேர முடிவில் 03.03 என்ற சமநிலையில் இருந்தது.

வெற்றியை தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைப்பு வழங்கப்பட்டது. சமநிலை தவிர்ப்பிலும் இரு அணிகளும் 06.06 என்ற சம நிலையானதால் வெற்றியை தீர்மானிப்பதற்காக இரு அணித் தலைவர்களின் தீர்மானத்தோடு நாணய சுழற்சி வழங்கப்பட்டது. அதில் யங்கம்பன்ஸ் வெற்றியீட்டியது. (க)

# சமாதானத்துக்கான பேரணி ஆரம்பம்!





(யாழ்ப்பாணம்)

மனித உரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் நாட்டில் சமாதானத்தினையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கான பேரணி நேற்று யாழ்ப்பாணம் நாகவிகாரையிலிருந்து ஆரம்பமானது.

இது குறித்து மனித உரிமை இயக்கத்தின் தலைவர் ஜெயந்த கலபோவல தெரிவிக்கையில்,

இலங்கை தேசத்தில் வாழும் மூவின மக்களும், எல்லா மதத்தவரும், ஒற்றுமையோடும் சமாதானத்தோடும் சம உரிமையோடும் வாழ வேண்டுமெனவும் இலங்கை தேசம் மக்கள் வாழ்வதற்கான சிறந்த நாடாகவும் மனித உரிமைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டிய நாடாகவும் இருக்க வேண்டுமென தெரிவித்தார்.

இந்த சமாதான பேரணி பற்றி மனித உரிமை இயக்கத்தின் தேசிய இணைப்பாளர் சத்திய பாலன் கருத்துரைக்கையில்,

இலங்கை தேசத்தில் வாழும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு சம உரிமை கிடைக்க வேண்டும்.

மூவீன மக்களும் நிம்மதியாக இந்நாட்டில் வாழ வழி ஏற்படல் வேண்டும்.

குறிப்பாக தமிழ் மக்களுக்கு நிரந்தர சமாதானம் அளிக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியே இப்பேரணி நடத்தப்படுவதாகவும் எமது வேண்டுகோளின்படி அரசாங்கம் மக்களுக்கு சரியான தீர்வினை வழங்கும்படி யாழ்ப்பாணத்தில் நல்லூர் கோவிலிருந்து தாம் கேட்டுக்கொள்வதாக தெரிவித்தார்.

இப்பேரணி குறித்து மனித உரிமை இயக்கத்தின் யாழ் மாவட்ட இணைப்பாளர் சிவராசா தெரிவிக்கையில்,

இலங்கை தேசத்தில் யுத்தம் முடிவடைந்த நிலையில் சமாதானம் ஏற்பட்டதாக கூறப்பட்ட போதிலும் இதுவரை எதுவித சமாதானமும் ஏற்படவில்லை.

தமிழ் முஸ்லிம் மக்களுடைய உரிமைகளை அரசாங்கம் பெற்றுக் கொடுக்க வேண்டுமெனவும நாடு முழுவதும் சமாதானம் வேணடியும் இப்பேரணி இடம்பெறுவதாக குறிப்பிட்டார்.

நேற்று யாழ்ப்பாணம் நாக விகாரையில் ஆரம்பித்த இப் பேரணி நல்லூர் கோயில், யாழ் மாவட்டச்செயலகம், கைதடிப் பிள்ளையார் கோயில், சாவகச்சேரி முத்துமாரி அம்மன் கோயில், இராமாவில் கந்தசாமி கோயில், உசன் தேவாலயம், பழைய அம்மன் கோயில், மகாதேவா சுவாமிகள் சைவ சிறுவர்கள் இல்லம் என்பவனவற்றினூடாக நேற்றிரவு கிளிநொச்சியை சென்றடைந்துள்ளது. (செ-11)

## யாழ். வருகிறார்...

பயணத்தை ஆரம்பிப்பார்.

இலங்கை விஜயத்தின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்து கலந்துரையாடவுள்ள அவர், ஐ.நாவின் பூகோள அபிவிருத்தி அடைவுகள் என்ற தொனிப் பொருளில் கொழும்பில் விஷேட உரை ஒன்றையும் நிகழ்த்தவுள்ளார். இலங்கை விஜயத்தின் போது, அமைதியை ஊக்குவித்தல் மற்றும் சமூகங்களிடையே அபிவிருத்தியை ஏற்படுத்தும் விடயத்தில் கவனம் செலுத்துவார்.

தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்குச் செல்லும் ஐ.நா பொதுச்செயலர் பான்கீமூன், அங்கு இடம்பெயர்ந்து மீளக்குடியேற்றப்பட்ட மக்களையும் சந்தித் துக் கலந்துரையாடுவார். அத்துடன், காலியில் நடக்கும் இளைஞர் நல்லிணக்க மாநாட்டிலும் பான் கீ மூன் உரையாற்றவுள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## அமிர்தலிங்கத்தின் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அ.அமிர்தலிங்கத்தின் 89ஆவது பிறந்தநாள் நினைவுப் பேருரை இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (செ-11)

## காணிகள்...

காக பல்வேறு நடவடிக்கைகளை கொண்டு வருகிறேன். அந்த நடவடிக்கையின் பயனாக ஜனாதிபதியின் ஒத்துழைப்புடன் சில நன்மைகளை பெற்றுக் கொடுத்துள்ளேன்.

அந்த வகையில் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு 3 விதமான தீர்வை தெரிவு செய்துள்ளோம். அதில் காணி இல்லாத மக்களுக்கு மாற்று காணிகளை வழங்கும் நடவடிக்கையே இப்போது மேற்கொள்ளப்படுகின்றது.

இதில் அரசாங்கம் காணி மற்றும் வீட்டு திட்டத்தை உங்களுக்கு வழங்குவதற்கான உத்தரவாதமே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மிக விரைவில் காணிகளையும் வீடுகளையும் நீங்கள் பெற்று கொள்ள உள்ளீர்கள்.

மேலும் ஜே.233, ஜே.234, ஜே.235, ஜே.236, ஜே.250, ஜே.247 ஆகிய பகுதிகளில் 2 படை முகாம்கள் அமைந்துள்ள காணிகள் தவிர்ந்த மற்றைய காணிகள் விடுவிக்கப்படவுள்ளன.

மேலும் படையினர் வடக்கில் சிறிது காலம் இருக்கவேண்டியது தவிர்க்க முடியாததாகின்றது.

மற்றும் பாதுகாப்புக் காரணங்களுக்காக வலி.வடக்கில் சில காணிகள் சுவீகரிக்கப்படும். இவ்வாறு படையினர் சுவீகரிக்கும் காணிகளின் உரிமையாளர்களுக்கு மிக பெரிய நட்டஈடு வழங்கப்படவுள்ளது என்றார். (செ-9)

## காணியும் வீடும் வழங்குவதாக...

ஒன்று நேற்றைய தினம் கீரி மலைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீட்டுத்திட்ட வளாகத்தில் நடைபெற்றது.

குறித்த முகாம்களில் வசிக்கும் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள கடிதத்தில் ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய அனைத்து பாகங்களிலும் இடம்பெயர்ந்து வாழும் குடும்பங்களுக்கு நிரந்தர தீர்வினை வழங்குவதற்கான திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அதன் அடிப்படையில் இடம்பெயர்ந்து நல்ன்புரி நிலையங்களில் வசித்து வரும், சொந்த இடங்களில் குடியமர்வதற்கு காணிகள் அற்ற குடும்பங்களுக்கு பொருத்தமான இடங்களில் காணியுடன் வீட்டினையும் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மதிப்பீடு மற்றும் தகவல்களின் அடிப்படையில் சொந்த பிரதேசத்தில் மீளக்குடியமர்வதற்கு தங்களிடம் காணிகள் இல்லை என ஊகிக்க முடிகிறது எனவும் அதன் அடிப்படையில் தங்களுக்கு மிக விரைவில் பொருத்தமான இடத்தில் 2 பரப்பு காணியும் வீடும் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன், யாழ் மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகேஸ் சேனநாயக்க, அரச அதிபர் (காணி) எஸ்முரளிதரன், 51 ஆவது படைப்பிரிவு ஜெனரல் கமாண்டிங் பிரிகேடியர் மேர்வின் பெரேரா, தெல்லிப்பளை பிரதேச செயலர் கே.ஸ்ரீமோகன், இராணுவ உயர் அதிகாரிகள், நலன்புரி நிலையங்களில் வசிக்கும் மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (செ-11)

## அமைச்சர் ரிசாத்திடம்...

அழைக்கப்பட்டிருந்ததாக ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதிகாரத் துஷ்பிரயோகம் மற்றும் பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பிலான விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அழைப்பின் பேரில் நேற்றுக் காலை வர்த்தக மற்றும் வாணிபத்துறை அமைச்சர் ரிசாத் பதியுதீன் முன்னிலையாகியிருந்தார்.

இதற்கமைய சுமார் மூன்று மணி நேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட அவர் பின்னர் வெளியேறிய நிலையில் ஊடகங்களுக்கு கருத்துக்களை தெரிவித்தார்.

இதன் போது தான் குறித்த அமைச்சைப் பொறுப்பேற்க முன்னர் இடம்பெற்றிருந்த சில சம்பவங்கள் தொடர்பில் தனது கருத்துககளை கேட்பதற்காகவே அழைககப்பட்டதாக அமைச்சர் பதியூதீன் தெரிவித்ததுடன் எவ்வாறான சம்பவங்கள் என்பதை தெரிவிக்க மறுத்து விட்டார்.

இதேவேளை கடந்த வாரம் ஆணைக்குழுவின் பொலிஸ் பிரிவில் முன்னிலையாகுமாறு கோரப்பட்டபோதும், மற்றுமொரு திகதியில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பொலிஸ் விசாரணைப்பிரிவில் முன்னிலையாவதாக அமைச்சர் குறிப்பிட்டிருந்த நிலையிலேயே நேற்று அவர் குறித்த ஆணைக் குழுவில் முன்னிலையாகியமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கார் - ஹயஸ்...

ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்தில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் யாழ் வாசிகள் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் 9 பேர் காயமடைந்து சிலாபம் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

கார் ஒன்றும் ஹயஸ் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டமையினால் மேற்படி விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காரில் பயணித்த இருவரே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளவர்கள் எனவும், அதே காரில் பயணித்த மேலும் இருவர் மற்றும் ஹயஸ்வானில் பயணித்த 7 பேருமே காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், குறித்த சம்பவத்தில் யாழ்.அளவெட்டி பகுதியைச் சேர்ந்த லஜிதன் (வயது 24) மற்றும் யாழ். தெல்லிப்பழையைச் சேர்ந்த திருக்குமரன் (வயது 25) ஆகிய இரு இளைஞர்களுமே உயிரிழந்தவர்களாவர்.

இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சிலாபம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-87)

## காணாமல்போனோர் அலு...

இது தொடர்பாக அவர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையில்,

இந்தச் சட்டமூலத்தில் திருத்தங்கள் கொண்டு வரப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்து, அது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டாலும், அதில் எந்தவொரு திருத்தமும கொண்டு வரப்படவில்லை. தெற்கு மற்றும் வடக்கு மக்களின் கோரிக்கைககாக மாத்திரம் இது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை.

மேற்கத்தேய சக்திகளின் பூர்த்திக்காவே, இச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டது.

காணாமல்போன ஆட்களுக்கான அலுவலகத்தை ஸ்தாபிப்பதற்கான சட்டமூலம் தொடர்பான எணணக்கரு, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் ஆணையாளரால் கடந்த வருடம் கொண்டுவரப்பட்டது.

ஜனாதிபதி ஆணைக்குழுவைக் கலைத்து, இந்த அலுவலகத்தை அமைக்குமாறு அவர் பரிந்துரை செய்திருந்தார்.

இறுதியில் இது முழுமையாக வெளிநாட்டவர்களால் கையாளப்படும் அலுவலகமாக மாறும்.

குறித்த அலுவலகத்திலுள்ள வெளிநாட்டவர்களுக்கு, அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் இராணுவ தலைமை காரியாலயம் உள்ளிட்ட சிறைச்சாலைகளுக்குள்ளும் விசாரணைக்காக செல்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

மேலும் மக்களால் வழங்கப்படும் எழுதிய மற்றும் வாய்மூலமான வாக்குமூலங்களை, அவர்களுக்கு ஏற்ற வகையில் எழுதககூடிய வாய்ப்பும் அவர்களுக்கு ஏற்படும்.

நாட்டில் மக்கள் காணாமல் போனமைக்கு, பயங்கரவாதமே காரணமாகும். ஆனால், யுத்த காலத்தின் போது மக்கள் காணாமல் போனமைக்கு அரசாங்கமே காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது என்றும் மனோகர டீ சில்வா தெரிவித்துள்ளார். (செ-11)

## 30 கிலோ கேரள கஞ்சா...

பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்தினர் கடற்படையினரின் உதவியுடன் நடத்திய சுற்றிவளைப்பில் அறுபது இலட்சம் ரூபாய் பெறுமதியான முப்பது கிலோக்கிராம் கேரளக் கஞ்சா கைபற்றப்பட்டதுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மது வரித்திணைக்கள பொறுப்பதிகாரி சமிந்த சிறிமான் தெரிவித்தார்.

நேற்று வெள்ளிக்கிழமை காலை 5.00 மணியளவில் மாமுனை, செண்பியன்பற்றுப் பகுதியில் கஞ்சா கடத்தப்படுவதாக கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் கடற்படையினரின் உதவியுடன் பருத்தித்துறை மதுவரித்திணைக்களத்தினர் அப்பகுதியில் தேடுதல் நடத்தினர் அப்போது சந்தேகத்திற்கு இடமான முறையில்சென்ற மோட்டார் சைக்கிளை மறித்து சோதனை செய்த போது இருபது கிலோக் கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டதுடன் மாமுனை செம்பியன்பற்றைச் சேர்ந்த 39 வயதுடைய நபர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் வீட்டு வளவிற்குள் மிகவும் இரகசியமான முறையில் இருந்த கல்லு குவியலுக்குள் மறைத்து வைத்திருந்த பத்துக் கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டது.

மீட்கப்பட்ட 30 கிலோக்கிராம் கேரளக் கஞ்சாவின் பெறுமதி 60 இலட்சமாகும். கைது செய்யப்பட்ட நபரினையும் கஞ்சா மற்றும் மோட்டார் சைக்கிளினையும் நீதிமன்றில் பாரப்படுத்த உள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (செ-11)

## இணைந்த நேர...

பான விசேட பத்திரிகையாளர் சந்திப்பு நேற்றைய தினம் யாழ் குருநகரில் அமைந்துள்ள வடக்கு மாகாண வீதி அபிவிருத்தி திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மாகாணத்தில் பொதுமக்களுக்கான பாதுகாப்பானதும் தரமானதுமான போக்குவரத்து சேவையை மேற்கொள்ள வேண்டும் என்பதே எமது நோக்கம்.

வட மாகாணத்தின் போக்குவரத்து தொடர்பாக பாரிய பிரச்சினைகள் நீண்டகாலமாக நிலவி வருகிறது. இதை நிவர்த்தி செய்வதற்காக பல்வேறு தரப்பினருடனும் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. அதனடிப்படையில் தற்போது போக்குவரத்து தொடர்பில் ஒழுங்குமுறை நடைமுறைப்படுத்துவதற்காக வடமாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கான நியதிச்சட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

குறிப்பாக வடமாகாண சபை ஆரம்பித்த பின்னர் அதிகார சபை ஊடாக ஒரு நியதிச் சட்டத்தினை உருவாக்கியுள்ளமையும், அதன் ஊடாக பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்கப்போகிறோம் என்பது பெருமைக்குரியதாகவுள்ளது.

கடந்த காலங்களில் வடமாகாண போக்குவரத்தில் உள்ள பிரச்சினைகளில் முக்கியமாக இணைந்த நேர அட்டவணை பின்பற்றப்படாமையால் தனியார் போக்குவரத்து துறையினருக்கும் இலங்கை போக்குவரத்துச் சபையினருக்கும் இடையே பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இவர்கள் இருவரும் பொதுமக்களுக்கான அதிகமான சேவைகளை வழங்கி வருவதால் அவர்களுக்கிடையிலான முரண்பாடுகளை நிவர்த்தி செய்து இணக்கப்பாட்டுக்கு கொண்டுவருவது அவசியமாகிறது. இரு தரப்பினரும் வெளிப்படையாக தமது பிரச்சினைகளை தெரிவித்து இணைந்த நேர அட்டவணைக்கு இரு தரப்பினரும் சம்மதித்துள்ளார்கள்.

அத்துடன் கடந்த ஒருவருடத்தில் இயற்கை மரணத்தால் இறந்தவர்களை விட விபத்துக்களால் இறந்தவர்களின் எண்ணிக்கை தான அதிகமாகவுள்ளது. ஆகவே இதை நிவர்த்தி செய்ய வேண்டும்.

எம்மால் உருவாக்கப்பட்ட நியதிச்சட்டத்தில் பல விடயங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. அத்துடன் அதிகார சபைக்கான ஆளணிகளை உள்வாங்கவிருக்கிறோம். அத்துடன் 11 பேர் கொண்ட சபையை ஆரம்பிக்கவுள்ளோம். இக்குழுவினரே எதிர்காலத்தில் போக்குவரத்து தொடர்பான பல்வேறு பிரச்சினைகளை சீர்செய்யப்போகிறார்கள்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7ஆம் திகதியில் இருந்து வடமாகாண மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து சேவையில் ஈடுபடும் பேருந்துகளுக்கான இணைந்த நேர அட்டவணை அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த அட்டவணையை செயற்படுத்துவதற்கு பல நேரக்கணிப்பாளர்கள் தேவைப்படுகின்றார்கள். எனவே குறிப்பாக ஆளணி உள வாங்கப்படும்வரை அதாவது ஒருமாதகாலத்துக்கு இலங்கைப்போக்குவரத்து சபையின் நேரக்கணிப்பாளார்கள், தனியார் துறையின் நேரக்கணிப்பாளார்கள், தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நேரக்கணிப்பாளர்களுடன் பொலிஸாரும் இணைந்து கடமையில் ஈடுபடவுள்ளார்கள். அதாவது ஐந்து மாவட்டங்களிலும் இனாங்காணப்பட்ட 15 பேருந்து தரிப்பிடங்களிலும் நேரக்கணிப்பாளர்கள் அமர்த்தப்பட்டு பொலிஸாருடன் இவர்கள் அனைவரும் தொடர்ச்சியான கள விஜயம் மேற்கொண்டு போக்குவரத்து சேவைகள் சீர்ப்படுத்தப்படும்.

7 ஆம் திகதிக்கு பின்னர் போக்குவரத்து விதிமுறைகளில் சட்டத்தை மீறும் யாராக இருந்தாலும் நீதிமன்றினூடாக தண்டிக்கப்படுவார்கள். அதாவது 10 ஆயிரம் ரூபாய் தணடப்பணம் அல்லது 6 மாத கால சிறைத்தண்டனை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் ரத்து செய்தல், நீதிபதி விரும்பும் இடத்து இவை அனைத்தையும் சேர்த்து தண்டம் விதிப்பதற்கும் சந்தர்ப்பம் உள்ளது. எனவே சாரதிகள், நடத்துநர்கள் மிகவும் அவதானமாக செயற்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் எமது மாகாண போக்குவரத்து சேவையை பார்த்து ஏனைய மாவட்டங்களும் இதை செயற்படுத்த வேண்டும் என்பதே எமது விருப்பம். சில விடயங்கள் நடைமுறைக்கு வரும் போது மக்கள் அதன் நன்மையை அறிந்து கொள்ளவார்கள் என அமைச்சர் டெனீஸ்வரன் அவர் மேலும் தெரிவித்தார்.(செ-9)

## நீர்க்காகம்...

யினர் பங்கேற்கவுள்ளதாக படைத்தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இந்த கூட்டுப் பயிற்சியில் இலங்கையை சேர்ந்த 3 ஆயிரத்து 458 படையினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுடன் பங்களாதேஷ, சீனா, இந்தியா, ஜப்பான், மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 49 வெளிநாட்டுப் படையினர் பங்கேற்பாளர்களாகவும், பார்வையாளர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## 8 பொலிஸாரையும்...

21ஆம் திகதி புத்தகப்பைகளை அன்பளிப்புச் செய்தோம். அவ்வேளை அங்கு வந்த சுன்னாகம் பொலிஸார், மாவீரர் தினத்தை முன்னிட்டு இதனை வழங்குகின்றீர்களா எனக் கேட்டனர். அதற்கு நாம் இல்லை, வறிய மாணவர்கள் கல்வியைத் தொடர்வதற்காக உதவுகின்றோம் என்றோம். அதன் பின்னர் பொலிஸார் அங்கிருந்து சென்றனர்.

தொடர்ந்து, அன்றைய தினம் இரவு எங்கள் ஐந்து பேரை சுன்னாகம் பொலிஸார் கைது செய்தனர். ஏன் எங்களைக் கைது செய்தீர்கள்? எனக் கேட்டபோது, திருட்டுக்குற்றச்சாட்டு என்று கூறினர். சுன்னாகம் பொலிஸ் நிலையத்தினுள் சித்திரவதை செய்வதற்கென பிரத்தியேக அறை ஒன்று உள்ளது. அந்த அறைக்குள் எம்மை அழைத்து சென்றனர். அங்கு ஊரெழு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவப் புலனாய்வுத் துறையினர், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மூன்று தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சிங்கள பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர், எம்மீது சித்திரவதைகளைப் புரியத் தொடங்கினர்.

எம்மீது மின் சாரத்தை பாய்ச்சினார்கள் கால் பாதங்களில் ஆணிகளை அடித்தார்கள் கைப் பெருவிரலில் குழாய் ஒன்றினை நுழைத்து, அந்த குழாயை மேலே தூக்கிக் கட்டினார்கள். அதன்போது எமது முழு உடல் பாரமும் விரலிலேயே தூங்கியது. மேசைக்கு குறுக்கே கை, கால்களை இழுத்துக் கட்டி தாக்கினார்கள். இவ்வாறு மிக மோசமான சித்திரவதைகளை சுன்னாகம் பொலிஸார், எம்மீது மேற்கொண்டனர். இதன் போது எமது நண்பனான சுமன் என்பவரை இரண்டு மேசைகளுக்கு இடையில் கட்டி வைத்து உனக்குத் தனி நாடு வேணுமா என கேட்டுத் தாக்கினார்கள். பெர்லிஸாரின் மூர்க்கத்தனமான தாக்குதலால் நண்பனின் வாய் மற்றும் மூக்கில் இரத்தம் சொட்டி நண்பன் உயிரிழந்து விட்டான். அதனை அடுத்து எம்மை அந்த அறையில் இருந்து பொலிஸார் அப்புறப்படுத்தி விட்டனர்.

பின்னர், உயிரிழந்த எமது நண்பனின் உடலை கிளிநொச்சி, இரணைமடு குளத்தினுள் வீசியுள்ளனர். பின்னர் நண்பன் குளத்தில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டதாக மரணச்சான்றிதழ் கொடுத்து, பொலிஸார் அதனைத் தற்கொலையாக மாற்றிவிட்டனர் என தமது வாக்கு மூலத்தில் கூறியிருந்தனர். இந்த கொலை சம்பவம் தொடர்பான வழக்கு நேற்றைய தினம் மல்லாகம் நீதவான் நதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சார்பாக மன்றில் முன்னிலையாகியிருந்த பிரதான பொலிஸ் பரிசோதகர் சட்டமா அதிபரால் தமக்கு கிடைக்கப்பட்டிருந்த அறிவுறுத்தலை மன்றில் முன்வைத்திருந்தார்.

இதன்பிரகாரம் குறித்த விடயம் தொடர்பில் குற்றம் சாட்டப்பட்ட எண்மரையும் கைது செய்து அவர்களுக்கு எதிராக யாழ்.மேல் நீதிமன்றிலும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றிலும் வழக்கு தொடுப்பதற்கு குற்றப்புலனாய்வு திணைக்கள பணிப்பாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மன்றில் தெரிவித்தார். குறிப்பாக எண்மரில் ஐவருக்கு எதிராக கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் கொலை குற்றச்சாட்டு தொடர்பான வழக்கும் தாக்கல் செய்யவும் மற்றும் மூவருக்கு எதிராக சித்திரவதை குற்றச்சாட்டு தொடர்பில் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவும் சட்ட மா அதிபர் திணைக்களம் உத்தரவிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து இவ்வழக்கு விசாரணையை எதிர்வரும் 9ஆம் திகதிக்கு ஒத்திவைக்க மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது. (செ-4)

## கைதி மாயம்...

காணாமல் போயுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

இந்த சம்பவத்தையடுத்து கடமையிலிருந்த சிறைச்சாலை அதிகாரி பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வேலாயுதன் சிவஞானஜோதி குறிப்பிட்டார்.

தென்மராட்சியைச் சேர்ந்த இராசையா ஆனந்தராஜா எனும் 37 வயதானவரே கடந்த 24ஆம் திகதி இரவிலிருந்து காணாமல் போயுள்ளார்.

முன்னதாக அவர் கடந்த 2006ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 31ஆம் திகதி கைது செய்யப்பட்டு, பின்னர் 2012ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் திகதி விடுதலை செய்யப்பட்டிருந்தார்.

அதன்பின்னர், மீண்டும் 2012 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24ஆம் திகதி கைது செய்யப்பட்டு அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

ஆனந்தராஜா சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த போது, கடந்த ஜூன் 5 ஆம திகதி தனது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதன் பின்னர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதை அடுத்து, குறித்த கைதியை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்குமாறு சிறைச்சாலை மறுசீரமைப்பு, மீள்குடியேற்ற, புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதனையடுத்து, கடந்த 14 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் சிறைச்சாலை அதிகாரிகளால் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு அனுமதிக்கப்பட்ட குறித்த கைதிக்கு, தொடர்ச்சியாக சிகிச்சை அளிக்கப்பட்டதுடன் சிறைச்சாலை அதிகாரிகளால் பாதுகாப்பும் வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த கைதி காணாமல் போயுள்ளதையடுத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (செ-11)

Raveens EMC
Karaveddy

மேற்படி நிறுவனத்திற்குரிய Grade 11 மாணவர்கள் பங்குபெறும்

IMPROMPTU ORATORY (ENGLISH)
AND
PRIZE GIVING DAY

முன் ஆயத்தமில்லாப் பேச்சும் (ஆங்கிலம்)
பரிசளிப்பு விழாவும்

குறிப்பு: சபையோர் ஆங்கிலத்தில் வழங்கும் விடயத் தலைப்புக்களுக்கே மாணவர்கள் பேசுவார்கள்.

இடம் : வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபம்.
காலம் : 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி
தலைவர் : ப. ஈஸ்வரநாதன் -நிர்வாகி, ரவீன்ஸ் EMC, கரவெட்டி

Chief Guest
Prof. S. Srisatkunarajah
Professor in Mathematics
Dept. of Mathematics & Statistics, Faculty of Science
University of Jaffna.

Distribution of Prizes
Mrs. Sivarani Srisatkunarajah
Head, Department of Linguistics & English, Faculty of Arts
University of Jaffna.

ஆர்வலர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
ரவீன்ஸ் கல்விச் சமூகம்
(சி-5556)

எடிசன் பட்டப்படிப்புகள் கல்லூரி

கிளிநொச்சி கல்விப் பணிமனை முன்பாக

சமுர்த்தி அலுவலர்/கிராம அலுவலர் போட்டிப் பரீட்சைக்கான வகுப்புக்கள் 28.08.2016 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு ஆரம்பமாகிறது.

ஆசிரியர்:-தவசேகர்
நிர்வாகத்தினர்.
தொடர்பு:-0775483470
(சி-5555)

SPOKEN ENGLISH WITH GRAMMAR

ஆங்கிலம் (basic) அடிப்படையில் இருந்து உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பித்துக் கொடுக்கப்படும்.
School book, O/L & A/L
0773561484
(5738)

Win Repair
A/C களும்,
சகலவிதமான குளிர்சாதனப் பெட்டிகளும்
உங்கள் வீடுகளுக்கு வந்து திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்பு - 077 9648942
(5739)

உடனடி வேலை வாய்ப்பு
V2 TRAVELS
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
உதவி முகாமையாளர் (Assistant Manager)
கொடுப்பனவு -25,000/= வயது எல்லை - 20-30 வரை
எதிர்பார்ப்புக்கள் - A/L , ஆட்டோ வான் லைசன்ஸ் அவசியம்
வடமராட்சியை சேர்ந்தவர்கள் விரும்பத்தக்கது
யாழ்ப்பாணம் - கிளிநொச்சி - நெல்லியடி
வல்வெட்டித்துறை 0768226243

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

பதவி வெற்றிடம்
சிட்டை எழுதுநர் -ஆண்/பெண்
விற்பனைப் பிரதிநிதிகள்-ஆண்/பெண்
புத்தக மற்றும் ஸ்ரேசனறி வியாபாரத்தில் முன்னனுபவம் உள்ளவர்கள் மு.ப 9.00 மணிமுதல் 4.30 மணிவரை நேரில் சமுகம் தரவும்.
■ கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
"ALL CEYLON DISTRIBUTORS"
"ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்"
இல.212, 214, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல்:-acdil@ymail.com
(சி-5557)

V2 TRAVELS
குறைந்த விலையில் சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்.
• வெளிநாட்டிலிருந்து வருவோருக்கான இலங்கை விசா நீடிப்பு.
• வெளிநாட்டு விசா (UK, கனடா, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ்) விண்ணப்ப படிவம் (Online form) நிரப்புதல்.
• இந்தியா, தாய்லாந்து, மலேசியா விசாக்கள்.
தொடர்புகளுக்கு: 0768226240
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி
• நெல்லியடி • வல்வெட்டித்துறை
(C-5552)

ஆங்கில வகுப்பு
தரம் 02, 03, 04, 05, 06, 07, 08, 09, 10 ஆம் O/L, A/L மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொழில் புரிபவர்களுக்குமான English Spoken with Grammar வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு : 0767070069
M.Suren
(5710)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.